தென்காசி,

# "முஸல்மான்"

# கோஷ்டியார்களின்

முரணான கொள்கைகட்கு

# முக்கிய மறுப்பு.

இரண்டாம் வெளியீடு.

---

பேட்டை,
மகுதூம் ஜஹானியார் அவர்கள் பள்ளிவாசல் சந்நதி
கல்கட்டுத்தெரு,
ம. கா. நா. முகம்மது ஷம்சுத்தீன் மக்கி சாஹிப்
எழுதியது.

---

ஹிஜ்ரி 1347-௵ ரம்லான்௴
1929-௵ மார்ச்சு௴

பிஸ்மில்லாஹிர்

# முன்னுரை.

"தென்காசி முஸல்மான்" ஆசிரியர் எம் சுன்னத்வல்ஜமா அத்துக்கு மாற்றமாக மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப் படாதென்றும்; கபறுகளை ஸியாரத்துச் செய்யப்படாதென்றும்; ஔலியாக்களிடம் வஸீலாத்தேடப்படாதென்றும் இன்னும்இது போன்ற அனேக வஹ்ஹாபிக்கொள்கைகளை சாதாரண மக்களி டை பரப்பி வேற்றுமைகளை விளைவித்து வருவதைக்கண்ட உயர் தர உத்தம உலமாக்களில் ஒரு சிலர் தெரிந்து அக்கொடிய கொ ள்கைகள் மதவிரோதமானதென்றும்; வழிகெட்ட வஹ்ஹாபி களின் கொள்கை யென்றும்; எம் சுன்னத்வல் ஜமாஅத்து முஸ் லீம்கள் அக்கொள்கைகளை அநுசரிக்கவோ ஆதரிக்கவோ கூடா தென்றும் மார்க்கோபதேசஞ்செய்ததைக் கேள்விப்பட்டு அம் மேதாவிகளை மூர்க்கத்தனமாகத்தமது வேதாளங்களின் விலாசத் தில் வேத சிந்தனையின்றி விரோத நிந்தனையான ஏசல்மாலைகளாக வெழுதச்செய்து தூஷணமே பூஷணமாகக்கொண்ட முழு ஆபா சக் களஞ்சியமாகிய "முஸல்மானில்" நூலில்லாது மாலை கோர்க் கும் வாறுபோல அறவே ஆதாரமற்ற தமது மௌட்டியக்கொள் கைகளை மறைத்து இஸ்லாமியப்பிரசாரத்துக்கு இடையூறுசெய்வ தாய் ஆபாசப்படுதூறு வசைமொழிகளால் சரமாரியாகவெழுதி சதா நிந்திப்பதே தமது ஜன்மத்தொழிலாகக்கொண்டு தூற்றிவந் தது சகலருமறிந்ததே.

பெரியோர்களை நிந்திப்பதே வந்தனையாகவும் பழித்தெழு துவதே பரம நோக்கமாகவுங்கொண்டு முழு நிந்தனைப்பிரசுரங்க ளால் முஸல்மான் சஞ்சிகை நிரப்பப்பட்டு வெறுக்கக்கூடிய விஷ யங்களையே விளம்பரப்படுத்தி வந்ததைக்கண்டு தென்காசி, "மு ஸல்மான்" கோஷ்டியார்களின் முரணானகொள்கைகட்கு முக்கிய மறுப்பு என்னுமொரு நூலை இயற்றி வெளியிட்டேன். அதைக் கண்ட முஸல்மான் ஆசிரியர் இதுவரை தமது அருவருக்கத்தக்க அபத்த மொழிகளுக்கஞ்சி ஒருவரும் ஒன்றுங்கூறாதிருக்க இடை,

யே இன்னூல் வெளியானதும் ஆப்புப்பிடுங்கிய அனுமான்போல எய்க்குந்தொழிலுக்கு இடையூறு நேர்ந்ததென்று தமது இழி குணங்களை ஒளியாது பழிமொழிகளால் அதி ஆபாச நீசத்தன மாக ஆராய்ச்சி என்றும்; அறிக்கை யென்றுமெழுதி வெளியிட்டி ருக்கிறார்.

அறவே மரியாதை கற்பிக்கப்படாத அசடுநிறைந்த அக்கிர மப் பேர்வழிகளுக்கு புத்தி போதிப்பதென்றால் அவரவர்களின் அயோக்கியத்தனமான வார்த்தைகளைப்போன்ற பதங்களையே பிரதியுத்தரமாக பிரயோகித்து அறிவுறுத்தலவசியமாதலின் மு ஸல்மான் ஆசிரியரின் ஆராய்ச்சி, அறிக்கை முதலியவைகளுக்கு மறுப்பாக வரையப்படும் இன்னூலில் காணும் பதங்களெல்லாம் பதிலுக்குப் பதிலென்றே கொள்க.

இப்புத்தகத்தை ஆதிமுதல் அந்தம்வரை சாந்தமாயும் சமாதானமாயும் வாசிப்பவர்களொவ்வொருவரும். தென்காசி, 'முஸல்மான்'' கோஷ்டியினர்களின் அந்தர் அடிப்புகளை அறிந்து முழுதும் வழிகெட்ட வஹ்ஹாபிகளென்பதை யாதோர்ஒழிமறை வின்றி தெளிவாய்த்தெரிந்து கொள்ளலாம். சுன்னத்வல் ஜமா அத்து எம் முஸ்லீம் சகோதரர்கள் வஹ்ஹாபிப் பத்திரிகையை வாங்கி வாசிப்பதாலும் அக்கொடியோர்களை சகவாசங்கொள்வ தாலும் ஏற்படும் பாதகங்களுக்காகப் பயந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டியது ஒவ்வொருவர் பேரிலும் கடமை ஏனெனில்.

சுன்னத்வல் ஜமாஅத்துக்கு ஏற்றவுமாற்றமான வஹ்ஹா பிகளுக்கு ஆதரவளிப்பதும் அநுசாணையாயிருப்பதும் அன்னா ரின் பத்திரிகைகளைப் படிப்பதும் பரிசுத்த இஸ்லாத்துக்கே பரம துரோகஞ்செய்வது போவாகுமென்பது எல்லோர்களுமறிந்ததே ஆகையால் உண்மை முஸ்லீம்கள் ஒவ்வொருவரும் இவ்வித மத துரோகிகளுக்கு ஆதரவளிக்க மறுப்பதுபோல அவர்களின் வஹ் ஹாபி பத்திரிகையை வாங்கி வாசிக்காமலும் உதவி புரியாமலும் இனியேனும் திரஸ்கரித்துவிட்டு தீரமாய்சுன்னத்வல்ஜமாஅத்தின் கொள்கைகளையே ஆதரிப்பது அவசியமென்பதைஅறிவீர்களாக.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

இரண்டாவது வெளியீடு.

தென்காசி,

# "முஸல்மான்" ஆசிரியர் அந்தகார ஆராய்ச்சியின்

# வீழ்ச்சி விளக்கம்.

"(மனிதர்களுக்குத்) தப்பானதைத்தடுத்துச்சரியானதை விதிக்கவும் (அவர்களை) நன்மையான வழியில் அழைக்கவும் உங்களுள் ஒருவர்க்கத்தார் அவசியம் இருக்கக்கடவர் இவர்கள் தாம் ஜயமுடையவராவார்கள்"- (குர்ஆன்)

நாளது ஹிஜிரி 1347ம்வூ ரபீயுல்லவ்வல்மீ வெளியான தென்காசி, "முஸல்மான்" சஞ்சிகையில், "முக்கியமறுப்பின்ஆராய்ச்சி" என்னுந்தலைப்பின்கீழ் வெளியானவியாசத்தைக்கண்ணுற்றேன். "முக்கிய மறுப்பின் ஆராய்ச்சி" என்று மகுடமிட்டு எழுதியிருப்பதில், முக்கிய மறுப்பு, என்பதற்கு முன் "முஸல்மான் கோஷ்டியார்களின் முரணான கொள்கைகட்கு" என யான் குறித்துள்ளதைக் குறிப்பிடாததுபோலவே முஸல்மான் கோஷ்டியாரின் முரணான கொள்கை என்று எமதுமறுப்பில் விவரித்துள்ளவை யாவும், நியாயமானதாயிருப்பது பற்றியே, அதில் ஒன்றையேனும் நியாயாதாரத்துடன் மறுத்துக்கூறாமல்; மயங்கி முக்கிய மறுப்பில் கூறப்படுகிற முஸல்மான் கோஷ்டியாரின் முரணான கொள்கைகள்; எதைப்பற்றியும் எடுத்துக்காட்டி ஆராய்ச்சி எழுதாமல் முஸல்மான் ஆசிரியரின் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் அசடுகளை அப்படியே வாந்தி எடுத்து, அதிலெழுந்துர்க்கந்தம் நிறைந்த அருவருப்பான, ஆபாச அதிநீசமொழிகளால், தூற்றுவதையே, முக்கிய மறுப்பின் ஆராய்ச்சி என்று எழுதிக்காணுகிறது.

கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் தெரிந்துவிடும், என்பதுபோல் தென்காசி "முஸல்மான்" ஆசிரியர் ஆராய்ச்சி வெளியிட்டதில் தம்முடையவும், தமது கோஷ்டியாருடையவும் தவறுகளைத் தட்டித்தடுமாறி ஒருவாறு ஒப்புக்கொண்டும்; எமது மறுப்பில் எல்லாம். குர்ஆன்ஷரீப் ஆயத்துகளாலும், ஹதீதுஷரீப் வாக்கியங்களாலும் ஆதாரவுகாட்டி நிரூபிக்கப்பட்டிருப்பது பற்றி அதைக்கண்டதும்; ஒழுங்கான முறையில் ஒன்றுங்கூறஇயலாது, ஆராய்ச்சி என்பதற்கு, அருகதையற்ற ஆபாச வசை மொழிகளால், சித்த சுத்தி யற்று, புத்தி சுவாதீனமில்லாதவன் புலம்புவதுபோல் வெறுங்குலைத்தலாகவேஉளரத்துணிந்து, அறியாமையால் ஆராய்ச்சி என்று; எழுதியிருப்பதால் அதன் வண்டவாளம் ஒவ்வொரு முஸ்லிம்களும் அவசியமறிந்து மதவிஷயத்தில், மாறுபடக்கூறும் முனுபிக்களுடைய, மாயவலையினுள், சாதாரணஜனங்கள்; சிக்குண்டு, ஏமாற்றப்படாமல் தற்காத்துக்கொள்ளவும்; ஆராய்ச்சி எழுதிய அறிவிலியின் தன்மையான வார்த்தைகளால், அறிவுறுத்தவுமே இதை எழுதத்துணிந்தேன்.

"அல்லாஹுத்தஆலாவின் நேர்வழி இருக்க அதைவிட்டுவிட்டுத் தன்னிஷ்டம்போல் நடப்பவனைக் காணவழி கெட்டவன் யார்"—

(குர்ஆன்)

என்னும் பரிசுத்த வேதவாக்கியத்துக்கு மாறாக. தம்மிஷ்டம்போல் கூறித்திரிகின்றனர்.

"மேலும் மனிதர்களிற் சிலர் அல்லா(ஹ்)வின்மீதும் இறுதித்தீர்ப்பு நாளின்மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டோமென்று நாவினல் நவில்வார்கள் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களல்லர்"—

(குர்ஆன்)

என அல்லாஹுத்தஆலா அருளியிருப்பதால் எமதுமுஸ்லிம் சகோதரர்காள்! நீங்கள் ஒவ்வொருவரும் இதைச்சற்று. பொறுமையுடன் வாசித்து உண்மையை யுணர்ந்து. மதவிஷயத்தில் மாறுபட்ட கொள்கைகளைப் பரப்புவதற்கென்றே நடத்தப்படும் மாயாவாதப்பத்திரிகைகளை வாங்கி வாசிப்பதை வெறுத்து ஈமான் சலாமத்தாக. இனிது வாழ்வீர்களென்று. ஆதாவு வைக்கின்றேன் ஏனெனில்.

"யாருவது முகங்குப்புர அடித்து விழும்படியான சீர்கெட்டபாதையில் நடக்கின்றவன்நேர்வழி பெறுவானு? சரியான

பாதையில் ஒழுங்காக நடக்கின்றவன் நேர் வழி பெறுவானு?"-
(குர்ஆன்)

என்று அல்லாஹுத்தஆலா அருளியிருப்பதைசிந்தித்து நீனவர்களெல்லோர்களும் தெரிந்து ஒதுங்கிக்கொள்வீர்களாக.

முக்கிய மறுப்பின் ஆராய்ச்சி முதலாவது பாராவில்:
"முஸல்மான் கோஷ்டியாரின் முரணுன கொள்கைகட்கு முக்கிய மறுப்பு- என்னும் ஓர் நூல் எம் பார்வைக் கெட்டியது. பேட்டை மதரஸாவின் தலைமை ஆசிரியர் ஜனுப் மௌலவி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்கள் சிறிது காலத்திற்கு முன் முஸல்மான் வகுப்பாருக்கோர் மறுப்பு வரைவதாகக்கூறிப்போந்ததற்கிணங்க அவர்களே இயற்றியிருக்கின்ருர்களாவெனப்பார்க்குங்கால் பேட்டை ஜனுப் ம. கா. நா. முஹம்மது ஷம்சுத்தீன்மக்கீ ஸாஹிப் என்போரால்இயற்றப்பட்டதாகஅறிந்தோம். ஜனுப் மௌல்வி ஷரபுத்தீன் ஸாஹிப்அவர்கள் தங்கள் நோக்கத்தை மாற்றிக்கொண்டுவிட்டதை யறிந்து சந்தோஷிக்கிருேம்" எனக்கூறப்படுகிறது.

முஸல்மான்கோஷ்டியார்களின் முரணுனகொள்கைகட்கு முக்கியமறுப்பின் முன்னும் பின்னும் எம்மாலியற்றப்பெற்றதென்பதை வெகுதெளிவாக அச்சிடப்பட்டிருந்தும் அவர்கள் அடைந்திருக்கும் பிரட்சியால்-அவர்கள் அறிந்துகொள்ளாமலிருக்கும்படி அவர்களுடைய "ஹிருதயங்களில் நாம் திரைகளைப்போட்டிருக்கிருேம்" என்று அல்லாஹுத்தஆலா அருளியிருப்பதுபோல் திரை ஏற்பட்டநிமித்தமே- முஸல்மான்கோஷ்டியார்களின் முரணுனகொள்கைகட்கு முக்கிய மறுப்பு என்பதைக் கண்டதும், யாரால் இயற்றப்பெற்றதென்பதைப் பார்ப்பதற்குள் திடுக்கமுற்றுத் தமக்குள் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் குருேதம் நிறைந்த விரோத குணத்தினுலன்றே; மௌலானு மௌலவி செய்யது முஹம்மதுஷரபுத்தீன்ஸாஹிப் அவர்களியற்றியிருக்கின்ருர்களா வென்ற குறுகிய புத்திதோன்றிக்குளம்பித்தெளிவுசநேர்ந்தது நெஞ்சகத்தில் வஞ்சகமில்லையாயின். இவ்வளவு பேதலிப்பு ஏற்படக் காரணமில்லையே சாந்தமாக யாரால் இயற்றப்பெற்றதென்பதை சற்று பொறுமையுடன் வாசித்துணரலாகாதா?

"அவர்களுடைய ஹிருதயங்களிலும் அவர்களுடைய கே

ள்வியின்மீதும். அல்லா (ஹ்) முத்திரையிட்டிருக்கிறான், இன்னும் அவர்களுடைய பார்வையின்மீது மூடியுண்டாயிருக்கின்றன; மேலும் அவர்களுக்குப் பெரியதண்டனை இருக்கின்றன"- (குர்ஆன்)

என அல்லாஹுத்தஆலா அருளியிருப்பதேபோன்று அவர்களின் ஹிருதயங்களின்மீதும், கேள்வியின்மீதும் முத்திரையையும், பார்வையின்மீதுதிரையையும் அல்லாஹுத்தஆலாபோட்டிருப்பது கொண்டே மறுப்பு புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு ஏதேதெல்லாமோ எண்ணவேண்டியதாயிற்று. இவர்களுக்கு அல்லாஹுத்தஆலா பெரியதண்டனை இருக்கின்றன-எனவும் கூறுகின்றான். ஏனெனில்-

## உருதுக்கவி

நதல்கீனே ஹிதாயத் இஸ்கிஷாவாகேபனே தாபிவு
குதாக்கே ஹாத்ஹை இன் கும்றஹோங்காராஹ்பர்லானு

(இதன்பொருள்) பார்வையைமறைக்கும்படியான திரைபோடப்பட்டவனுக்கு, நேர்வழி சித்தியாகமாட்டாது இந்தவழிகெட்டவர்களை நேர் வழியின் பேரில் கொண்டு வருவது அல்லா(ஹ்)வின்கையிலிருக்கிறது. (எ—று)

"எவனொருவன் மார்க்கத்திற்குச் சரியாக மனிதருக்கிடையில் அழகான ஸிபாரிஷு க ஸிபாரிஷ் செய்வானாகில் அவனுக்கு அவன் செய்த ஸிபாரிஷின் கூலியில் நின்றும் ஒரு பேருண்டும் இனிஎவனொருவன் மார்க்கத்திற்கு விரோதமாககெட்ட ஸிபாரிஷ் செய்வானாகில் அவனுக்கு அந்த ஸிபாரிஷின் காரணத்தால் குற்றத்திலொரு பங்குண்டு. இறைவன் சகலவஸ்துவின் மீதிலும்தத்துவமுடையவனாயிருக்கின்றான்"— (குர்ஆன்)

"வானலோகத்திலும்பூலோகத்திலுமுள்ளமறைவானவிஷயங்களை இறைவனைத்தவிர ஒருவருமறியார் என்று நபியே! நீர் சொல்வீராக"- (குர்ஆன்)

என அல்லாஹுத்தஆலா அருளியிருந்தும் இந்தவேதவாக்கியத்துக்கு மாறாக. ஜனாப் மௌலானா மௌலவி செய்யது முஹம்மது ஷரபுத்தின் ஸாஹிப் அவர்கள் தங்கள் நோக்கத்தை மாற்றிக்கொண்டுவிட்டதையறிந்து சந்தோஷிக்கிறோம் எனக்கூறு

வதிலிருந்து அவர்களின் நோக்கம்யாது? அதை மாற்றிக்கொண்டு விட்டதா யிவர் எவ்வாறு அறிந்தார் என்பது தெரியவில்லை ஒருக்கால் மிர்ஸாகுலாம் அஹ்மது காதியானி. தமக்கு வஹீ, இல்ஹாம் மூலமாக அறிவிக்கப் பட்டதாகக் கூறியது போல் "முஸல்மான்" ஆசிரியருக்கும் ஏதேனும் இல்ஹாம், வஹீ மூலமாக வெளியாயிற்றோ அல்லது இப்லீசால் அறிவிக்கப் பட்டிருக்கின்றதோ யாதோ அறிகிலோம். ஆனால்

"அல்லா(ஹ்) வின் காரியஸ்தர்களே! ஷைத்தானின் காரியஸ்தர்களை வெட்டுங்கள் உங்களுக்கு அல்லா(ஹ்) வினிடம் பலமிருப்பதால் அவர்களைவென்றுகொள்வீர்கள் (ஏனெனில்) திட்டமாகஷைத்தானின் வஞ்சகமானது பலஹீனமாயிருக்கின்றன"- (குர்ஆன்)

என்று அல்லாஹுத்தஆலா அருளி இருக்கின்றான்.

மதவிஷயத்தில் மாறுபட்ட அபிப்பிராய பேதங்காட்டிய தென்காசி, "முஸல்மான்" ஆசிரியரையும் அவரின் சகாக்களையும் எமதுமறுப்பில் முஸல்மான் கோஷ்டியார்எனக்குறித்தோம் ஆனால் முஸல்மான் ஆசிரியரோ "முஸல்மான் வகுப்பார்" எனக்கூறுவதிலிருந்து இவ்வித ஒருவகுப்பார்இப்போதுபுதிதாகத்தயாரிக்கப்படுகின்றனரென்றே எண்ணவேண்டியதாகிறது ஏனெனில் நாமெல்லோர்களும் முஸ்லிம்களென்று கூறுகையில் நம்மிடை புதிதாய் "முஸல்மான்வகுப்பார்" என்றும்"முஸல்மான கோஷ்டியார்" என்றும் கூறிக்கொண்டு சிலர் தோன்றுவதென்றால் இத்தகையோரை ஒருபுதுக் கொள்கைக்காரர்கள்எனக் கொள்ள. திருப்பதெங்ஙனம் இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜதி என்பவரைப் பின்பற்றுபவர்கள். வஹ்ஹாபி என்றும் மிர்ஸாகுலாம் அஹ்மது காதியானி என்போரைப்பின்பற்றுகிறவர்கள்காதியானி என்றும், அழைக்கப் படுகையில் "முஸல்மான் வகுப்பார்" "முஸல்மான் கோஷ்டியார்" எனக் கூறுவதிலிருந்து தென்காசி,"முஸல்மான்" ஆசிரியரைப்பின்பற்றுகிறவர்களையே"முஸல்மான்வகுப்பார்" எனக்கூறுகின்றனரெனபது வெளிப்படை. உருதுக்கவி.

ந மௌலானூஸேவாக்கிப் அவுர் ந ஜானுவஷ்பேமௌலானு

ஜூஹுனே குத்ஸத்தாயீ மேபடா பக்தாஹே தீவானு

(இ-ள்) தலைமை இன்னதென்றறியாமலும் இன்னும், தலைவரின் நிலைமையையுணராமலும் தன்னைப்பெரிதாக மதிக்கும் பைத்தியக் காரத்தனத்திலாழ்ந்து கத்துகிறவன் பைத்தியக்காரன் (எ-று)

ஆராச்சியின் 2-வதுபாராவில்:- "பிரஸ்தாப இம்மறுப்பு வரைய முன்வந்த ஆசிரியருக்கும் எமக்கும் இதுகாறும் எவ்வித விகற்பமுமில்லை. முன்னொருமுறை ஜனாப் ஹாஜி மௌலவி சி. கா. ஷெய்கு இப்றுஹீம் ஸாஹிப் அவர்கள் சமூகம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது நமது முஸல்மானுக்காக கொழும்பில் சந்தாச் சேர்த்தனுப்ப முயர்ச்சிக்கிறேனென இவ்வாசிரியர் கூறி யிருக்கிறார். இவ்வாறன அபிமானி தற்போதுமல்லூனாகிய ஷைத் தானின் மாயவலையிற்சிக்குண்டுமதப்பிரசாரத்தை தடைபுரியவும், இல்லாததையும் பொல்லாததையும் பொதுஜனங்களிடை பரப்பி நன்னம்பிக்கையை சிதறப்பண்ணவும் முனைந்திருப்பதை யறிந்து பெரிதும்விசனிக்கின்றோம.இவர் ஷைத்தானின்மருட்டுதலுக்குட் பட்டுவிட்டதால் இஸ்லாமியப்பிரசாரத்திற்கு பெருந்தீங்கிழைத்து விட்டாரென்பதில் சந்தேகமில்லை. எனவும் காணப் படுகிறது.

"முஸல்,மான" ஆசிரியருக்கும், எமக்கும் எவ்வித விரோ தமும், குரோதமுங்கிடையாது. இருப்பதாக எமது மறுப்பில் கூறப்படவுமில்லை.ஆனால் மதவிஷயத்தில் காட்டிய மாறானகொள் கையைக்கண்டித்தேமறுப்பு எழுதியுள்ளேன் "முஸல்மான்" ஆசி ரியர் சென்ற விடமெல்லாம் தமது சஞ்சிகைக்குச்சந்தாச் சேர்ப்ப தும் சேர்த்துக்கொடுக்கும்படிவேண்டுவதும் வளமையாயிருப்பது போல் எம்மிடமுங்கேட்டதற்கு முயற்சிக்கிறேன் எனக்கூறினால் அவரின்மதவிரோதமானகாரியங்களைக்கண்டிக்கலாகாதா? மார்க்க விஷயத்தில் விகற்பமில்லையாயின் மறுப்பெழுதவேண்டிய அவசி யந்தானென்னை? உலக விஷயத்தில் விகற்பமில்லாதது பற்றி. மறுப்பு எழுதியது தவறாயின் இவ்வாறு கூறுவது மார்க்கமறியா மூர்க்கர்களின் கொள்கை யேயன்றி வேறென்ன வென்று கூறு வது. ஒருக்கால் அவர்கற்றதாய்க் கூறும் தர்க்கமுறை இவ்வாறு இருத்தலுங்கூடும்

'முஸல்மான்' ஆசிரியர். கொழும்பில் சந்தா முதலியன சேர்த்துத்தரவேண்டு மென வேண்டிக்கொண்டதற்கு. முயர்ச்சிக் கிறேன் என்று யான் கூறியதால்

வெண்பா

நல்ல தென்றல் போது மொரு நாளைக்குப்பத்துதரம்
வல்ல கடன்காரரைப்போல் வந்தே—அல்லலுற்றுப்
பல்லைக்காட்டிக் கெஞ்சிப்பரதவிப்பார் கையிலிப்போ
இல்லை என்றாலும் போகாரெழுந்து

என்பதற்கொப்ப முஸல்மான் ஆசிரியர் அடிக்கடி என் வீட்டிற்குவந்து எப்பொழுது கொழும்புக்கு பிரயாணிக்கிறீர்கள் எனக்கு கம்பளை முஸ்லிம்களிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது காதியானி மதயெதிர்ப் பிரசாரம் செய்வதற்காகப் போவதால் வேண்டும் உதவியும்ஒத்தாசையும்செய்து தந்து கொழும்பில்சந்தா தார்களையும் சேர்த்துத்தரவேண்டுமெனச் சொல்லித்திரிந்ததும் ஜனாப் மௌலவி சி. கா. ஹாஜி செய்குஇப்றாஹீம் ராவுத்தரவர்களிடம் சிபாரிஷ் செய்துஎன்னிடம் சொல்லும்படியாக அவர்களை வேண்டிக்கொண்டதும் எத்தனையோவதலி எம் வீட்டிற்குவந்திருந்து எம்மிடம்ஆலோசனை கேட்டது மான விஷயங்கள் ஞாபகமில்லாது மறந்துபோனதென்ன?

ஆராய்ச்சியின் 3வது பாராவில்:-"எமது மறுப்பின் 4, 5, 10, 12, 13, 14, 15, 18, 21, 22, 25, 26, 29, 30.முதலியபக்கங்களில் குர்ஆன் ஷரீப்,மௌலிது, பாத்திஹா, கத்தம்முதலியன முஸல்மான் வகுப்பார் ஓதக்கூடாதெனத் தடைபுரிவதாகவும் இன்னும் பலமாற்றமானவிஷயங்களும் காணக்கிடக்கின்றன எனவும் வேறுபலவும் காணப்படுகிறது"

ஆராச்சி செய்த ஆசிரியரவர்களே எமதுமறுப்பில் தாங்கள் குறித்தபக்கங்களைத் தவிர 1, 2, 3, 6, 7, 8, 9, 11, 16, 17, 19, 20, 23, 24, 27, 28, 31, 32,33 நம்பர்கள்போடப்பட்ட பல பக்கங்கள் அமைந்திருக்கின்றனவே அவைகளைப் பற்றித் தாங்கள்ஒன்றுங் கூறாதிருப்பதைக்காண அவையனைத்தும் தங்களின் ஆக்ஷேபனைக்குரிய தல்லை என்பது இனிமறுக்கமுடியா விஷயமே ஆதலின் தங்களால் அங்கிகரிக்கப்பெற்ற பக்கங்களில் 8வது பக்கத்தையேனும் திருப்பிப்பார்ப்பீர்களாயின்மௌலீது, குர்ஆன்ஷரீப், கத்தம், பாத்திஹா, ஓதப்படாதென்று கூறுவோர்களை வஹ்ஹாபி என்று சொல்லப்படுகிற தென்று

தங்கள் முஸல்மான் சஞ்சிகையில் வெளியானதை அப்படியே கண்டு எழுதி இருப்பதைக்காண்பீர்கள் அதன்றி பிரதானமான விஷயங்களை விட்டுவிட்டு பிரலாபிப்பதில் பயன்பாது.

அரபிக்கவி

"லன்னஸ்ஹு என்பவு ஷின்ஸீ றன் லி ஷிக்வதிஹி
பல்கானயக்ருஜு அன்யுவுதிய தவில்இபறி
யுமஸ்விகுல்கிர்து வக்ரன் லிஸ் ஸபாரியதி
இதாலஹு கஸஹத் பீ வாபிலில் மதரி"

(இ-ள்) வானர மழைதனிற் நனையற்றாக்கணூர் தாளெணூறெறி சொலத் தாண்டிப்பியத்திடும் வாறுபோல கெட்டகுணமுடையவனுக்கு நல்லுப தேசம் கலங்கொடாது உபதேசம் செய்பவர்களை உபத்திரவிக்கத் துணிந்து வெளிப்படுவான். (எ-று)

என்பது போல தென்காசி, முஸல்மான் சஞ்சிகையில் வெளியானவைகளை கண்டெழுதி ஆதாரங்காட்டி மறுப்பு எழுதியதை மறுக்க முடியாமல் மனதில் தோன்றுகிறபடியெல்லாம் வஞ்சகமாக ஆராய்ச்சி யெழுதி தொந்தரவிப்பது அறிவீனமே.

ஆராய்ச்சியின் 4வது பாராவில்:- "ஏ! வஞ்சக நெஞ்சம்ப டைத்த ஆசிரியரே முஸல்மான் கோஷ்டியார்மீது. அருவருக் கத்தக்க பொய்களையும் பாரப்பழி மொழிகளையும் சுமத்தி இப்லீஸின் வயப்பட்டு விட்டதை நன்குஸ்தாபித்து விட்டீர் கள். அல்லாவுக்கும் அவனது திருத்தூதருக்கும் சிறிதளவேனும் அச்சப்பட்டிருந்தால் இஸ்லாமியப்பிரசாரகர் மீது அளவற்ற கட் டுரைகளைச்சமைக்க முன்வரமாட்டீர்கள் இஸ்லாத்திற்குமுரணான விரோதச் செயல் களிருக்கிறதாவென ஆராய்ச்சி செய்யாமல் மறுப்பு எழுதமுன்வந்தது இப்லீசாகியமல்வூனுக்கு முழுதும் வய ப்பட்டு விட்டீர்களென்பதை தெற்றென விளக்குகிறது." எனக் காணப்படுகிறது.

"(முனாபிக்குகள்) இவர்கள் இருதயங்களில் (சந்தேகம், முறண்ப டப்பேசும்) வியாதியுண்டாயிருக்கின்றது. ஆதலின் அவர்களின்வியாதியை அல்லா(ஹ்) அதிகப்படுத்தினான் மேலும் அவர்கள் (மெய்யைப்) பொய்யா க்கினதால் அவர்களுக்கு வேதனையுடைய தண்டனை யுண்டு"- (குர்ஆன்)

எனப்பரிசுத்த திருவேதம். அறிவுறுத்தியும் முஸல்மான் ஆசிரியர்

ஏிந்து மறுப்பை,ஆராய்ச்சி செய்ததில் அன்னாரின். சஞ்சிகையில் வெளி யான தவரான கொள்கையை. ஈண்டெழுதி இருப்பதற்கு மறுப்புக்கூறாது மௌனம் பூண்டு வஞ்சகமாயெழுதமுன்வந்தது. வேதவாக்கியத்தில்கண்ட படி அவர் ஹிருதயத்தில் (சந்தேகம், முறண்படப்பேசும்) வியாதி இருப் பதுபற்றியேயன்றோ? இன்றேல் இவ்வாறு எழுத வேண்டியதில்லையே.

ஏ! அபத்த முறைக்கும் ஆசிரியரே. தங்கள் சஞ்சிகையில் வெளியானதை அப்படியே ஈண்டெழுதி யிருந்தும் அதை மறுக்க வழியற்று பொய்யென்றும் பாரப்பழிமொழி என்றும் எவ்வாறு கூறத்துணிந்தீர்கள். புத்தி சுவாதீனமில்லாது இவ்வாறு கூறத் துணிந்தீர்களா? அல்லது தாங்கள் கற்றதாய்க் கூறும் தர்க்க முறையில் இவ்வாறு கூறவேணு மென்று தங்களுக்கு கற்பிக்கப் பட்டதா?

முஸல்மான் கோஷ்டியாரின் முரணான கொள்கைகட்கு முக்கிய மறுப்பு யானெழுதுங்கால் அல்லா(ஹ்)வுக்கும் அவனின் அருமைத் திருத் தூதர் அவர்களுக்கும் பயந்தே முஸல்மான் கோஷ்டியாரின் தவறை பரிசுத்தத் திருக்குர்ஆன் வாக்கியத்தைக் கொண்டும் ஹதீது ஷரீபைக் கொண்டும் கண்டித்துள்ளேன் அல் லா(ஹ்)வினுடையவும் அவனின் திருத் தூதரினுடையவும் திரு வாக்கியங்களால் தவரான். கொள்கையென்று தெரிந்த பின் னும் அதை விட்டும் தவிர்ந்து தௌபாச் செய்து. உண்மை முஸ் லீம்களாகத்திகளாமல்முஸல்மான்வகுப்பார், எனவும் முஸல்மான் கோஷ்டியார் எனவும் கூறித்திரிவதின் கூற்றுத்தானென்னே?

"நாம் உமக்கும், உமக்கு முன்னுள்ளநபிமார்களெல்லோர் களுக்கும் ஜின் ஷைத்தான்களையும், மனித ஷைத்தான்களையும் பகைவர்களாக்கினோம் அவர்களிற் சிலர் சிலரிடத்தில் ஏமாற்ற மான பகட்டு வார்த்தைகளைச் சொல்லி மனப்பிரட்சியை யுண்டு பண்ணுவார்கள்."- (குர்ஆன்)

என வேதம் விளம்புவதற்கொப்ப. தங்கள் சஞ்சிகையில் வெளியான தவரான கொள்கையை விட்டு விட்டு. ஏமாற்றமான. பகட்டு வார்த்தைகளாகிய, அளவற்ற கட்டுரைகளைச் சமைக்க முன் வரமாட்டீர்கள் எனச் சொல்லிப் பிரட்சியை யுண்டு பண்ணு

வதேன் இவ்வாறு கூறுவது, மனித ஷைத்தானின் வேலை யல்லவா?

"மனிதர்களுடைய ஹிருதயங்களிலே தீங்கை விளைவிக்கும், கன்னாஸ் என்னும் மனித ஷைத்தான்"- (குர்ஆன்)

இந்த வேத வாக்கியத்தின்படி. மனிதர்களுடைய ஹிருதயங்களிலே தீங்கை விளைவிக்கும் ஷைத்தான்களில் கன்னாஸ் என்னும் மனித ஷைத்தானும் ஒருவன் என வெளியாகிறதல்லவா ஆனது பற்றியே.

எண்சீர் விருத்தம்

உலகிற் ஜின் ஷைத்தானை விடவெனக்கு
ஒப்பாத மனித ஷைத்தான் றீங்கே மெத்த
கலகஞ்செய் ஜின் ஷைத்தான் கெடுதி நீங்க
ஹக்கனிடங்கேட்கவது கழிந்தே போச்சு
நலமணுகா மனித ஷைத்தான் பஹிரங்கம்மாய்
கசலான பாவத்தின் வழியே யீர்த்து
இலகுவாகச் செல்கின்றனென மாலிக்கு
இப்னு தீனாவரு மியம்பினரே.

ஆகையால் மனிதர்களுடைய. மனங்களிலே. பிரட்சினையையுண்டு பண்ணி தீங்கை விளைவிப்பது. முஸல்மான் சஞ்சிகையாயிருப்பது கொண்டு, அதன் ஆசிரியரை. கன்னாஸ் என்னும் ஷைத்தான் என்று கூறுவது தவராகாதே?

ஏ! கன்னாஸ் ஷைத்தானே, எமது மறுப்பில் முஸல்மான் கோஷ்டியினரை மல்ஊனாகிய இப்லீசின் வயப்பட்டவர்களென்று. எதுவும் கூறாதிருக்க. தன் வினை தன்னைச் சூழும் என்பது போல் முஸல்மான் ஆசிரியராகிய தாங்கள், முஸல்மான் கோஷ்டியினர் இப்லீசின் வயப்பட்டு விட்டதை நன்கு ஸ்தாபித்து விட்டீர்கள் என்பதைக்காண அல்லா(ஹ்)வின் ஒரு ஆக்கினைக்கு கீழ்படியாது பிடிவாதங்காட்டியதால் இப்லீஸ் லஃனத்துச் செய்யப் பட்டானெனின்; எமது மறுப்பில் அல்லா(ஹ்)வினுடையவும் அவனின் திருத்தூதரினுடையவும் திரு வாக்கியங்கள் அதிகமாய் காணப்

படுவது பற்றி. அதற்கு ஆராய்ச்சி யெழுதிய தாங்கள் அவைகளை வெறுத்து. தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று சாதிப்பது போல் சாதிக்கத் துணிந்து மார்க்க விஷயத்தில் மூர்க் கத்தனமான கொள்கையினருகிய தாங்கள் தங்களைத் தாங்களே இப்லீசின் வயப்பட்டு விட்டதை நன்கு ஸ்தாபித்து விட்டீர் களென்று கூறுவதில் குறை கூறுவதற்கில்லை ஏனெனில் அல் லா(ஹ்)வினுடையவும். அவனின் திருத்தூதரினுடையவும்கட்டளை களைக் கடப்பவர்கள் இப்லீசின் வயப்படாமல் கடப்ப தெங்ஙனம் அவ்வாறு. மீறுவது கொண்டே. முஸல்மான் ஆசிரியர் தங்களைத் தாங்களே இப்லீசின் வயப்பட்டு விட்டதை நன்கு ஸ்தாபித்து விட்டீர்களென்று கூறுவதால்,

உருதுக்கவி

பஷர் சூரத் ஹைஹன் அவுர் காவுன் வீரத் ஹைஹன் ஏ பஹ்ருபீ
மிஸாலே ஹிர்பா உன்கூ யாத்ஹே றன்கோன்கா பத்லாஹ

(இ—ள்) வேஷக்காரனைப்போல் ரூபத்தில் மனிதனாகவும் நடபடிக்கையில் காவுன் என்னும் ஷைத்தானைப் போலுமுள்ளவ னுக்கு உவமையாகிறது பச்சோந்தியைப் போல் நிறமாகிறதென் பது அவர்களுக்கு ஞாபகமிருக்கும். (எ—று)

ஆகையால். அவர்கள் இப்லீசின் வயப்பட்டு விட்டன ரென்பதற்கு நாமெதுவும் வேறு ஆதரவு கூறவேண்டியதில்லையே

பார்ஸிக்கவி

ஜஹாலத்தே கேஷ் குத்ரா வாகிபே அஹ்றகாமேதின் கோயத்
குஜா ஹர்கூனே நாகிஸ் முஷ்கே ஆஸா அயேகவி பூயத்

(இ—ள்) தன்னிடத்தில் மடமைக்குணத்தை வைத்துக் கொண்டு மார்க்கத்துடைய நேர் வழியை அறிந்தவனென்று சொல்லுகின்ற ஷைத்தானே ஒவ்வொரு கெட்ட உதிரமும் கஸ் தூரியைப்போல் எவ்வாறு பரிமளிக்கும். (எ—று)

எனவே. இப்லீசின் வயப்பட்டு விட்டதாய் ஒப்புக்கொள் ளும் முஸல்மான். ஆசிரியரையும் அவர் கோஷ்டியினரையும். லஃ னத்துச் செய்யப் பட்ட மல்ஊனுகிய இப்லீசின் கொள்கையின ரென்று கூறுவதில் தவறேதுமில்லையே.

ஓ! லஃனத்துச் செய்யப்பட்ட மல்ஊனுகிய இப்லீசின் கொள்கையினரே, தாங்கள் இப்லீசின் வயப்பட்டு விட்டதை நான் நன்கு ஸ்தாபித்து விட்டதாகக் கூறிக் கொண்டு. இஸ்லாமியப் பிரசாரகர் எனக் கூறுவதின் குரும்புத் தனந்தானென்னே, இப்லீசின் வயப்பட்டு விட்டவர்களின் பிரசாரம், இஸ்லாமியப் பிரசாரமா? அல்லது இப்லீசின் பிரசாரமா? என்பதை எம் முஸ்லீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டார்களென்று தானே இவ்வாறெல்லாம் எழுதத்துணிந்தீர்கள்.

ஒன்றுந் தெரியாத ஏழை முஸ்லீம் சகோதரர்களை "கடபடாம்" என்று தடபுடல் செய்து மிரட்டி முதலைக் கண்ணீருடன் முன்வந்து நீலிக்கண்ணீர் வடித்து இஸ்லாம் மதப்பிரசாரம் எனக் கூறி பொது மக்களை முற்றும் ஏமாற்றிக் கபட தந்திரமாக வஹ்ஹாபி மதக்கொள்கைகளைப் போதித்து மதத்தின் பெயரால் ஹம்பக் செய்து வருபவர்களைக் கண்டு, விலக்குபவர்களை வீராவேசங்கொண்டு வசை மொழிகளால் விரோதமும் குரோதமும் காட்டி. பொய்க்கட்டுரைகளை சிருஷ்டி செய்து அறவே மரியாதை யில்லாது காலிகளைப்போல் கயத்தனமாக வியாசங்கள் எழுதி தூஷணமே பூஷணமாகக்கொண்ட தங்கள் முஸல்மான் சஞ்சிகையில் போதித்து வரும் இவ்வுண்மையை இதுவரை அறிந்திராத எம் முஸ்லீம்களெல்லோரும் இப்பொழுது நன்கறிந்து விட்டனர் ஆனால்,

ஆரபிக்கவி

"வ நாகிசுல் இல்மி நத்கன் கான யுக்திருஹு
வ அன்ஹு யஸ்குது மன்பீ இல்மி ஹிகமுலா
வஸ்ஸௌத்து விஸ்ஷிப்ரி லா வித்திப்ரி இத்னுக்ரா
பஸ்வீப்ரு பிஸ் ஸௌத்தி லாயவு ஹுஹு இத்கமுலா"

(இ—ள்) வெங்கலத்தினோசை வெகுவாய் முழங்கும் பொன் கலத்தினோசை பொருள் என்பது போல் கல்வியில் குறைந்தவன் அதிகமாகப் பேசுவான் கல்வியில் பூரணமானவன் மௌனமாயிருப்பான்.

என்பது உலகமே ஒப்பத்தகுந்த விஷயம் ஆனதுபற்றியோ

முஸல்மான் ஆசிரியரின் ஆராய்ச்சியையும், அறிக்கையையும், நிந்தனைப் பிரசுரங்களையும் கண்டு வெத்துத்தோட்டா ஆசாமியாகயிருப்பதுபற்றியே இவ்வளவு முறுமுறுத்து விருவிருப்பாக எழுதுகின்றனர் நிறை குடமாயிருந்தால் இவ்வாறு அலம்பாது குறை குடமாயிருப்பது கொண்டே இவ்வளவு அலம்ப ஏதுவாயிற்று. மட வாதத்துக்கு மருந்தில்லை யாதலால் எமது மறுப்பு நூலை வாசித்துணர்ந்தோராயினும், கன்னாஸ் என்னும் மனித ஷைத்தானின் மாய வலையினுள் இனிச்சிக்க மாட்டார்களென்றெண்ணிப் பொறுமையாயிருந்தேன் ஏனெனில்,

ஆங்கிலக்கவி.

Small curs are not regarded when they grin,
But great men tremble when the lion roars. —*Shakespeare*.

(இ—ள்) சிறிய நாய்கள் உறுமும் பொழுது அதை எவரும் லக்ஷியம் செய்வதில்லை. ஆனால் சிங்கம் கர்ஜிக்கும் பொழுது மகான்களும் நடுங்குகின்றனர் (ஷேக்ஸ்பியர்)

என்பதற்கிணங்க அலட்சியமாயிருந்து வந்தேன் ஆராய்ச்சிக்கும், அறிக்கைக்கும் பதிலெழுதுவதெனின் ஆராய்ச்சியிலும், அறிக்கையிலும் பொருண்மையைப் பூஷணமாகக் கொண்டு ஆபாசமான வார்த்தைகளாலேயே அலங்கோலஞ் செய்து மரியாதை இன்னதென்றறியாத இனி இல்லா இழி குணத்தோரால் முற்ற முற்றப் போக்கிரித்தனமாக அருவருப்பான ஆபாச அவதூறுகளாகவே நிரப்பப் பட்டிருப்பதால் அதற்குப் பதில் எழுதுவதென்றால் ஆராய்ச்சி, அறிக்கைகளில் காணும் கடுஞ் பதங்களைப் போன்று பதிலுக்குப் பதில் எழுதி அறிவுறுத்தவேண்டி வரும் அது நமக்குத்தகுதியில்லை என்று விலகியிருந்தேன் முஸல்மான் ஆசிரியரின் அட்டகாசங்களைக் கண்ட உண்மை முஸ்லீம்களிற் சிலர் தங்கள் ஊரில் முஸல்மான் ஆசிரியர் ஒற்றுமையாக வாழ்ந்து வந்த முஸ்லீம்களை வேற்றுமையாக்கி சுன்னத்வல்ஜமா அத்துக்கு மாற்றமான கொள்கைகளைப் போதித்து கக்ஷிப்பிரதி கக்ஷியாகப் பிரித்துப் பிளவையும், பித்னாவையும் விளைவித்து நல்லோர்களை நிந்தித்துவரும் உண்மையை உள்ளது உள்ளபடி துண்டுப் பிரசுரங்

களாக வெளியிட்டு வருகின்றனர் அவைகளை இதன்மற்றோர் பகுதியில் வெளியிட்டுள்ளேன்.

நாளது 1928-ம்வூ டிசம்மர் மீ வெளியான முஸல்மான் சஞ்சிகை 142-வது பக்கத்தில் மக்கிஸாஹிபின் மௌனம் என்னும் தலைப்பின் கீழ் எழுதியிருப்பதில் நான் ஆராய்ச்சிக்கு மறுப்புக்கூறவில்லை என்று குறைகூறி மத விஷயத்தில் தமது மாறுபட்ட கொள்கையை ஸ்தாபிப்பதற்குரிய வஞ்சகமா யெழுதிக் காணுகிறது.

ஆங்கிலக் கவி.

A little fire is quickly trodden out,
Which, being suffer'd rivers cannot quench. —*Shakespeare*

(இ—ள்) சிறிய நெருப்பு வெகு சீக்கிரம் அவிக்கப்பட்டுவிடக்கூடும்; அதை அங்ஙனமே விட்டு விட்டாலோ பெரிய ஆறுகளும் அணைக்க முடியாது போய்விடும். (ஷேக்ஸ்பியர்.)

ஆகையால் இன்னாலும் எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது சும்மாயிருப்பதற்கும் விடாமல் என்னை இன்னாலையும் எழுதும்படியாகத் தூண்டிய இப்லீஸ் முஸல்மான் ஆசிரியரே என்பதை எல்லோர்களும் அறிவீர்களாக.

விருத்தம்.

வெதமும் வேதப்பொருளும் விளக்கிய மெய் நபியின்
போதமுமறியாப் புல்லர் வாய்ப்பறை போடுவது
பேதமும் பிசகும் நிறைகுறை நெஞ்சம் பெற்றபின்னும்
வாதத்திற்காக வழைத்தல் வண்டத்தனமன்றி யுண்டோ.

இஸ்லாமிய கலாஞானங்களைக் கற்காத போலிப் பேர்வழிகள் எவ்வளவு கூச்சலிட்டபோதிலும் அவையனைத்தும் அவர்கள் காலியாயிருப்பதையே குறிக்கும் ஆதலால் இப்லீசின் வயப்பட்டுவிட்டவர்களின் பிரசாரம் இஸ்லாத்திற்கு ஏற்றவும் மாற்றமானதென்பதை எல்லோர்களுமறிவர்.

ஏ! லயீனாகிய இப்லீசின் வயப்பட்டவரே, தாங்கள் இப்லீசின் வயப்பட்டுவிட்டதைத் தவிர்க்கவே மறுப்பெழுதிய

யானும் எவ்வாறு இப்லீசின் வயப்படுவேனென்பதை சிறிதளவேனும் சிந்தித்துப் பார்ப்பதற்கு அறிவற்றுப் போனதென்ன.

ஏ! மல்ஊனாகிய இப்லீசின் வயப்பட்டவரே, இதுகாறும் இஸ்லாமியப் பிரசாரஞ்செய்வதாய்ச் சொல்லி பொதுமக்களை ஏமாற்றி நன்கொடை சந்தா வசூலித்து சட்டமாய் வயிறுவளர்த்து காலங் கடத்தியதுபோலினியும் ஏமாற்றிக்காலங் கடத்தலாமென் றெண்ணுகிறீர்களோ, அந்தோ அறியாமையே இனித் தாங்கள் தௌபாச்செய்து இவ்வித விஷயங்களில் தலை யிடுவதில்லை என்று தங்கள் 'சஞ்சிகையில் பகிரங்கமாய் வெளியிடும்வரை உண்மை முஸ்லிம்கள் ஒருவரும் தங்களையும், தங்கள் சஞ்சிகையையும், ஆதரிக்க முன்வரார்கள் ஏனெனில்?

"மேலும் அவர்கள் வழிகேட்டில் கெட்டலையும்படி அவர்களை விட்டுவிடுகிறான் இவர்கள் தாம் சன்மார்க்கத்துக்குப் பதிலாகத் துன்மார்க்கத்தை வாங்கியவர்களாயிருக்கிறார்கள் ஆகையால் அவர்கள் வர்த்தகம் ஆதாயத்தையளிக்கமாட்டாது மேலும் அவர்கள் நேர்வழி பெற்றவர்களா யிருக்கவுமில்லை."— (குர்ஆன்)

என்னும் பரிசுத்த வேதவாக்கியத்தை எல்லா முஸ்லீம்களும் அறிவார்கள்.

ஆராய்ச்சியின் 5-வது பாராவில்:- "ஏ! ஆசிரியரே முஸல்மான் அஹ்லஹதீஸ் பத்திரிகையிலிருந்து மொழிபெயர்ப்பதை முன்னிட்டு வஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்புவதாயின் தங்கள் மறுப்பு புத்தகம் 27-ம் பக்கத்தில்,

"கல்லாவொருவன் குலநலம் பேசுதல், நெல்லினுட் பிறந்த பதராகும்மே'"

என்ற ஹிந்துக்கவியை நகல்செய்த தங்களை ஹிந்துவென்றும் ஹிந்துமதக் கொள்கையைப் பரப்புகிறவரென்றும் கூறின் சம்மதிப்பீரோ, பொது மக்கள் தங்களை ஹிந்துவென கூறின் என்ன பதிலளிப்பீர்கள்" எனக்கூறப்படுகிறது.

வஹ்ஹாபி மௌலவியால் நடத்தப்பெறும் அஹ்லஹதீஸ் என்னும் பத்திரிகை வஹ்ஹாபி பத்திரிகை என்பதும் அதை முஸல்மானில் மொழிபெயர்த்தச்சிடப்படுகிறதென்பதும், முஸல்

மான் ஆசிரியரே ஒப்புக்கொண்டு மேலேகண்ட விதமாக எழுதிய திலிருந்து யாம் கூறியதின் உண்மை நன்கு வெளியாகிவிட்டது இதுவிஷயமாயினிப் பொதுமக்களிடை எவ்வித சந்தேகமும் ஏற்படுவதற்கில்லாது முஸ்லிமான் ஆசிரியரே ஒப்புக்கொண்டு விட்டதால், யாமும் வேறுசான்று காட்டவேண்டியதுமில்லையே.

ஒவ்வொரு பிரிவாரும் தங்கள் திங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்கென்று தங்கள் தங்கள் பத்திரிகைக்ள் மூலமாகப்பிரசாரஞ் செய்துவருவதுபோல் வஹ்ஹாபிகளின் கொள்கைகளைப் பரப்புவதற்கென்று வஹ்ஹாபி மௌலவி ஒருவரால் நடத்தப்படும் அஹ்லஹதீஸ் என்னும் உருது பத்திரிகையைமுஸல்மான் மொழிபெயர்த்தச்சிடுவதாக எமது மறுப்பில்கூறியுள்ளோமேயன்றி அப் பத்திரிகையின் பாஷையைப்பற்றி யாமொன்றுங் குறைகூறவில்லை என்பது மறுப்பை வாசித்தோர் மறுக்க முடியாத விஷயம்.

காதியானிகளும், அஹ்மதியாக்களும் தங்கள், தங்கள் கொள்கைகளைப் பரப்புவதறகென்றே பத்திரிகைகள் நடத்தப்படுவதாக ஓலமிட்ட முஸல்மான் ஆசிரியர் தாம் மொழிபெயர்க்கும் வஹ்ஹாபிப்பத்திரிகை அவ்வாறுஇல்லையென்றுகூற முன்வருவாரா சுன்னத்வல்ஜமா அத்துக்கு மாற்றமான கொள்கையினராகிய வஹ்ஹாபிகளின் பத்திரிகையை மொழிபெயர்த்து முஸல்மான் வெளியிடுவதென்றால் சுன்னத்வல்ஜமா அத்தின்கொள்கைக்கு முரணாக எதுவும் எழுதவில்லை எனக்கூறுவது முனாபிக்தனமல்லவா? மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்போரின் கொள்கையாது?

ஏ! முனாபிக்தனம் படைத்த முஸல்மான் ஆசிரியரே, நீவிர் சுயமே வியாசம் எழுத ஆற்றல்படையாத அறிவிலியாயிருப்பதுகொண்டு உருதுப்பத்திரிகைகளை மொழிபெயர்த்தச்சிடுவது உலகமறிந்ததேயாயினும் அவ்வாறு மொழிபெயர்ப்பதற்கு வேறு எத்தனையோ சுன்னத்வல் ஜமாஅத் பத்திரிகைகளிலிருந்தும் வஹ்ஹாபிப்பத்திரிகையை மொழிபெயர்த்தச்சிடும் நீவிர் வஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்புவதற்கல்லவென்றுகூசாது கூறமுன்வந்தது முனாபிக்தனமன்றி வேறென்னவென்று கூறுவது. (2)

ஏ! அறிவற்ற ஆசிரியரே. "கல்லாவொருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே" என்னும்தமிழ்கவியை எம்மறுப்பில் கூறியதால் எம்மை ஹிந்துவென்றும், ஹிந்துமதக் கொள்கையைப்பரப் புகிறவரென்றும் கூறின் விவேகசூன்யராகிய நீவிர் நுமது "முஸல்மான்" சஞ்சிகையை எப்பாஷையில் பிரசுரிக்கின்றீர் அது யாருடைய பாஷை நும்மை என்னென்று கூறுவது நீவிர் கூறியதேபோல் நும்மை ஹிந்துவென்றழைப்பதா அல்லது ஹிந்து மதக்கொள்கைகளைப் பரப்புகிறவரென்றழைப்பதா. இவ்விரண்டில் எது தங்களுக்கு ஏற்றவும் பிரீதி என்பதை தெரிவிப்பீர்களா?

ஏ! மதிகெட்டஆசிரியரே நும்மைப்போல். மதிகெட்டமானவர்கள் மானிலத்திலிருந்தாலன்றோ அவ்விதமான பொதுமக்கள் என்னை ஹிந்துவெனக்கூறலாமென எதிர்பார்த்து பதிலழிக்கலாம் எனவே நீவிர் இவ்வாறெல்லாமெழுதியது நுமது சுயஅறிவோடு எழுதினீரா? அல்லது கேள்விப்பேச்சால் கேவலபுத்திகொண்டு தானிவ்வாறு எழுதினீரா யானையானது தனதுமதம்பிடித்த மடத்தனத்தால் தன்முதுகிலேயே மண்ணை அள்ளிப்போட்டுக்கொள்வதுபோல் நீவிர்நுமது மடத்தனத்தால் கூறிய இக்கூற்றைக்கண்டவர்கள் தங்களை ஆனைமடையராகிய ஆசிரியர் என்றுதானே அழைப்பார்கள்இதற்காகத்தாங்கள். வருந்துவதுதகுதியா கபோத கருத்துடைய தாங்கள் இவ்வாறு பல்லக்குக் கொம்புபோல உவமானங்கூற வெளிவந்து விட்டீர்கள் இந்த இருபதாவது நூற்றூண்டிலும். இத்தகைய உலக்கைக்கொழுந்துகள். தங்களைப்பத்திராதிபர் எனக்கூறிக்கொள்வது வெட்கக்கேடல்லவா.

ஏ! ஆனைமடையராகிய ஆசிரியரே! வஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்புவதற்கு முஸல்மான் துணியவில்லையாயின் வஹ்ஹாபிகளின் அஹ்லஹதீஸ் என்னும் பத்திரிகையை மொழிபெயர்த்து அச்சிடவேண்டிய அவசியமென்ன காப்பி அடிப்பதற்கு உருதுபாஷையில் சுன்னத்வல்ஜமாஅத் பத்திரிகைகளில்லையா? அவைகளிலிருந்து மொழிபெயர்த்து முஸல்மான் பக்கங்களை நிரப்பி ஆசிரியர் பதவியை யடைதல் கூடாதா?

ஏ! மூடமதி படைத்த முஸல்மான் ஆசிரியரே! முஸ்ல்மான் ஆசிரியர் என்னும் பதவியைப்பறக்க விட்டுக்கொண்டு முஸ ல்மான் வகுப்பார்” எனவும் “முஸல்மான் கோஷ்டியார்” என்வும் கூறி தாங்களும் தங்கள் குழாத்தினரும் அநுஷ்டித்துவரும் சுன் னத்வல் ஜமாஅத்துக்கு முரணனகொள்கையாம் மௌலீதுஷரீப் குர்ஆன்ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்ற வஹ்ஹாபிக் கொள்கையை முஸல்மானில் வெளியிட்டது மறந்தாபோயிற்று

ஆராய்ச்சியின் 6வது பாராவில்:- “ஏ! இப்லீசின் தூண்டு தலுக்குள்பட்டவரே, அநேகர்கால்படிப்பு அரைப்படிப்பாக இரு ந்து வழிகெடுக்கிறதாக விளம்பின தாங்கள். எந்தக்கல்லூரியில் எத்தனைவருஷம் என்னென்ன கல்விகள் பயின்று ஸனது பெற்றி ருக்கிறீர்கள் தங்களது மஹோன்னதப்பதவியுடைய உஸ்தாது யார்? அரபிப்பாஷையில் தங்களது தேர்ச்சி எப்படி? என்பன போன்ற விஷயங்களை யறிவிப்பீர்களாயின் தாங்கள் முழுதும் கற்றறிந்த மூதறிஞர் என்பதை நம்பலாம் இன்றேல் பிறரை தா ழ்த்தி தூஷணித்தலும் தன்னைஉயர்த்தலுமான இவ்விஷயம் எத் தாத்தினற்குரியது என்பதை யுணர்ந்து கொள்வீர்களாக” எனக் காணுகிறது.

இவ்வாறு மௌட்டீயமாயும், மந்தாரத்துள் மூழ்கியபுத் தியோடும் எம்மை நோக்கி உஸ்தாதுயார்? தேர்ச்சி எப்படிஎன்று கேள்வி கேள்ப்பதைக்காண தாங்கள் தங்கள் தந்தையோடு வேற் றுமைப்பட்டு வெளியூர்போக நேர்ந்ததில் வெளியூர்களில் வெட் டிச்சாப்பாடு கிடைப்பதற்கில்லாது லாட்டரி அடித்து உருதுகற்ப தென்றால் ஊழியச் சாப்பாடு கிடைக்குமெனத்தெரிந்து ஊழியச் சாப்பாட்டுக்காகவே சிறிது உருதுகற்ற மமதையால்தானிவ்வாறு எழுதினீர்களா? அல்லது இஸ்லாமியகலா ஞானமேனும்இனிய தமிழேனும் சரிவரத்தெரியாது ஆசிரியர் பதவியை வகிக்கும் அகங்காரத்தால் தானிவ்வாறு எழுதினீர்களா? இன்றேல் உண் மையை இன்மையாகவும் இன்மையை யுண்மையாகவும் தாங்கள் எழுதிவருவதை விளக்கி விளம்பரப்படுத்தவே இவ்வாறு எழுதி னீர்களா?

முஸல்மான் சஞ்சிகையில் மதவிரோதமான விஷயங்கள் வெளிவந்ததில்லையாயின் நான் மறுப்பு எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. மதவிரோதமான விஷயங்கள் வெளியானதே மறுப்பு எழுதுவதற்கு முக்கிய காரணமாகையால் அவ்வாறு மறுப்பு எழுதுவதற்கு என்னைத்தூண்டிய இப்லீஸ் முஸல்மான் ஆசிரியரேயாவர் ஆகையால்மதவிரோதமானவிஷயங்களை முஸல்மானில் பிரசுரித்து எம்மை மறுப்பு எழுதும்படியாகத் தூண்டிய இப்லீசாகிய முஸல்மான் ஆசிரியர் ஏ! இப்லீசின் தூண்டுதலுக்குள்பட்டவரே எனக்கூறுவதால் என்னைத்தூண்டிய இப்லீஸ் முஸல்மான் ஆசிரியராகிய தாங்களே என்பதை அறிவீர்களாக.

ஏப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்பது எல்லோர்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயம் உண்மைஇவ்வாறிருக்க மறுப்பு எழுதிய என்னை எந்தக்கல்லூரியில் எத்தனை வருஷம் என்னென்ன கல்வி பயின்று சனது பெற்றிருக்கின்றீர்கள் உஸ்தாதுயார்? எனவும் வினவுப்படுகிறது

ஏ, இப்லீசாகிய முஸல்மான் ஆசிரியரே! மௌத்தானவர்களின் கபறுகளை ஸியாரத்துச்செய்வதையும், ஒளலியாக்களிடம் வஸீலாத் தேடுவதையும், அகீக்காக்கொடுப்பதையும், பாத்து வணக்கத்தையும், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதுவதையும் விலக்கி இவைகள் முஷ்ரிக்கீன் சடங்கு என்றும் இவைகளை ஒருவரும் அநுஷ்டிக்கலாகாதென்றும் முஸ்லிம்களில் இத்தகைய காரியங்களை விலக்கிச் சீர்திருத்தமடைந்தோர்களே முஸல்மான் வகுப்பார் என்றும்; ஆகவே எல்லோர்களும்அவைகளை அநுஷ்டிக்காமல் இச்சீர்திருத்தங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் தாங்கள்சிலசிற்றூர்களுக்குப்போய்ப் பிரசாரஞ் செய்துவந்ததாக இவ்விஷயம் வெளிவந்திருக்கின்றனவே ஆனால்

முஸல்மான்' தொகுதி 3 பகுதி 10, பக்கம் 284ல் முஸல்மான் ஆசிரியராகிய தாங்களே வெளியிட்டுள்ளகுறிப்பில்; பலசடங்குகளைப்பற்றி விவரிப்பதினூடே "அக்கீகாச்சடங்கு,பாத்

துச்சடங்கு, மரணத்தில் நடக்கும் சடங்கு, மூன்றும்நாள் 7, 15,
21, 40, முதலிய நாட்களின் சடங்கு, வருஷபாத்திஹாச்சடங்கு
மௌலீதுச்சடங்கு" எனக்குறிப்பிட்டு. "தலைவர்கள், சீமான்கள்,
ஆலிம்கள் நன்கு கவனித்து இஸ்லாமிய ஆசாரத்தைப்போதித்து
முஷ்ரிகீன் சடங்குகளை நிவர்த்திப்பார்களென நம்புகிறோம்"என்
றும் எழுதியிருப்பதால் முஸல்மான் ஆசிரியராகிய தாங்கள் முழு
தும் வழிகெட்ட வஹ்ஹாபியாயில்லாமலா இவ்வாறு அக்கீக்கா
கொடுத்தலையும், பராத்தின் வணக்கமுதலியதுகளையும், மௌலீது
கத்தம், பாத்திஹா ஓதுவதையும் முஷ்ரிகீன்சடங்கு என்றும்; தலை
வர்கள், சீமான்கள், ஆலிம்கள் நன்குகவனித்து இஸ்லாமிய ஆசா
ரத்தைப்போதித்து நிவர்த்திக்கும்படியாகக் கூறுகின்றீர்கள் இஸ்
லாமதஸ்தாபகரான எம்பெருமானாரவர்களின் அநுஷ்டானங்களு
க்கும், ஆக்ஞைகளுக்கும் மாறுசெய்வதுதான் "முஸல்மான் கோ
ஷ்டியாரின்" இஸ்லாமியஆசாரமா? நிவர்த்திப்பார்களென நம்புகி
றோமென்பதும். தடைபுரிகிறதென்பதும், விலக்குவதும் முஸல்
மான் ஆசிரியராகிய தங்கள் அகராதியில் ஆதரிப்பதென்றேனும்
அநுஷ்டிப்பதென்றேனும் அர்த்தம் ஏற்பட்டிருக்கின்றதா? அகீ
க்கா, பராத்து,மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா இவைகளைத்
தாங்கள் வெறுக்கவில்லையாயின் அவைகளை விலக்கிப்பிரசாரஞ்
செய்யவேண்டியதும்; மற்றவர்கள் செய்யாமல் நிவர்த்திக்கவேண்
டியதென்றும் வேண்டுவதின் காரணமென்ன? முஷ்ரிகீன் என்பத
ற்கு; இணைவைத்து வணங்குகிறவன் என்பது பொருள் இணைவை
த்து வணங்குபவர்கள்; காபிர்கள் என்பது எல்லோர்களுமறிந்த
தே அகீக்காகொடுப்பதும், பராத்து வணக்கமும், மௌலீதுஷரீப்
கத்தம், பாத்திஹா ஓதுவதும், கபறுகளை ஸியாரத்துச்செய்வதும்
ஒளலியாக்களிடம் வஸீலாத்தேடுவதும்; முஸல்மான் ஆசிரியராகி
ய தங்களிடத்தில் குப்ரியத்தான செய்கை யாயிருக்கிறதென்பத
ற்கு இதைத்தவிரவேறுசான்றுகாட்டி ருஜூப்பிக்கவும் வேண்டு
மோ? அகீக்காகொடுப்பதும், பராத்து வணக்கமும்' மௌலீதுஷ
ரீப், கத்தம், பாத்திஹா ஓதுவதுகளெல்லாம். தாங்கள்கூறியபடி
தங்களிடத்தில் நிவர்த்திக்கவேண்டிய முஷ்ரிகீன் சடங்காயிருப்பி
ன்; அகீக்காகொடுப்பது ஹனபி மத்ஹபில், முஸ்தஹப்புஎன்றும்

ஷாபி மத்ஹபில், சுன்னத் என்றும்; ஹம்பலி மத்ஹபில், வாஜிபு என்றும் சட்டம் ஏற்பட்டிருந்தும் முஷ்ரிகீன் சடங்கு எனக்கூறும் தாங்கள் நான்கு மத்ஹபில் எந்த மத்ஹபையேனும் ஒப்புக் கொண்டிருந்தால் இவ்வாறு எழுதத்துணிவீர்களா? இதிலிருந்து நான்குமத்ஹபிலுஞ்சேராத 'லாமத்ஹபி' என்பதற்கும்; சுன்னத் வல்ஜமா அத்திற்கு முரணானவழிகெட்ட கொள்கையினர் என்பதற்கும் வேறுசான்று வேண்டியதில்லையே. சுன்னத்வல்ஜமா அத்தின் கொள்கைகளை காபிர்களாகிய முஷ்ரிகீன் சடங்கு எனக்கூறுகிறவன் காபிரா, இல்லையா?

### ஹதீது

அலி(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள், (தங்கள் திருப்பேரராகிய) ஹஸன் (ரலி) வுக்காக ஒரு கிடாயைக் அகீகாக்கொடுத்து, பாத்திமாநாயகி(ரலி) அவர்களைநோக்கி குழந்தையின் தலைமுடியை க்ஷவரஞ்செய்வித்து அந்த முடியை நிறுத்து அந்த இடைக்குச்சரியாக வெள்ளியை சதக்கா (தருமம்) கொடுக்கும்படியாகத் திருவுளம்பற்றினார்கள் அதுபோல் க்ஷவரஞ்செய்வித்து. அம்முடியை நிறுக்க ஒரு திருஹத்தின் இடை இருந்ததால், ஒருதிருஹம் சதக்கா (தருமம்) கொடுக்கப்பட்டது. (திருமதி)

என்பதுமறைவான விஷயமல்லவே இஸ்லாமத ஸ்தாபகரான் எம்பெருமானார் நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் எம்முஸ்லீம்களுக்கு முன் மாதிரியாகச் செய்து காட்டியதுபோல், எல்லாமுஸ்லீம்களும் அகீக்கா கொடுப்பது, தங்களிடத்தில் முஷ்ரிகின் சடங்கேயாயின்; அவ்வாறு எழுதிய முஸல்மான் ஆசிரியராகிய தங்களை இஸ்லாமானவரென்று கூற இஸ்லாமியச்சட்டங்கள் அனுமதியளிக்கின்றதா? இல்லையே; "எனது பாதைக்குமாறு செய்கிறவன், என்னுடைய உம்மத்தில் (சமுகத்தில்) சேர்ந்தவனல்லன்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அருளியிருந்தும் முஸல்மான் ஆசிரியராகிய தங்களை முஸ்லீமென்றும், இஸ்லாமியப்பிரசாரம் செய்கிறவர் என்றும் எவ்வாறு ஏற்றுக்கொள்வது அல்லாறசூலின் ஆக்ஞையை மறுத்து தாங்கள் கூறுவதே சரியென்று ஒப்புக்கொள்ளவேண்டுமா? இவ்வாறெல்லாம் கூறுவது குபிர் பிரசாரமன்றி வேறென்னவென்றுசொல்வது. எடுத்தெறியப்பட்ட இப்லீசின் கூட்டத்தினரன்றி இஸ்லாமானவர்களில் எவர்களேனும் முஷ்ரிகீன் சடங்கு எனக்கூறத்துணிவார்

களா? அற்ப அளவேனும் மார்க்க அறிவு படைத்திருப்பீர்களேல், இவ்வா றெல்லாம் முழுமூடத்தனமாக எழுதமுன்வருவீர்களா? இஸ்லாமியகலா ஞானத்தில் சுத்தசூன்யமாகிய தாங்கள் எமது சாதாரண முஸ்லீம்களைவ ழிகெடுத்து வயிறுவளர்ப்பதற்கன்றி வேறெதற்கு இவ்வாறெல்லாம் மதவி ரோதமாக எழுதவேண்டும்,

மதவிஷயத்தில் மனம்போனபடியெல்லாம் மூடீசிந்தனமாக எழு தி அவைகளை இஸ்லாமியப்பிரசாரம் என்று வாய் கூசாமல் கூறித்திரியும் தாங்கள் எமது மறுப்பு நூலில் கால்படிப்பு அரைப்படிப்பு ஆசாமி எனக் குறித்ததைக்கண்டு. அறவே மதக்கல்வி கற்காத தாங்கள் கொஞ்சமேனும் வெட்கம் இருப்பின் எனது கல்வித்திறனையும்' எனது உஸ்தாதினையும் வி னவத்துணிவீர்களா? தாங்கள் மார்க்கச்சட்டமறியாது. மதவிரோதமாக எழுதிய மடத்தனத்தின் மஹோன்னதப்பதவியை வெளிப்படுத்தவே "த ங்களது மஹோன்னதப்பதவியுடைய ஒஸ்தாதுயார்?" என்று எழுதினீர் கள்போலும்,

ஏ, இப்லீசின் வேலையிலீடுபட்ட முஸல்மான் ஆசிரியரே! இஸ்லாமியப் பிரசாரஞ் செய்வதாயும் அதை தடைபுரிந்து விட் டதாயும் ஓலமிடும் தாங்கள் பிரசாரஞ் செய்ததாய்க்கூறும் இஸ் லாமிய கலாஞானங்களை எந்தக்கலாசாலையில் பயின்றீர்கள் குதி ரை முட்டை யென்று பூசனிக்காயை அடைகாத்து அவதிப்பட்டு பரிதபித்த அவிவிவேகப்பூரண குருகதைபோன்று தானே தா ங்களறியாத ஞானங்களைப்பற்றிப் பிரசாரஞ் செய்வது இஸ்லாத் தின் வேதபாஷையாகிய அறபிக்கலாஞானமற்ற வரும் அறபிக்க லாசாலையில் அறவே பயிலாத வருமாகியு தாங்கள் எனது தேர்ச் சியைப்பற்றி வினவுகின்றீர்களே வாருகோலுக்குப் பட்டுக்குஞ்ச ம் கட்டியதுபோல் ஏதுமறியாயே காந்தப்பேர்வழியாகிய தங்க ளை முஸல்மான் ஆசிரியர் என்றும் முஸல்மான் கோஷ்டிக்குத்த லைவனொன்றும் கூறித்திரிவதே போன்று யாம் எமது மறுப்பில் எ மக்கெவ்விதபட்டமும் சூட்டியிருப்பதுமில்லை இனிச்சூட்டிக்கொ ள்வதாயுமில்லை எனினும் தங்கள் தந்தை வங்கர் இஸ்மால்கனி இ ராவுத்தர் இப்போது இருந்திருப்பாராயின் எனது தேர்ச்சி முத லிய வைகளைத்தங்களுக்கு நல்லவித மாகவே தெரிவித்திருப்பார்.

ஏ, வங்கர் வம்மிசப்பெரியாரே! முஸல்மான் சஞ்சிகைக்கு ஆசிரியராகவும், முஸல்மான் கோஷ்டிக்குத் தலைவராகவும், இருக்கும் தாங்கள் புரியும் பிரசாரத்தின் இஸ்லாமியக் கலாஞ ஙங்களை எந்த ஆரபிக்கலாசாலையில் எத்தனை வருஷம் என்னென்ன கல்விகளைக்கற்று ஸன்து பெற்றிருக்கிறீர்கள் தங்களது மஹோன்னதப்பதவியுடைய உஸ்தாதுயார்? தங்களின் தேர்ச்சி எப்படி எனபதை எடுத்துரைப்பீர்களாயின் தாங்கள் வகிக்கும் தலைமைப்பதவிக்குத் தகுதியுடையோர் தானு என்பதும், இஸ்லாமியப் பிரசாரஞ் செய்வதற்கு லாயக்குடையவர்தானு என்பதும் எளிதில் தெரிந்து கொள்ளலாம் இதில் (U) சைபர் என்ருலும் தாங்கள் பத்திராதிபர் பதவிக்கேனும் அருகதையுடையோர்தானு? என்பதை அறிந்து சந்தாதாரர்கள் சந்தேக நிவாரணை செய்து கொள்வதற்காக வாவது முஸல்மான் சஞ்சிகை எப்பாஷையில் வெளியிடுகின்றீர்களோ அப்பாஷையேனும்சரிவரக்கற்றிருக்கின்றீர்களா? அல்லது மொழிபெயர்ப்பதாய்க்கூறும் உருதுபாஷையேனும் சரியாகத்தமிழில் மொழி பெயர்க்கக் கற்றிருக்கின்றீர்களா இக்கல்விகளைத்தங்களுக்குக் கற்பித்த உபாத்தியாயர் யார் எத்தனை எத்தனை வருஷம் என்னென்ன கல்விகளைக்கற்றீர்கள் இவைகளிலேனும் தங்களின் தேர்ச்சியாது என்னும் வள்ளலேயேனும் சற்றே விளம்ப முன்வாருங்கள் பார்ப்போம். இவைகளெல்லாம் சூன்யமாயிருப்பினும் வேறெந்தப் பாஷையையேனும் சரிவரக்கற்றிருக்கின்றீர்களா?

“கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்”

என்பதை யுணர்ந்திருப்பீர்களேல் முயலானது தனது கரிலேயே முத்திக்கொள்வது போல் தாங்கள் தங்களின கல்வித்திறனை மெச்சத்துணிய மாட்டீர்கள்

உருதுக்கவி

கியாகர்த்தே ஹ்ஹன்ஜாஹில் அவுர்நாவாகிப் அப்ஸேதஅலீ
ஜோஆலிம்ஹே உஸீனே சொப்ஸே கம்தர் ஆப்கூஜாஞ

(இ--ள்) அறிவற்ற மடையர்கள் வீண்விவாதஞ் செய்கிறுர்கள் எவன் அறி

வுள்ளவனாக இருக்கிறானோ அவன் தன்னை மற்றவர்களைக்காணத் தாழ்மையாக நினைப்பான். (எ--று)

ஆனால் அறுக்கமாட்டாதவன் சூத்தில் அறுபத்தெட்டு அறிவாள் என்பது போல் முஸல்மான் ஆசிரியர் குடியிருக்கும் தெருவில் நடைபெறும்கொடி கூடு எடுத்தலை நிறுத்த இயலாத இவர்தானா? மற்றவூர்களைச் சீர்திருத்திவிடுவர்? இவர் கெட்டகேட்டுக்கு. உயர்தர உலமாக்களையும் நிந்திக்க வேண்டும்போலும்

"மக்களே போல்வர் கயவரவரன்ன
வொப்பாரியாங் கண்டதில்"

என்பதற்கிலக்காயிருப்பது பற்றியன்றோ சதா நிந்தனைப்பிரசுரங்கள் முஸல்மானில் வெளிவருகின்றன இவ்வாறு வெளிவரும் ஆபாசப்பிரசுரங்கள் மேஜராகாத மைனர்களாலும் எழுதியதாக வெளிவருவதென்றால் இனி பால்குடிமாறாத பாலகர்களும் கர்ப்பத்திலிருக்கும் சிசுக்களுங் கூட எழுதியதாக என் வெளிவராது?

ஆராய்சியின் 7-வது பாராவில்:- "அன்றியும் உலமாக்களை போலி ஆலிம்களென்றும், வயிறு வளர்ப்பவர்களென்றும், இகழ்ந்து பரிகசித்துக் கொண்டு முஸல்மான் உலமாக்களை நிந்திக்கிறதெனக்கூறுவது அல்லாவுக்கும் ரசூலுக்கும் ஏற்கக்கூடியதா? இஸ்லாமியப் பிரசாரம்புரியும் முஸல்மான்மீது அருவருக்கத்தக்க இவ்வபவாதங்களைச் சுமத்தும் தாங்கள்தானா மறுப்புஎழுத முன்வருவது தாங்கள்தானா? அல்லாவுக்கும், ரசூலுக்கும், வழிப்பட்டவர்கள்" எனக்காணுகிறது.

நோட்டமிடும் எவ்வாறு அவர்கள் தங்கள் நப்ஸின்பேரில் பொய் சொல்லிவிட்டார்கள் அப்பொய்க் கட்டுரை அவர்களை வழிகெடுத்துவிட்டது" (குர்ஆன்.)

என அல்லாஹுத்தஆலா அருளியிருப்பதைக்கண்டு அச்சங்கொள்வார்களேயானால் தமது முஸல்மானில் கூறியதை கூறவில்லை எனக்கூறத் துணிவாரா?

முஸல்மான் தொகுதி 5 பகுதி 11 பக்கம் 269ல் இஸ்லாமியக்கலைவல்லுனர்களை "இவர்கள் மௌலானவானது எதற்கு?

வயிறு வளர்க்கத்தானு" வென்று மகாநீசத்தனமாக, இம்மகனே போன்று பிரசுரித்துவிட்டு முஸல்மான் உலமாக்களை நிந்திக்கிற தெனக்கூறுவது அல்லாவுக்கும்ரசூலுக்கும் ஏற்கக்கூடியதா?எனப் பிதற்றுகிறவர்கள் மேலேகாட்டிய வேதவாக்கியத்தின்படி.வழி கெட்டவர்களாகிறார்களல்லவா?பத்திரிகையில் பரக்கக்கூறிவிட்டு, முழுப்பூசனிக்காயை ஒருபிடி சோற்றில் மறைப்பதுபோல் மறுத்து, அல்லாவுக்கும் றசூலுக்கும் ஏற்கக்கூடியதா வெனக்கூறுகிற வர்கள்தான் அல்லாவுக்கும் ரசூலுக்கும் வழிப்பட்டவர்கள் போலும். இவ்வாறு எடுத்துக்காட்டுவது, அருவருக்கத்தக்க அபவாத மெனக்கூறித்தமது தவறையுணராது பிடிவாதங்காட்டும் முஸல் மான்"தானோ இஸ்லாமியப்பிரசாரம்புரிவது?" இவர்கள் மௌலா னுக்களானது எதற்கு. வயிறுவளர்க்கத்தானு"? என்று இகழ்ந்து பரிகசிக்கும் முஸல்மானின் ஆசிரியர், ஆடுநனைகிறதென்று ஓநாய் அழுத கதைபோல நான் ஆலிம்களை இகழ்வதாகக் குறைகூறு கின்றதுவியப்பே.

சென்ற 1926ஹு ஆகஸ்ட்மீ 14உ வெளியான"ஸைபுல் இஸ்லாம்"9 வது பக்கம் 4,5 கலங்களில் தென்காசியின் ஒருபள் ளியின் பேஷ் இமாம் அப்பள்ளியில் நடைபெறும் முஹர்ரம்பண்டி கை வைபவத்தில் கலந்து கொள்ளாமலும் பஞ்சாவுக்குப்பாத்தி ஹா முதலியகிரியைகள்செய்யமறுத்ததாலும் அவரைநீக்கப்பட்டு விட்டதையறிந்த ஓர் ஆலிம் அவ்வேலையை ஒப்புக்கொண்டு பஞ் சாவுக்குப்பாத்திஹா ஸியாரத்து முதலியன நடத்தியதாகக்கூறப் படுகிறது.

முஸல்மான் ஆசிரியர் 1—7—24ல் தென்காசி கோமதி விலாசம் பிரஸில் பதிப்பித்து பிரசுரிக்கப்பட்ட துண்டு பிரசுர மொன்றில் குர்பானித் தோலைத் தமக்குக் கொடுத்துதவும்படி வேண்டுகிறார் அதற்கனுகூலமாக, யாரோ ஒரு அநாமதேயப் பேர் வழியால் தமது பேரைக் குறிப்பிடாமல், குர்பானி செய்வதின் அவசியமும் அதைச் செய்ய வேண்டிய அவசியமும் என்ற தலைப்பின்

கீழ் ஓர் துண்டுப் பிரசுரம் 25—5—28ல் தென்காசி மீனாக்ஷிபிரசில் பதிக்கப்பட்டு வெளியாயிருக்கிறது. மார்க்கக் கட்டளைகளை மாற்ற மாக வெளியிடுவதில் கையொப்பமில்லையாயின் ஒரு போலிப்பேர் வழியால்தானே வெளியாயிருத்தல் வேண்டும் இல்லையேல் தமது பெயரைக் குறிப்பிடாது பதுங்குவானேன்? அவ்வாறு பிரசுரித்த வர் ஆலிமென்று கூறுவதற்கு அருகதையற்றவராயிருப்பது பற் றியே தமது பெயரைக் குறிப்பிடுவது. அவமானமெனக்கருதி வெட்கித் தலைகுனிந்து தமது பெயரைக் குறிப்பிடாமல் அநாம தேயப் பிரசுரமாக வெளியிட்டனர் போலும்.

இத்தகையோர்களையும் இவர்களைப் போன்றவர்களையும் போலிப்பேர்வழிகளென்றும், கால்படிப்பு, அரைப்படிப்பு ஆசாமி யென்றும்; வயிற்றுப் பிழைப்புக்காரர்களென்றும் எமது மறுப்பு நூல் கூறுகின்றன; ஆனால் பஞ்சாவுக்கு பாத்திஹா, சியாரத்துகள் நடத்த முன் வந்தவரையும் ஆலிமென்றே அழைக்கப் படுகிறது. இவ்வாறான பாமரப்போலிப் பேர்வழிகளை உண்மை ஆலிமென்று கூறுவதா? ஜாலிமென்றுகூறுவதா ஆலிமாயிருப்பின் இத்தகைய குப்ரியத்தான காரியங்களை நடத்திக்காட்ட முன்வருவாரா? இக் கொடியோர்களுக்காகவும்முஸல்மான் ஆசிரியர்பரிந்துபேசிபாசாங் காகஉலமாக்களை நான் நிந்திப்பதாக எழுதிய துநகைப்பேஎனினும் பராத்து வணக்கம், அக்கீக்கா கொடுத்தல், மௌலீதுஷரீப், கத் தம் பாத்திஹா, ஓதுதல்முஷ்ரிக்கீன் சடங்குஎன்று எழுதிய முஸ ல்மான் ஆசிரியரின் கொள்கைகளுக்கு இப்போலிப் பேர்வழிகள் பக்க பலமாயிருந்து ஆதாவுஅளிக்க வேண்டியே இவ்வாறு எழு தினர் என்றே எண்ணவேண்டியதாகிறது இத்தகைய உளறுமாக் களின் உதவிகொண்டே உயர்தர உலமாக்களைஇவர்கள் மௌலா னுக்களானது எதற்கு? வயிறுவளர்க்கத்தானு? என்றும்முஸல் மானில்வெளியிட்டனர்போலும்

விருத்தம்

வீணரிற் சிறிதுபேர்கள் விளங்கிடாத் தன்மையான
கோணலிற் கொடியதாகுங் குறுகிய புத்தி தோன்றி

ஆணவத்தாலே மெத்த அறிவுகள் படைத்தோரென்று
நாணமதற்றே பூவில் நவில்வதும் மயக்கம்மாமே

எனவே இத்தகையோர்களை நான் மட்டுமல்ல உண்மை முஸ்லிம்கள் ஒவ்வொருவருமே கண்டியாநிரார். உள்ளொன்றும் புறமொன்றுமாய்க் கள்ளத்தனமாகக் கபடதந்திர சூட்சியோடு இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதாய்ச்சொல்லி ஏமாற்றி வஞ்சித்து வஹ்ஹாபி மதப்பிரசாரம் செய்துவரும் முஸல்மான் ஆசிரியரின் அதிகப்பிரசங்கத்தை ஆதரிப்போர்களைப் போற்றுவதும் நிராகரிப்போர்களைத் தூற்றுவதும் எத்தரத்தினற்குறிய குணமென்பதை இனியேனும் தெரிந்து கொள்வாராக.

"ஓ! ஈமான் கொண்டவர்களே அல்லா(ஹ்)வுக்குவழிப்படுங்கள்; இன்னும் றஸூலுக்கும் வழிப்படுங்கள்; இன்னும் உங்களில் நின்றும் ஏவக்கூடிய காரிய கர்த்தருக்கும் வழிப்படுங்கள்"—
(குர்ஆன்)

என்று அல்லாஹுத ஆலா அருளியிருந்தும் ஏவுவதற்குத்தகுதிபெற்ற இஸ்லாமியக் கலாவல்லுனர்களைத் தூற்றிப் போலிப் பேர்வழிகளைப் போற்றி எழுதுவதையே வேலையாகக் கொண்ட முஸல்மான் ஆசிரியர்தானே? அல்லா(ஹ்)வுக்கும் றஸூலுக்கும் இஸ்லாமிய காரியகர்த்தருக்கும் வழிப்பட்டவர்.

ஏ! பித்துப்பிடித்த பெரியாரே! நான் மறுப்பு எழுதியதின் காரணமாயல்லவா தாங்கள் வஹ்ஹாபி பத்திரிகையை மொழிபெயர்த்து முஸல்மானில் வெளியிடுவதும் தாங்கள் இப்லீஸ்என்பதும் முஸல்மான் கோஷ்டியினர் இப்லீசின் வயப்பட்டுவிட்டதை நன்கு ஸ்தாபித்து விட்டீர்க ளென்பதையும் அறிவற்று ஆராய்ச்சியில் ஒப்புக் கொண்டெழுத நேர்ந்தது இல்லையாயின் தங்கள்வண்டோலம் பொது மக்கள் எவ்வாறு தெரிந்து கொள்வர்

ஆராய்ச்சியின் 8-வது பாராவில்:- ஏஜனுப் மக்கீ ஸாஹிபே முஸல்மான்வழியாக வினுவினவியசற்குண சீலர்களையும் முஸல்மா

னிக் வியாசம் ஜவாபுவெளியிடும் மேதாவிகளையும் கீழ் மக்களைப் போன்று நீசத்தனமாக ஏசுவது நும்போன்றஎல்லாமறிந்தோருக் குப்பொருந்துமா? அவர்களது பெருந்தன்மையையும் தங்களது நிலைமையையும் யோசித்துப்பார்க்கும் ஆற்றல் தங்களிடம் இல்லை யாயினும் பொதுஜனங்களறிந்து கொள்ளட்டும்" என்வரையப் பட்டிருக்கிறது.

ஏ! ஜனாப் முஹம்மது அப்துல் காதிர் சாஹிபே தங்கள் முஸல்மான் கோஷ்டியாரின் தவரான கொள்கை பிரசாரம்முதலிய வைகள் தாங்கள் கூறுவதுபோன்று எல்லாமறிந்தே மறுப்பு எழு தினேன் தங்களுடையவும் தங்கள் கோஷ்டியாருடையவும் நில மையை யறிந்து நீங்கள் சுன்னத்வல்ஜமா அத்துக்கு முரணான கொள்கைகளைக்கூறி "முஸல்மான் கோஷ்டியார்" "முஸல்மான் வகுப்பார்" எனச்சொல்லி வழிகெட்டுத் திரியவேண்டாம் அந்த மார்க்க பாதையை விட்டுவிலகி தௌபாச்செய்து உண்மை முஸ் லிம்களாக வெளி வாருங்களென எமது மறுப்பில் கூறியும் அதை யும் சரியாயுணர்ந்து யோசித்துப்பார்த்து ஆராய்ச்சி எழுதும் ஆற் றல் தங்களிடமில்லை என்பதை தங்கள் ஆராய்ச்சியை கண்ணுற் றோர்களெல்லோர்களுமே நன்கு அறிந்து விட்டனர்.

ஏ! அபத்தமுறைக்கும் ஆசிரியரே எமது மறுப்பிலெங் கேனும் முஸல்மானில் வியாசம், வினா, விடை வெளியிடும் எவர் களையும் கீழ் மக்கள் என்றாவது கீழ்மக்கள் போன்று என்றாவது, எதுவும் கூறாதிருக்க ஏசுவதாக எழுதி இருக்கிறீர்கள் அதிலும் ஜவாபு வெளியிடுகிறவர்களைப் பற்றியாதோர் வார்த்தையும் கூறா திருக்க அவர்களையும் கீழ் மக்கள் போன்று என நீவிர் கூறுவது குறும்புத்தனமல்லவா?

முஸல்மானில் மத விரோதமான வியாசங்களும் வினாக் களும் கட்டுரைகளும் வெளியிட்டவர்கள் தங்களுக்கு பந்துவாயி ருப்பதுகொண்டு அவர்களையும் அவர்களைப்போன்றவர்களையும் தங் களைப்போன்ற தன்மையுடையவர்களென்றும் உண்மையை உல கோர் அறிய கீழ்மக்கள் போன்று என்று தாங்கள் எழுதியதெனின்

சமக்கொன்றும் ஆக்ஷேபனை இல்லை ஆனால் இவர்களைத்தவிர்த்து வேறு பல கண்ணியவான்களின் பல வியாசங்களையும் ஜவாபுகளையும் வெளியிட்டவர்களையும் கீழ் மக்கள் போன்று என்று தாங்கள் எழுதியது கண்டிக்கத்தக்கதே தங்கள் முஸ்லிமானில் வினு, வியாசம் ஜவாபு எழுதிய எல்லோர்களையும் கீழ்மக்கள் போன்று எனத் தாங்கள் எழுதியதைப் பார்க்கத் தங்கள் சஞ்சிகையில் ஜவாபு எழுதியவர்களுள் மதவிரோதமாக மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப் கத்தம்பாத்திஹா ஓதப்படாதென்ற கொள்கையினர் எவரேனும் இருக்கின்றனரோ என்பது தெரியவில்லை.

ஏ! பாதகமுறைக்கும் பேதக புத்தி படைத்த முஸல்மான் ஆசிரியரே முஸ்லிமான் வழியாக வினுவினவியசர்க்குண சீலர்களையும்வியாசம்ஜவாபுவெளியிடும்மேதாவிகளையும் கீழ்மக்கள்போன்று ஏசுவது நும் போன்ற எல்லாமறிந்தோருக்கு பொருந்துமா? அவர்களது பெருந்தன்மையையும் தங்களது நிலைமையையும்யோசித்து பார்க்கும் ஆற்றல் தங்களிடம் இல்லையாயினும் பொது ஜனங்கள் அறிந்து கொள்ளட்டும் என எழுதியிருப்பதால் அந்த சர்க்குண சீலர்களையும் மேதாவிகளையும் அவர்களின் பெருந்தன்மையையும் சற்று கவனிப்போமாக.

நாளது 1928ம் ௵ மே ௴ வெளியான முஸல்மான் சஞ்சிகையில் வினுவினவிய தங்கள் சர்க்குண சீலர் குரைஷி என்பவர் தூத்துக்குடியில் திருநெல்வேலிஜில்லா தன்ஸீம சங்கமொன்றேற் படுத்திப்பொது வசூல் தொகைகளை வாயில் போட்டும் துர்ச்செய்கைகளால் துரத்தப்பட்டு விட்டதால் அவரை அழைப்பித்து வடகரையில் உருது கற்பிப்பதற்கு உபாத்தியாயராக நியமித்து சில மாணவர்களைச்சேர்த்து முஸல்மான்வகுப்பாரின் கொள்கைகளைப் போதித்து வந்ததில் அங்கும் அவரின் துர்ச்செய்கைகளைக்கண்ட தங்கள் முஸல்மான் கோஷ்டியினரே அவரை ஊரைவிட்டும்போய் விடும்படியாகச் செய்ததில் போகும்பொழுது ஊர்த்து வேலைக்காக ஒரு சிறுவனை அழைத்துக்கொண்டு ஓடிவிட்டனரல்லவா? இவர் முஸல்மான் ஆசிரியராகிய தங்களின் சர்க்குண சீலராயின்

தங்களின் சர்க்குணத்தைப்பற்றிவேறே விஜாரித்துத்தான் தெரிய வேண்டுமென்பதில்லையே.

வியாசம்எழுதிய தங்களின் மேதாவி தென்காசி தன்ஸீம் சங்க அங்கத்தினரிலொருவரான ஷைகுல் ஹமீது என்று கை யொப்பமிட்டிருக்கின்றனரல்லவா தென்காசியில் தன்ஸீம் சங்கம் எந்த இடத்தில ஏற்படுத்தி இருக்கிறது. அது ஏற்பட்டு எவ்வளவு காலமாயிற்று? அதன் வரவு செலவு என்ன? கையொப்பமிட்ட வரைத் தவிர வேறு எத்தனை அங்கத்தினரிருக்கின்றனர்? அச்சங் கத்தின் தலைவர்யார்? பொக்கிஷதார்யார்? தன்ஸீம்சங்கம் ஏற் பட்டது முதலிதுவரை என்னென்னவேலைகள் நடைபெற்றிருக் கிறது என்பவைகளை தங்கள் சஞ்சிகையிலேயே வெளியிடுவீர் களா? தவிர இவர் உயர்தர உலமாக்களை இவர்கள் மௌலானுக் கள் ஆனது எதற்கு? வயிறுவளர்க்கத்தானு? என்றெழுதியதே அவரின் பெருந்தன்மையா? அல்லது தாங்களும் தங்கள் கோஷ் டியினரும் மௌலீது ஷரீப், குர்ஆன் ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும் ஒளலியாக்களிடம் வஸீலாத்தேடப்படா தென்றும் கபுரிஸ்தானங்களில் சியாரத்து செய்யப்படாதென்றும் கூறியதைக் கேள்விப்பட்டு மௌலீது ஷரீப் கத்தம்பாத்திஹா ஓதப்படாதென்பதும் ஒளலியாக்களிடம் வஸீலாத்தேடப்படா தென்பதும் வஹ்ஹாபிகளின்கொள்கை அவ்வாறு கூறியவர்களை பின் துயர்ந்து தொழுதால் தொழுகை கூடாதென "காயல்பட்ட ணம் செய்யது சுலைமான் லெப்பை ஆலிம் அவர்கள் கூறியதைத் திரித்து தென்காசியில் ஒரு ஆலிமின் திருவிளையாட்டு என்னும் தலைப்பின்கீழ் சந்தனக்கூடு, கொடி, பஞ்சா, சப்பரம் முதலானது மேளவாத்தியத்துடன் ஊர்வலம் சுற்றி திருவிளையாடல் நடத்த வேண்டுமென்றும் பஞ்சா, கொடிமரங்களுக்கு நேர்ச்சை நேர்ந் தால் பலவிதமாகிறதென்றும், அதைமறுப்பவர்கள் வஹ்ஹாபி என்றும், அவர்களுக்குப்பின் தொழுதால் தொழுகைகூடாதென் றும் இரகஸ்யப்பிரசாரம் செய்ததாய்க் கட்டுரை வரைந்தது

மேதாவித்தனமா? அல்லது பெருந்தன்மையா? என்பதை தெளிவாயெழுதினால் எல்லோரும் தெரிந்து கொள்வார்களல்லவா? ஆனலிது விஷயத்தினுண்மையை இவர்கள் கூறமறுத்தபோதிலும் ஜனப், செய்யது சுலைமான் லெப்பை ஆலிம் அவர்களின் மறுப்பு வெளிவந்தால் பொது ஜனங்களுக்குத் தெரியாமற் போகாது.

ஆனலிவைகளைப் பார்க்கையில் முஸல்மான் ஆசிரியர் முதலாவது தென்காசியில் ஹிதாயத்துல் இஃறவான் சங்கம் ஏற்படுத்தி நன்கொடை, மகமை, சந்தா, இவைகள் வசூலித்து இஸ்லாமதவிளக்கம் என்னும் சஞ்சிகை ஓராண்டு நடத்தி மறுவருடம் அவைகளை மாற்றி முஸல்மான் ஆபீஸ் என்றும் முஸல்மான் சஞ்சிகை என்றும் பெயரைமாற்றிக் குர்பானித்தோல் நன்கொடை முதலியனவசூலித்துகொடுத்துவைத்திருப்பது ஹம்பக்தனமாக தமதாக்கிக்கொண்டு இப்பொழுதும் வசூலிப்பதுநல்ல யோக்கியர்களின் வேலைபோலும் ஹிதாயத்துல் இஃறவான் சங்கம்ஏற்படுத்தி சுமார் எழு வருஷங்களாகின்றனவே இதுவரைநன்கொடை, மகமை, குர்பானித்தோல், சந்தா, மற்றும் வேறு இனங்களிலும் வசூலான தொகை எவ்வளவு? அதிலிருந்து என்னென்ன இனங்களில் செலவுசெய்யப்பட்டது, அதுஎவ்வளவு மீதிப் பொதுவாக இன்றுவரைத் தங்களிடமிருக்கும் தொகை எவ்வளவு? என்பதையும் தங்களால் இஸ்லாமத விளக்கமென்னும் நாமத்துடன் நடத்தப்பட்டதும், "முஸல்மான்" என்று நடத்தப்படுவதுமான சஞ்சிகைகளுக்கு பொது நிதியிலிருந்து செலவு செய்தவைகளுக்கு ஊரார்களிடம் ஏதேனும் அனுமதி பெற்றிருக்கிறீர்களா? என்னும் விஷயங்களும் வெளிப்படுத்தாமல் மறைத்துவைத்து மௌனஞ் சாதிப்பதின் காரணமென்ன சந்தாதார்கள் வயிறு எறிய வருஷக்கணக்காக தங்களின் ஹஜ்ஜு யாத்திரையைப்பற்றி முஸல்மானில் பலபக்கங்களைப் பாழ்படுத்தி வந்த தாங்கள் இந்தப் பொதுவசூலின் வகைவிபரங்

களின் கோஷ்பாரா கணக்கை முஸல்மானில் வெளியிட மறுப்பதேன் இவ்வாறு மௌனம் சாதிப்பதால் அப்பொருள்களை அபகரித்துக் கொள்ளலாமென்ற கருத்து தங்கள் மனதில் குடிகொண்டிருக்கின்றதா? இவ்வாறு பொதுப் பொருள்களை மோசஞ்செய்வதற்கே ஹிதாயத்துல் இஃவான் சங்கம் இஸ்லாமத விளக்கம் முஸல்மான் இவைகளை வேஷதாரியைப்போல் நடத்த முன்வந்தீர்களேல், தங்களைச்சிலர் ஸதக்கா ஹாஜியாரென்றும் கூலி ஹாஜியாரென்றும், கூறுவதில் பொதுமக்களிடம் உதவி பெற்று இலவசமாக யாசக ஹஜ்ஜு செய்யப் போகும்போது, தங்களிடம் பொருளில்லாமல் வெறும்பேர்வழியா யிருந்ததாய்க் கூறவீர்களேயாயின் ஆயிரக்கணக்கான தொகையை வைத்துக்கொண்டு கூலிக்கு ஹஜ்ஜு செய்யப்போனதேன்? இவ்வாறு சென்ற சிறப்பையல்லவா? முஸல்மானில் வருஷக்கணக்காக வெளியிட்டு வந்தீர்கள்.

இவைகளிலொன்றையேனும் நியாயாதாரத்துடன் மறுக்க இயலுமா? இத்தகைய நிலைமையும் சர்க்குணசீலமும், மேதாவித்தனமும்; தன்மையும் எம்மை அணுகாது. அல்லாஹுத்தஆலா அருள்புரிவாராக.

ஆராய்ச்சியின் 9-வது பாராவில்:- "ஏ! பழிமொழி சாற்றுவோரே பஞ்சா, கூடு எடுப்பதாகவும் குர்ஆன் ஷரீப், மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா முதலியன ஓதுதல் ஆகாதெனத்தடைபுரிவதாகவும் எம்மீது கட்டுரைசெய்திருக்கிறீரே எம் சஞ்சிகையில் நின்றும் இதற்கு ஆதாரம் காண்பிக்க முடியுமா? எம் ஆபீசில் நின்றும் வெளியான சஞ்சிகைப் புத்தகங்கள் சுன்னத்து ஜமாஅத்தின் விஸ்வாஸம் 'கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு' என்னும் நூற்களிலிருந்தும், தமது தாவாவை ஸ்திரப்படுத்தும் பக்ஷம் தங்களுக்கொரு ஜுப்பாவும், தலைப்பாகையும், வெகுமதியளிப்பதுடன் சமுகத்தை ஓதிய வேதக்கடலெனவும், உண்மை யுரைப்போரெனவும், மதிப்போம் இன்றேல்,

ந மதுஹபுஸே ஹுயேவாக்கிப் ந தீனே ஹக்கூ பஹச்சானு
பஹின்கர் ஜுப்பா வஷிம்லா லகே கஹ்லானே மௌலானு.

(பொருள்) மதுஹபைத்தெரிந்து கொள்ளாமலும் மெய்யான தீனை விளங்கிக்கொள்ளாமலும், நீண்டகுஞ்சத்தையுடைய தலைப்பாகையை அணிந்து மௌலானுவென்று அழைக்கப்படுகிறார்கள் என்ற கவி

தங்கள் மீதுசாருமென்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்'' என்றெழுதிக் காணுகிறது.

எழுதினவன் எட்டைக்கெடுத்தான் படித்தவன்பாட்டைக்கெடுத்தான் என்பதற்கொப்ப மேற்கண்டவாறு எழுதத்துணிந்தது வியப்பே.

ஏ! ஆராய்ச்சி எழுதிய ஆசிரியரே எமது மறுப்பில் தாங்கள் பஞ்சா, கூடு எடுப்பதாகவும். சூலம் நக்ஷத்திரம் பார்ப்பதாயும் எந்த இடத்தில்கூறப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுவீர்களா? தென்காசியில் பஞ்சா, கொடி, கூடு' சப்பரம் எடுப்பதாகவும். குறி சூலம் நக்ஷத்திரம் பார்ப்பதாயும் தாங்கள் தங்கள் முஸல்மானில் வெளியிட்டதாலேயே அதைப்பற்றிய மதபோதனையை சிறிது விவரித்துள்ளோம் அப்படியிருக்க தாங்கள் ஆராய்ந்ததில் தாங்கள் இவ்விஷயங்களை ஆதரித்தீர்களென்றுஎழுதியிருப்பதாக எவ்வாறுகூறத்துணிந்தீர்கள் காமாலைக்கண்ணனுக்கு காண்பதெல்லாம் மஞ்சள் நிறமாகத்தோன்றுவதுபோல் தங்கள்ஆராய்ச்சியும் ஆகிவிட்டது என்பதை அறிவீர்களாக,

மௌலீது ஷரீப், குர்ஆன்ஷரீப் கத்தம் பாத்திஹா, முதலியவை ஓதலாகாதென்த் தடைபுரிவதாக. எம்மீது கட்டுரைவரைந்திருக்கிறீரே எனக்கூறும் தாங்கள்

சென்ற 1926-ம்ஹு அக்டோபர்மீ வெளியான முஸல்மான்சஞ்சிகையில் மௌலீது ஓதக்கூடாது. அதற்குகூலி கொடுக்கலாகாது. குர்ஆன்ஷரீப் கத்தம் பாத்திஹாஒதக்கூடாதென்றும் அதற்குக் கூலிகொடுக்கலாகாதென்றும் கூறுவோரே வஹ்ஹாபிக்கூட்டமென்றும் வேறுசிலரும் இப்படிப்பல்வேறு விதமாகப்பொதுஜனங்களுக்குள் பேசிக் கொள்ளப்படுகிறதுமனறி சில ஆலிம்கள் இதைப்பேசிக்கொள்வதாகவும் கேள்விப்படுகிறோம் எனினும் விஷயம் தெளிவாக. விளங்கவில்லையாதலால் கீழ்கண்ட வினாவின்படி விடைபகர உலமாக்கள் சமுகம் வேண்டுகிறோம் எனவெளிவந்திருக்கிறதல்லவா? அப்பால்

நாளது 1928-ம்ஹு நவம்பர்மீ வெளியான முஸல்மான் -

பக்கம் 100 101ல் தங்களுக்கும் எங்களுக்கும் இதுகாறும்எவ்வித சம்பந்தமுமில்லையென்பது வெளிப்படை ஜனாப் மௌலவி ஷர புத்தீன்சாஹிப் அவர்கள் வெளியிட்டவார்த்தையின் உண்மையை அறிவதன் பொருட்டு. அன்னாரிடம் விடுத்தவினாக்களை தாங்கள் நகல் செய்துகொண்டு." எனஎழுதியவற்றால்

மௌலிதுஷரிப், குர்ஆன்ஷரிப், கத்தம் பாத்திஹாஓதப் படாதென்றும் அதற்குகூலிகொடுக்கலாகாதென்றும்கூறுபவர்களை வஹ்ஹாபி என்று ஜனாப் மௌலானா மௌலவி செய்யது முஹம் மதுஷரபுத்தீன்சாஹிப் அவர்கள் வெளியிட்ட வார்த்தையின் உண் மையை அறிவதன் பொருட்டு அன்னாரிடம் வினா விடுத்ததாகக் கூறுவதில் தாங்களும் தங்கள் கோஷ்டியினரும் அவ்வாறு தடை புரியவில்லையாயின் எமக்கும் தங்கள் கோஷ்டியினருக்கும்எவ்வித சம்பந்தமுமில்லை எனக்கூறுவதுபோல் தங்கள் கோஷ்டியினர் களுக்கும் ஜனாப் மௌலானா மௌலவி செய்யது முஹம்மது ஷர புத்தீன்சாஹிப் அவர்களுக்கும் எவ்விதசம்பந்தமுமில்லையேதவிர "அவர்கள் வெளியிட்டதின் உண்மையை அறிவதன் பொருட்டு" என்பதால் நீங்கள் மௌலீது ஷரீப், குர்ஆன் ஷரீப், கத்தம்பாத் திஹா ஓதப்படாதென்றும் அதற்குகூலி கொடுக்கலாகாதென்றும் கூறியதைக்கேட்டு அவர்கள் வஹ்ஹாபிக்கொள்கை என வெளி யிட்ட வார்த்தையின் உண்மையை அறிவதன் பொருட்டுத்தா னே வினவினவிரீர்கள். நீங்கள் இவைகளைத் தடைபுரியவில்லையா யின் அவர்கள் தடைபுரிபவர்களை வஹ்ஹாபி எனக்கூறியதின் உண்மையை அறியவேண்டிய ஆவசியம் எவ்வாறு ஏற்பட்டது அ திலும் கூறியதின் உண்மையை அறிவதன் பொருட்டு என்பதால் மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதெ ன்றும் அதற்கு கூலிகொடுக்கலாகாதென்றும் கூறுபவர்களைவஹ் ஹாபி என்று கூறுவதிலும் சந்தேகம் ஏற்பட்டல்லவா உண்மை யை யறியவேண்டிய அவசியம் ஏற்படலாயிற்று அவ்வாறுகூறுத வர்களுக்கு வஹ்ஹாபி என்பதில் சந்தேகமேற்படக் காரணமுண் டா தடைபுரிந்ததின் நிமித்தமே வஹ்ஹாபிஎன்பது சரியா அல்லவோ என்ற உண்மையை யறியவினா விடுக்க வேண்டியதாயிற்றுஇதி

டைந்த முஸல்மான் கோஷ்டியினர் வஹ்ஹாபிக் கொள்கையினர் என்றேற்படுவதோடு வடகரைஜனுப் வ. ரஜப்பக்கிர் இராவுத்தாவர்களால் தென்காசி, முஸல்மான்'' ஆசிரியரின் முழுப்பொய் யென்னும் தலைப்புடன் வெளியிடப்பெற்ற பிரசுரத்தில் முஸல்மான் ஆசிரியராகிய தாங்களுந் தங்கள் சகாக்களில் சிலரும் வடகரையில், மௌலானு மௌலவி செய்யிது முகம்மது ஷாபுத்தீன் சாஹிப் அவர்களில்லாத சமயங்களில் மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா, ஓதக்கூடாதென்றும் அதற்குக் கூலி கொடுக்கலாகா தென்றும் கூறியதைக்கேட்ட பொதுஜனங்கள் கௌரவமிக்க ஹஸரத்தவர்கள் வந்ததும் அவர்களிடம் கேட்கவே இவ்வாறு கூறுவது வஹ்ஹாபிகளின் கொள்கை என்றும் அவைகளை அநுசரிக்கலாகாதென்றும் கூறியதால் அதைக்கேள்விப்பட்ட வடகரையிலுள்ள முஸ்லிம்களிற் சிலர் முஸல்மானுக்குச் சந்தாதார் களாயிருந்தவர்கள் வஹ்ஹாபிப்பத்திரிகையை வாங்கி வாசிக்கலாகாதென நிராகரித்துவிட்டதுமுதல் தாங்களும் தங்கள் சகாக்களும் மௌலானு மௌலவீ செய்யிது முகம்மது ஷாபுத்தீன் சாஹிப் அவர்களின்மீது பலவிதமாக பழித்து இல்லாதவிஷயங்களை எல்லாம் எழுக்குமாருக எழுதித்தூற்றிவருவதாகவும் வெளிவந்ததின்பின்னும் தங்கள் மதவிரோதமான கொள்கைகளை தங்கள் ஆபீசிலிருந்து வெளியான புத்தகங்களிலிருந்தும் எடுத்துக்காட்டும் படியாகச் சொல்வது பொருத்தமற்றதல்லவா?

குர்பானித்தோல் மக்மை நன்கொடை முதலிய பலவிதமாக எமாற்றியாச்சம்புரிந்து பொருள் சேர்த்த பொதுக்கணக்கை வெளியிடாத முஸல்மான் ஆசிரியர்தானு? எமக்கு வெகுமதியளிப்பது?

ஏ ஆசிரியரே தங்களைச்சரிவாக் கற்கவில்லை எனக்கூறியதைக்கண்டு ஆத்திரங்கொண்டெழுதிய தாங்கள் பாண்டித்தியம் பெற்றதாய்க்கூறும் உருதுபாஷையிலுள்ள ஒரே ஒருகவியை நகல் செய்த தாங்கள் அக்கவியில் கூறுகிறபடி பொருள்எழுத ஆற்றலற்றுப்போனதென்ன? ஒருக்கால் தாங்கள் நீண்டஜுப்பா அணிந்

திருப்பதுபற்றியே அதைக்கூறவெட்கிப்பொருளில் ஜுப்பா என்பதை எழுதவிட்டார்கள்போலும் ஆனால்

### எழுசீர் விருத்தம்

இறைவனை வணங்குவதிலே தன்னுயு
னெல்லையைக் கழிக்கும் ஆபீதைக்
கறைபடும் லஙனத்துடைய ஷைத்தானுங்
களிப்பொடு நீண்ட ஜுப்பாவும்
முறையுடனணிந்தே வேஷமும் போட்டு
முதியவரெனவும் முன்வந்து
நிறைவழி கெடுத்தானெனச் சொலவுலகில்
நிதஞ்சொலும் புதுமொழியலவே.

### உருதுக்கவி

லிபாஸே அஹ்லதீன் தர்பர் கபானத்ஹே பரீதில்மே
எஹைறன் இப்லீஸ் கேசாயிப் உன்ஹீன் ஆதாஹேபஷ்காஞ

(இ—ள்) தேகத்தில் தீன்தாருடைய உடையையணிந்துகொண்டுஇருதயத்தில் ஆபாசம் நிறைந்திருக்கின்றவர்கள் இப்லீசின் பிரதிநிதியாயிருந்து வழிகெடுக்கவும் கலக்கவும் வருகிறார்கள் (எ—று)

### பார்ஸிக்கவி

லிபாஸோஸ்தான்பாஷத்ரஷாயானேரியாகாரான்
குஹின் ஸல்காஷ்திநாதான் அஸோஷக்கர்நமிருயத்

(இ—ள்) சரியானபாதையில்நடப்பவர்களுடைய உடைமுனுபிக்களுக்கு லாயக்கில்லை எனெனில் கும்மட்டிகாயின் வித்தை விதைத்தால் மடையனே சர்க்கரையைத்தரும்கரும்பு முளையாததுபோல (எ—று)

### அறபிக்கவி

மன்கான ஆததஹூம் பஹ்ஷா அநுஸ்ஹதுஹூம்
கித்ருன் யுஸப்பு முதாபஸ லீஸூமாகிஹிம்
இன்னல் கனுபீஸஇத்ாமா மஸ்ஸஹா அதருன்
ஸஈதத்லிகைஸூமிஹாதத்தி புலம்பகும்

(இ--ள்) துர்நாற்றமுடைய மலத்தை உருட்டுகின்ற மலவண்டின் நாசியில் அத்தரின்வாசனை பட்டதும் மாண்டு போவது போல கெட்ட வளமையுடையவனுக்குப்புரியும் நல்லுபதேசமானது அவன்காதில் ஈயத்தை உருக்கிவிட்டது போலிருக்கும் (எ-று)

மனிதர்களில் நின்றும் சிலபேர் அவர்கள் யாதொரு (மார்க்க)கல்வியன்றியும்ரசூலில் நின்றும் நேர்வழியறியும் அல்லா(ஹ்)இறக்கின இலாம்பரமான வேதமின்றியும் தர்க்கம் பேசுவார்கள்''— (குர்ஆன்)

''அவர்கள்புரிந்துவந்த மாறுன்காரியத்தை ஷைத்தான் அவர்களுக்கு அழகாக்கிவைத்துவிட்டான்''— (குர்ஆன்)

ஆராய்ச்சியின் 10வது பாராவில்;– "எ மறுப்புரை வெளியிட்டவள்ளலே, தாங்கள் எந்தநோக்கத்துடன் இம்மறுப்புரை வெளியிடத்துணிந்தீர்கள், சுன்னத்வல்ஜமாஅத்துக்கு முரணான கொள்கைகளிருந்தால் அதைவெளியிட்டு மறுக்கவேண்டுமென்பதன்றோ தங்கள் நோக்கம் அவ்வாறாயின் எம்முஸல்மான் கோஷ்டியாரின் சுன்னத்வல் ஜமாஅத்துக்கு முரணான கொள்கைகளைஎம்சஞ்சிகைகளிலிருந்து எந்தப்பக்கத்தில் நகல்செய்து எவ்வாறு மறுத்திருக்கிறீர்கள் காட்டுவீர்கள் அப்படிக்காட்டினால்தாங்கள்பிரயாசையுடன் எழுதினதும் புத்தகந்தான் தாங்களும் ஆண்பிள்ளைதான் புத்தகம் எழுதுவதும் பிரசுரிப்பதும் தமதுநோக்கத்தை வெளியிடுவதற்கேயன்றிவேறன்று தாங்கள்"முஸல்மான் கோஷ்டியாரின் முரணான கொள்கைகட்கு முக்கியமறுப்பு" என்று நாமஞ்சூட்டியதற்கிணங்க எந்த கொள்கையை ஆதாரத்துடன் எழுதி மறுப்புரை கொடுத்திருக்கிறீர்கள்" எனக்கூறப்படுகிறது.

எ, ஆராய்ச்சிவெளியிட்டவள்ளலே! தங்களுக்கிவ்வளவு அறிவேனும்ஏற்பட்டது அபூர்வமே இந்தவிதமான அறிவோடாவது. எமதுமறுப்பை ஆதிமுதல் அந்தம்வரை. வாசிப்பீர்களாயின். தாங்கள்இவ்வாறுஎழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது எமது மறுப்பின் 8, 9, 10, 11, 12, 23 முதலியபக்கங்கள் தங்கள்பார்வைக்குத்தென்படாமல்போனதென்ன? ஷ பக்கங்களில்காணப்

பிப்பவைகள் தங்கள் முஸல்மானில் வெளிவரவில்லை என்றே னும் அல்லது அவைகளில் காணப்படும் மௌலீதுஷரீப், குர்ஆன் ஷரீப் கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்னுங் கொள்கை சுன்னத் வல்ஜமாஅத்திற்கு மாற்றமானதில்லை என்றேனும் மறுக்காமல் குருடர்கள் யானையைக்கண்ட கதைபோல் மறுப்பைக்கண்டு மயங்கிப் பேதலிப்பாய்ப்பிதற்றுவானேன்?

முனாபிக்குக்கு உவமையாவது; இரண்டு ஆட்டுமந்தைக் கிடையில் திரிகின்ற ஆட்டுக்கிடாவைப் போலிருக்கும்; அது ஒரு முறை இந்தக்கிடையிலும் ஒருமுறை அந்தக்கிடையிலும்மிரளும்.
—(ஹதீது)

இந்தநாயக் நல்வாக்கியத்தில் கூறுகிறபடிக்கில்லாமலிருப் பின் உண்மையை மறைத்து ஆராய்ச்சியெழுதவேண்டிய அவசிய மில்லையே தங்களிடத்தில் வஞ்சகமான கொள்கையில்லையாயின் இதுவரை கூறியும் எழுதியும் வந்ததுபோல் மௌலீது ஷரீப், குர் ஆன் ஷரீப்; கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்றும் தங்கள் தா வாவை அருதலி ஆமக்கள்கொண்ட கதைபோலல்லாமல் ஆதா வுடன் வெளியிட்டு, ஸ்தாபித்தல்வேண்டும் இன்றேல், குர்ஆன் ஷரீப் ஓதப்படாதென்பது, குப்ரியத்தென்றும், மௌலீது ஷரீப்; கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்பது வழிகெட்ட வஹ்ஹாபி களின் கொள்கை என்றும் ஏன்கூறக்கூடாது. இரண்டுமின்றி இங்கும் விடாமல் அங்கும் விடாமல் அலங்கோலப்படுவது எம் பெருமானார் அவர்கள் அருளியிருப்பதுபோல் முனாபிக்தன மல்லவா?

“ஓ! மூமினானவர்களே நீங்கள் முனாபிக்கானவர்களுடைய கருமத்தினால் இருபிரிவான கூட்டத்தினராக இருக்க உங்களுக் கென்ன காரணம் உண்டானது.”— (குர்ஆன்)

என்னும் வேதவாக்கியத்தை யுணர்ந்த உண்மை முஸ்லீம் கள் ஒவ்வொருவரும்; தென்காசி முஸல்மான் ஆசிரியர் எம் முஸல்மான் ஆசிரியர், எம் முஸல்மான் கோஷ்டியினர், எனக்கூறி யதைக்கண்டபின்னும் இவர்கள் இவ்வாறு வேறுபிரிவினர்களாக்

விதர்ப்பங்காட்டி இருபிரிவாகப்பிரிந்து நிற்பது முனுபிக்சானவர்களுடைய கருமத்தினுலேயேயன்றி வேறெதற்கு என்பதைக் கவனிப்பார்களாக.

இப்னுஅப்துல் வஹ்ஹாப் என்பவரைப் பின்பற்றுகிறவர்களை வஹ்ஹாபி என்றழைப்பதுபோல முஸல்மான் ஆசிரியராகிய தாங்கள், "எம்முஸல்மான் கோஷ்டியார்" எனக் கூறுவதிலிருந்து தங்களால் உப தேசிக்கப்படும்; மதவிரோதமான கொள்கைகளைப் பின்பற்றுவோர்களே தங்கள் முஸல்மான் கோஷ்டியார்" என்பதற்கையமில்லையல்லவா? இந்த முஸல்மான் கோஷ்டியாருக்கும், சுன்னத்துவல் ஜமாஅத்து முஸ்லீம்களுக்கும் கொள்கையில் ஏற்றவும் மாற்றமாயிருந்தும் சுன்னத்துவல் ஜமாஅத்து முஸ்லீம்களிடம் இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதாய்ச் சொல்லி குர்பானித் தோல்மமை நன்கொடைமுதலியனவசூலித்து ஒத்திக்குச்சொத்தும் வாங்கி வேறு தொகைகளும் ஒதுக்கி வைத்துக்கொண்டு வஹ்ஹாபி பிரசாரம் செய்வதேன்? தங்களின் பூர்வீக ஐவேஜ் பூச்சியம் என்பது எல்லோர்களுமறிந்ததே. பொது ஜனங்களை ஏமாற்றி மதப்பிரசாரஞ் செய்வதாய்ச் சொல்லி வஞ்சகமாய் பொருள் வசூலித்து தானு வயிறு வளர்ந்து ஒத்திக்குஞ் சொத்து வாங்கவேண்டும்?

எமது மறுப்பில் முஸல்மான் சஞ்சிகையிலிருந்து எடுத்தெழுதி ஆதரவு காட்டியதொருபுறமிருக்கட்டும் தங்கள் சஞ்சிகையில் வெளியாகும் விஷயம் இன்னதென்றுகூடத் தெரியாத அவ்வளவு மோசமான தடி போடும் தற்குறி ஆசாமியாயிருக்குதானு? ஆசிரியர் பதவியை வகிக்கிறீர்கள் இல்லையேல் இவ்வாறு ஆராய்ச்சி எழுதவேண்டியதில்லையே தாங்கள் எழுதிய ஆராய்ச்சியிலெங்காவது தாங்களேனும் தங்கள் கோஷ்டியார்களேனும மௌலீதுஷரீப், குர்ஆன் ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்றும் அதற்குக் கூலிகொடுக்கக்கூடாதென்றும் கூறவில்லையென்றேதேனும் ஒருவார்த்தையாவது கூறியிருக்கிறீர்களா? தட்டிக்கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பதுபோல சுன்னத்வல் ஜமாஅத்துக்கு முரணுன கொள்கைகளிருந்தால் அதை எடுத்துக் காட்டி விளக்கி மறுப்பு எழுதவில்லையென்று பெண்களைப்போல் முக்காட்டுக்குள் விழுங்கி விழுங்கிப் பேசுவானேன்?என்போன்ற ஆண்பிள்ளையாயின் மௌலீது ஷரீப், குர்ஆன் ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்றும் தங்கள் கொள்கை சுன்னத்வல்ஜமாஅத்திற்கு மாற்றமானதில்லை என்பதை ஏன் எடுத்துக்காட்டக்கூடாது. பூனை தன்கண்ணை மூடிக்கொள்வதால் கண்

தெரியாதிருப்பதுகண்டு தன்னைப்போல் உலகத்தினரின் கண்களெல்லாந் தெரியாதெனத் நினைப்பதே போன்று விவாதத்திற்குரிய தங்கள் குழாத்தினரின் கொள்கைகளை விளக்கி ஒன்றுங்கூறுது ஒழிந்து நின்றுகொண்டு வேறுவதேதெல்லாமோஎழுதியிருப்பதால்தங்களின்குட்டுகன்குவெளியாகிவிட்டதால் சிறிது சந்தேகமேற்பட்டவர்களும் தங்கள் ஆராய்ச்சியை அலசிப்பார்த்து உண்மையை யுணர்ந்து திருப்தியாய் வஹ்ஹாபி என்பதை தெரிந்துகொண்டனர்.

இவ்வாறுதங்கள் சாயம்வெளுத்து நிற்பதற்குச்சான்ருக முன்வந்த எமதுமறுப்புப்புத்தகமில்லை என்றும் ஒழிமறைவாக முக்காடிட்டு மூலை முடுக்குகளில் முணுபித்தனமாக வஹ்ஹாபிக்கொள்கையைஉபதேசிக்கும் தங்களை சந்திக்கிழுத்தமாதிரியாக மறுப்பு எழுதிய என்னை ஆண்பிள்ளைதானு? என்றும் எந்த அறிவுள்ளவனும் நினைக்கமாட்டான் தங்களைப்போன்ற அறிவற்றவர்களே தமது அறியாமையை விளக்குதற்கு அவ்வாறு எழுதவேண்டும்.

முஸல்மான் கோஷ்டியாரின் மூாணை கொள்கைகட்கு முக்கிய மறுப்பு என்று நாமஞ்சூட்டியதற்கிணங்க எந்தக்கொள்கையை ஆதாரத்துடன் எழுதி மறுப்பு எழுதியிருக்கிறீர்கள் எனவினவும் தாங்கள் தங்களின் ஆராய்ச்சி 4-வது பாராவில் முஸல்மான் கோஷ்டியாரின் மீது அருவருக்கத்தக்க பெரய்களையும், பாரப்பழிமொழிகளையுஞ் சுமத்தி இப்லீசின் வயப்பட்டுவிட்டதை நன்கு ஸ்தாபித்துவிட்டீர்கள் என்று எழுதியது எதைஆராய்ச்சிசெய்து எழுதினீர்கள். தங்கள் சஞ்சிகையில் வெளியானதை எடுத்தெழுதியும் அதை அறியும் ஆற்றலற்று கண்டவாறு எழுதுவதைப் பார்க்க.

(செய்யுள்.)

"கட்டியெருவிட்டுச்செழுந்தேனைவார்க்கினுங்
காஞ்சிரங்கைப்புவிடுமோ
கழுதையைக்கட்டியே கொள்ளுணவையூட்டினுங்
கதிபெருங்குதிரையாமோ
குட்டியரவுக்கமுது தந்தே வளர்க்கினுங்
கொடுவிடமலாது தருமோ
குக்கனெடுவாலுக்கு மட்டையைக்கட்டினுங்
கோணுமலே நிமிருமோ

மட்டிகட் காயிரம் புத்திசொன்னாலுமதன்
மார்க்க மரியாதை வருமோ''

என்பதேபோன்று மௌலீதுஷரீப்,குர்ஆன்ஷரீப்,கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்பது மதவிரோதமான தெனமறுப்பில் கூறியும் எந்தக்கொள்கையை எவ்வாறு மறுத்திருக்கிறீர்கள் காட்டுங்கள் எனஆராய்ச்சியில் எழுதியிருக்கிறது மௌலீதுஷரீப்,குர்ஆன்ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதலாகாதெனத்தடைபுரிவது சுன்னத்வல் ஜமாஅத்தின் கொள்கைப்படி தானென்பதைத் தாங்கள் ஏன்விளக்கக்கூடாது அதின்றி ஆராய்ச்சிஎன்று அபத்தமாயெழுதிக்காணுகிறது.

ஆராய்ச்சியின் 11வது பாராவில்:—"அருமை ஆசிரியரே! இவ்வளவு வேகமாக எழுதப்பட்ட மறுப்புப் புத்தகத்தில் முஸல்மான் கோஷ்டியாரின் முரணானகொள்கைகள் ஒன்றையும் விபரிக்காது "எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான் படித்தவன்பாட்டைக் கெடுத்தான்" என்பது போன்று கண்டவாறெல்லாம் பிதற்றுவதாயின் பேட்டையிலுள்ள கல்விமான்கள்நகைத்துவிடமாட்டார்களா? முஸல்மான் சஞ்சிகையிலுள்ள பல விஷயங்களை மாற்றி எழுதிக்கொண்டு முஸல்மானைத்தானே அவதூறு சொல்ல முன்வந்த தங்களது பொய்க்கூற்றைக்கண்டித்து.தங்களது குரும்பை தொலைத்து மமதையை நாசஞ்செய்து விடமாட்டார்களென்று நினைக்கிறீர்கள் அவிடத்திலுள்ள கல்விமான்களிடம்காட்டிப்புத்தி கற்றுக்கொள்க,,எனஎழுதி இருக்கிறது.

ஏ,அண்டப்புழுகாகிய ஆசிரியரே! முஸல்மான் சஞ்சிகையிலுள்ள விஷயங்களை மாற்றிவெளியிட்டதாய்க்கூறும் நீவிர் கொஞ்சமாவது யோக்கியதையுடையோராயின் அவ்வாறு மாற்றி எழுதப்பட்டதென்று ஒன்றையேனும் குறிப்பிடாமல் வேலையற்ற அம்பட்டன் கழுதையைப்பிடித்துச் சிரைத்தான் என்பதுபோல் ஆராய்ச்சியும் எழுதிவிட்டீர்களே "படித்தவன் பாட்டைக்கெடுத்தான் எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான்" என்னும் உவமானம்

மேலேக்காட்டியஒரேஒரு விஷயத்தாலேனும் தங்களுக்கே சாலச் சிறந்ததாயிருப்பதைக்காண்க.

ஏ, ஆகாயப்புழுகராகிய ஆசிரியரே! தங்கள் முஸல்மானில் வெளியானவைகளையே எமதுமறுப்பில் ஆதாரவுகாட்டி எழுதியுள்ளோன் அவ்வாறு எழுதியதை வேகமாயெழுதியதாகக் குறைகூறுவது தங்களின் அறியாமையே எழுதுவதில் வேகமாயெழுதுகிறவர்களும், மெதுவா யெழுதுகிறவர்களும் எங்குமிருப்பர் என்பது எல்லோருமறிந்ததே ஆனாலதை அறியாததானிவ்வாறு எழுதினீர்களா? அல்லது கல்விசூன்யத்தினால் விரைவாக வெளியிட்டீர்கள் என்பதற்குப் பதிலாகத்தான் இவ்வாறு எழுதினீர்களா? எனினும் சென்ற 1926-ம்ஹூ முதல் நாளது 1928 ம் ஹூ மேயீ வரை வெளியான முஸல்மானில் காணப்படுகிற வெறுக்கத்தக்க விஷயங்களையே எமது மறுப்பில் ஆதாரவுகாட்டி எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் எமதுமறுப்பு வெளியான மறுமாசமே ஆத்திரமும் க்ஷாத்திரமுங்கொண்டு பொறுமையால் வயிற்றுப் பொருமல்ஏற்பட்டதாலன்றோ! குரோதமும் விரோதமுங்காட்டித் தப்புந்தவறுமாய்நீசத்தனமாகஆராய்ச்சியென்றுஎழுதிவிட்டீர்கள் அதுபோல் நாலும் மறுப்பு எழுதாமல் இரண்டு வருஷமாக முஸல்மானில் வெளியான தவறுகளைப் பொதுவாகத் திருக்குர்ஆன் ஷரீப், ஹதீது ஷரீப்களால் விளக்கி மறுப்பு எழுதியிருப்பதை வேகமா யெழுதப் பட்டதென்றோ விரைவாக யெழுதப்பட்டதென்றோ கூறுவது முழுமுடத்தனமேயாகும்.

தங்களின் வயிற்றுப் பிழைப்புக்கும், வழிகெடுப்பதற்கும் "முஸல்மான்" நடத்தவில்லையாயின் வேதமும், வேதாம்பரும் விதித்துள்ள விதிகளை ஒப்பி மௌலூதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்பது வழிகெட்ட வஹ்ஹாபிகளின் கொள்கைதான் என்பதை யாதோர் மறைவின்றிக்கூறி "முஸல்மான் கோஷ்டியாரின்" இத்தவறான கொள்கைகளைத் தடையின்றி நீக்கித் தௌபாச்செய்து சுன்னத்வல்ஜமாஅத்தின் கொள்கையையே அனுசரிக்கிறோம் எனக்கூறலாமே, அதின்றி

அதுவிஷயமாயொன்றுங் கூருது தங்கள் கொள்கைகளைத் திரைமறைவில் வைத்துக்கொண்டு "எம் முஸல்மான் கோஷ்டியாரின்" தவரானகொள்கையைக்காட்டவில்லை எனக்கூறுவதால்மௌலீது ஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகாதெனத்தடைபுரிதல் சுன்னத்வல்ஜமாஅத்து கொள்கைகளுக்கு விரோதமானதில்லை என்பதே தங்களின் கொள்கை என்பது ருசுவாகின்றன அப்படியாயின் இனியும் தாங்கள் திரைமறைவில் ஒழிப்பானேன் தங்களின் உள்க்கிடையை யொழியாமல் உள்ளா உள்ளபடி எழுதலாமே அதின்றி அபத்தக்களஞ்சியமாக ஆராய்ச்சி வெளிவர வேண்டிய அவசியமில்லையே?

"கேடுவரும்பின்னே மதிகெட்டுவருமுன்னே" என்பதற்கொப்ப தங்களுக்குக்கேடுசமீபித்திருப்பது கொண்டே "கெடுமதி கண்ணுக்குத்தோற்ரு" தென்பதற்கிசைய கண்டவாறெல்லாம் கத்துகிறீர்கள் தங்களைப் பிடித்தகேடு இம்மட்டோடாவது தங்கள் தவறையுணர்ந்து தௌபாச்செய்து தவிழ்ந்துகொள்ளச் செய்யாவிடில் வஹ்ஹாபிப் பத்திரிகையை வாங்கிவாசிக்க சுன்னத்வல் ஜமாஅத் முஸ்லீம்கள் விரும்ப மாட்டார்களாகையினல் தங்கள் ஆசிரியர் பதவிக்கே சாவுமணி அடிக்கப்பட்டுவிடுமென்பதை அறிவீர்களாக.

ஆரிய மதத்தினர் மறுஜன்மத்தில் நம்பிக்கைகொண்டு திதி முதலியன கொடுக்கப்படாதென்று, சத்தியார்த்தப் பிரகாசம் போதிப்பதேபோன்று, முஸல்மான் ஆசிரியராகிய தாங்களும் மறுஜன்மத்தில் நம்பிக்கைகொண்டே, மௌலீது ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்று, தடைபுரிகிறீர்களோ?

ஏ! அபத்தக் களஞ்சியமாகிய ஆசிரியரே! தாங்கள் பிரசாரஞ் செய்துவருவதும் தங்கள் "முஸல்மான் கோஷ்டியாரின்" கொள்கையுமாகிய மௌலீது ஷரீப், குர்ஆன் ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்னும் மதவிரோதமான கொள்கையைச் சாதாரண ஜனங்கள் ஏமாற்றமாயேற்காமலும் சுன்னத்வல் ஜமா

அத்தின் கொள்கையைப் பொதுமக்கள் அறிந்து எச்சரிக்கை அடையவும் கூடுமானால் தாங்களும் தங்கள் கோஷ்டியினரும் தௌபாச்செய்து மீளவும் விரும்பியே மறுப்பு எழுதினேன் அணைகடந்த அறிவினராகிய தாங்கள் உருதுக்கவிக்கு உரை எழுதியதுபோல் அதற்கு ஆராய்ச்சி அபத்தமாக வெளியிட்டு தங்கள் அறியாமையைக் காட்டிவிட்டீர்கள் இவ்வளவு கல்விக்கடலாகிய தாங்கள் இஸ்லாமியப் பிரசாரஞ் செய்வதாய்ச் சொல்லி தென்காசியில் ஹிதாயத்துல் இஹ்வான் சங்கம் ஏற்படுத்திப்பொது ஜனங்களின் பொருளுதவியால் "இஸ்லாமத விளக்கம்" என்னும் சஞ்சிகையை ஓராண்டு நடத்தி சந்தாதார்களைச்சேர்த்து முஸல்மான் என்று பேர்மாற்றி அதற்காசிரியரெனக்கூறி குர்பானித் தோல் மகமை, நன்கொடை முதலியதுகளும் வசூலித்து சொத்து சுகதி வாங்குவதற்கும் ஒதுக்கித்திரட்டுவதற்கும் சாதகமாய் சாதாரண ஜனங்கள் உதவிபுரிந்ததே.

"நன்றிகைக்கொண்ட மாந்தர் நட்பினை நயந்தாரானல்
நன்றியேயடைந்து நிற்பர் நடுந்தரவொழுக்கமுள்ளோர்
பன்றியைக் கன்றுசேர்ந்து பான்மையையிழந்ததைப்போல்
நன்றியில்லாரை நட்டால் நலங்குலைந்தலைவர்மாதோ"

என்பதுபோல் நன்றியற்று மௌலீது ஷரீப், குர்ஆன் ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்ற வஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்பி பஸாதையும் பித்னாவையும் விளைவிக்கத் தலைப்பட்டீர்கள் போலும் இத்தகைய தங்களின் கூற்றுகளைக்கண்டு தென்காசியின் கண்யமிக்க கல்விமான் களெல்லோர்களும் தங்களை நகைப்பதைக்கொண்டு தங்களின் தவறை விளக்க முன்வந்த எமது மறுப்பைக்கண்டோர்களும் நகைப்பர் என எழுதினீர்கள் போலும் தங்களைப்போல்வேதமும் வேதாம்பரும் உரைத்தஉயர் திருவாக்கியங்களை ஆதாரவு காட்டும்நூல்களை அவமதித்து நகைப்பவர்கள் இஸ்லாத்திலேயே யில்லா திருக்கையில் எம்மூரின் கல்விமான்கள் நகைக்கமாட்டார்களா? எனக்கூறுவது தங்களின் மூடமதியல்லவா?

ஏ, மூடமதி படைத்த முஸல்மான் ஆசிரியரே மௌலீது ஷரீப் குர்ஆன்ஷரீப் சத்தம் பாத்திஹா ஓதப்படாதென தாங்களும் தங்கள் கோஷ்டியினருங்கூறி சுன்னத்வல்ஜமா அத்தின் கொள்கைக்கு முரணனதாயிருந்தால் எடுத்துக்காட்டுங்கள் பார்ப்போம் என்று தாங்கள் எழுதுவதைப்பார்க்க தென்காசி யிலுள்ள கௌரவமிக்க கல்விமான்கள் இதுவரைத்தங்களைக் கண்டிக்கவில்லைஎன்றே எண்ணவேண்டியதாகிறது எனினும் இஸ்லாத்தையும், தென்காசியையும் கரைபடுத்துவ தற்காகவே கங்கணங்கட்டி நிற்கும் தங்களின் குரும்பையும் தொலைத்து மமதையை நாசஞ்செய்து அகங்காரத்தை அழித்து நற்புத்திகற்பிப்பதோடு அல்லா(ஹ்) வையும் ரசூலையும் ஆதரவுவைத்த சுன்னத்வல் ஜமாஅத் முஸ்லீம்கள் ஒவ்வொருவரும் வழிகெட்ட வஹ்ஹாபிக்கொள்கையினராகியமுஸல்மான் கோஷ்டியினரை ஜமாஅத்தை விட்டும் நீக்கி ஒதுங்கிக்கொள்ள மாட்டார்களென்று நினைக்கின்றீர்கள் "நாசகாலம் விபரீதபுத்தி" என்பதுபோல் தங்களுக்கு நாசகாலம் ஏற்பட்டிருப்பதின் காரணத்தாலேயே இவ்விதவிபரீதபுத்தி ஏற்பட்டிருக்கிறது அல்லா(ஹ்) நாடினல் நிரம்பசமீபத்திலேயே தங்களுக்கு கெட்டகாலம் கிட்டிவிடும்.

தாங்கள் செய்துவரும் மதவிரோதமான பிரசாரத்தை அறியாமலும் முஸல்மான் சஞ்சிகையில் இதுகாறும் வெளியானவைகளைக்கண்டு சாந்தமும் சமாதானமுமாயிருந்த சந்தாதார்களில் ஒருசிலராவது தங்களின் தவறைக்கண்டித்து எழுதுவதோடு உயர்தர உருதியுடைய உண்மை முஸ்லீம்களெல்லோர்களும் பகிஷ்காரம் செய்யாமல் இனியும் முன்போல் இருப்பார்களென்று! எண்ணுகிறீர்கள்.

ஆராய்ச்சியின் 12-வது பாராவில்:— "ஏ! மறுப்புரை வெளியிட்ட அறிஞரே! முஸல்மானின் முரணன கொள்கைகளை வெளியிட வந்த நீவிர் மறுப்பெழுதுவதற்குறிய தர்க்கமுறைகளை குறைந்தபக்ஷம் ஒருவாரமேனும் கற்றுக்கொண்டு வரலாகாதா? பொறுமையும் துவேஷமும் என்றமல்லூனின் தூண்டுதலாகிறது என்றென்றைக்கும் தங்களுக்கு இத்தகைய சிறுமையைக் கொடுத்ததைக் குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். ஏ! ஜனப் தர்க்கிக்கவேண்டிய முறையைக் கேட்பீராக" என்று வரைந்திருக்கிறது.

ஏ, ஆராய்ச்சி வெளியிட்ட அறிஞரே! தாங்கள் ஆராய்ச்சி எழு

கிய முறைதான் தர்க்கமுறையோ? இம்முறைகளைத்தாங்கள் எக்தக் கல்லூரியில் கற்றீர்கள் கற்றிருந்தாலு இவ்வாறுஅயத்தனமாக எழுத முன் வந்தீர்கள் ஒழுங்கான தர்க்கமுறையை ஒருநாளேனும் கற்றிருப்பீர்களேல் என்னை ஒருவாரமேனும் கற்றுக்கொண்டு வரலாகாதா எனக்கூறத்துணிய மாட்டீர்களல்லவா? எனினும் தங்கள்கனவிலும் அறியாததர்க்கசாஸ்திரத்தைப்பற்றித் தங்களிடம் தர்க்கம்புரிவதற்கு நான்முன்வரவில்லையே தங்களின் மதவிரோதமான காரியங்களைத்தவிர்க்கவே மறுப்பு எழுதியுள்ளேன் மதவிரோதமான காரியத்திலீடுபட்ட தாங்கள் அதற்குப் பதில்கூற மதியில்லாது தர்க்கசாஸ்திரத்தைத் தழாவப்போவானேன்.

வழிகெட்ட வஹ்ஹாபி மதத்தை ஸ்தாபித்த இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜதி என்பவர் தர்க்க சாஸ்திரத்தைக் கற்பதற்காக ஹிந்துஸ்தானியில் வந்து கற்றபின்பேதமது புதுமதத்தைப்போதிக்கத்துணிந்தார் என்று நூல்கள்முறையிடுவதுபோல் தாங்களும் தர்க்கசாஸ்திரத்தைக் குறுக்கே போடுவதைப்பார்க்க மதகாரியங்களை வெறுக்கத்தக்க விதத்தில் விதண்டாவிவாதம் புரியத்துணிந்தே இவ்வாறு எழுதினீர்கள்போலும்.

மதவிரோதமான காரியங்களைச்செய்தும், எழுதியும், எம்மை மறுப்பு எழுதும்படியாகச்செய்தும், அம்மறுப்பைக்கண்டு பொறுமையும் துவேஷமுங்கொண்டு அபத்தமாய் ஆராய்ச்சி வெளியிட்டு இன்னூலையும் என்னை யெழுதும்படியாகவும் தூண்டியவர் தாங்கள்தானே என்னைத் தூண்டியவர் மல்ஊனுயின் முஸல்மான் ஆசிரியராகிய தாங்கள்தானே மல்ஊனாக வெளிவந்திருக்கிறீர்கள் தாங்கள் கூறுகிறபடி மல்ஊனாகிய தங்களுடையவழிகேட்டை விலக்குவதற்காகவே மறுப்புஎழுதியநான் அந்தமல்ஊனாலேற்படும் சிறுமையையாவது பெருமையையாவது எதிர்பார்த்ததில்லையே மல்ஊனோடுபோராடி அக்கொடும்பாவியின் வழிகேட்டிலகப்படாமல் தற்காத்துக்கொள்ள வேண்டியது அவசியமென்பதை ஒவ்வொரு முஸ்லிம்களும் அறிவர் ஆகையினால் தாங்கள்கூறுவதேபோல் மல்ஊனாகியதங்களின் மல்ஊன்தனத்தால் எது வந்து சேரினும் மாறினும் அவைகளை நான் பொருட்படுத்துவதாயில்லை என்பதையுணர்வீர்களாக.

ஏ, வழிகெடுக்கும் மல்ஊனே! தாங்கள் மல்ஊனாக முன்வருவது வழிகெடுப்பதற்கன்றி வேறெதற்கு மல்ஊனாகிய தாங்கள் எனக்கு இத்தகைய சிறுமையைக் கொடுத்ததைக் குறித்துப் பெரிதும் வருந்துகிறோம்'' எனவும் எழுதியிருக்கிறீர்களே மல்ஊனுக்கு இரக்கமிருப்பின் வழிகெடுப்ப

திலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பானு? இதெல்லாம் கபடதந்திரவார்த்தையே யன்றி வேறென்ன? எ, ஜனுபே

வெண்பா

"பாடப் படிக்க வெழுதப் பயன்சொல்லக்
கோடாமல்வந்துங் குணமில்லேசிடாகேள்
சித்திரத்திபம்போல சிந்தைதனைநிருத்திச்
செத்தசவம் போலேதிரி"

என்னும் கவியை கவனிப்பீர்களாக.

ஆராய்ச்சியின் 13-வது பாராவில்:— "மார்க்கத்திற்கு மாருக நடக்கும் ஒருவரின் குறைகளை வெளியிட்டு மறுப்பதாயின் முதன் முதல் அவன் கொள்கைகளையும் சொற்களையும் அவனது நூற்களால் பக்க ஆதாரத்துடன் வரைதல்வேண்டும். பின்னர் சுன்னத்வல் ஜமாஅத்துகளின் ஒழுங்குப்படி மறுத்து அதன்பின் பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். எனவே இம்முறை ஒப்பத்தக்கதென உணரும் பக்ஷம் நீவிர் வரைந்துள்ள மறுப்புப்புத்தகத்தில் எங்கேனும் இவ்வாறு மறுத்துக்காட்டியிருக்கிறதா? காண்பிக்கமுடியுமா இன்றேல் ஜனங்களை வஞ்சித்து வயிறு வளர்ப்பதும், மார்க்கோபதேசிகளை உபதேசிக்காவண்ணம் தடைபுரிவதும், இல்லாத பழிமொழிகளைச் சுமத்தி பொய்ப்பறை சாற்றவலும் விரட்டப்பட்ட மல்ஊனுசிய இப்லீஸின் செயலென்பதை எல்லாமறிந்த தாங்கள் உணர்ந்துகொள்வீர்களாக" என்று வரையப்பட்டிருக்கிறது.

"அல்லா(ஹ்) அவர்கள் இருதயங்களும் திருப்பிவிட்டான் மெய்யாக (அவர்கள்) விளக்கமற்ற கூட்டத்தினரா யிருக்குங்காரணத்தால்"—
(குர்ஆன்.)

என்னும் வேத வாக்கியப்படி முஸல்மான் ஆசிரியர் விளக்கமற்ற கூட்டத்தினராயிருப்பதால் அவர்கள் இருதயங்களும் இவ்வாறு திரும்பி விட்டனபோலும்.

எ, காக ஈயாரே! சுன்னத்வல் ஜமாஅத்திற்கு மாருக நடக்கும் தங்கள் கோஷ்டியினரின் கொள்கைகளை வெளியிட்டு நான் மறுப்பு எழுதி

வில்லையாயின் தங்கள்கோஷ்டியினரின் கொள்கைகளை வெளியிடாத தென்றுகூறும் எமதுமறுப்பு நூலுக்கு தாங்கள் அறிவற்று ஆராய்ச்சிஎழுத வேண்டிய அவசியந்தானென்னை?சந்தாதார்களின் சகாயத்தால் சஞ்சிகை நடத்துவதற்கு சாதக மேற்பட்டிருப்பதே யாரையும் இழிகுணத்தோடு ஏசவும் பேசவும்இடம்பெற்று இவ்வாறு ஆராய்ச்சி எழுதிவெளியிட்டீர் களோ?

ஜவாபு வந்தால் வெளியிடலாம் என்று எவ்வளவோ கெம்பீரமாக சஞ்சிகையில் வெளியிட்டதாங்கள் எமதுமறுப்புநூலைக்கண்டு மயங்கி தங்கள்சஞ்சிகையில் பிரசுரிக்கும்படியாகக்கூறி இருந்தும் பிரசுரிக்காமல் மறுத்து ஆத்திரத்தோடு ஆராய்ச்சி எழுதி வெளியிட்டதிலிருந்தே தங்கள் யோக்கியதை வெளியாக வில்லையா?

“முஸல்மான்” ஆசிரியராகிய தாங்களும்; தங்கள்கோஷ்டியாரும் மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்று தென்காசியில் தடைபுரிந்ததாக வதந்தியும் சில சிற்றூர்களில் மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்று பிரசாரஞ்செய்ததாய்ப் புகாரும்; ஏற்பட்டுக் கொண்டிருப்பதையுங்கூட எடுத்துக்காட்டாமல் 1926-ம் ஷு அக்டோபர் மீ வெளியான “முஸல்மான்” சஞ்சிகையின் 100-வது பக்கத்தில் மௌ லீது ஷரீப், குர்ஆன் ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும்; அதற்குக் கூலி கொடுக்கலாகாதென்றும்; கூறுவோரை வஹ்ஹாபி என்று பொதுஜனங்களுள்ளும் ஆலிம்களும் பேசிக்கொள்வதால் வஹ்ஹாபி என்பதுயார் என்பது போன்ற நான்கு கேள்விகளுக்கு விடை பகர உல மாக்கள் சமூகம் வேண்டுகிறேன் என பிரசுரிக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டியே மறுப்புநூல் எழுதினேன் ஆனுலிப்பொழுதோ முஸல்மான் ஆசிரியராகிய தாங்களும் தங்கள் சகாக்களில் சிலருமாக மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்று வடகரையில் பிரசாரஞ் செய்ததாய் ஷையூர் ஜனுப் வ. ரஜப்பக்கீர் இராவுத்தரவர்களால் துண்டுப் பிரசுரமூல மாக வெளியாக்கப்பட்டிருக்கிறது இவ்வாறுமதவிரோதமாகப்போதித்தும் அதைக்கண்டித்து மறுப்பெழுதி அச்சிட்டு இனுமாக வினியோகஞ் செய்த என்னை ஜனங்களை வஞ்சித்து வயிறுவளர்ப்பதும் மார்க்கோபதேசிகளை உபதேசிக்கா வண்ணம் தடைபுரிவதும், எனக்கூறும் தாங்கள் எடுத்தெரியப்பட்ட லயீனுகிய இப்லீசின் வேலையிலீடுபட்டு வஹ் ஹாபிக்கொள்கையைப்பரப்பி இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதாய்

சொல்லி பொது ஜனங்களை ஏமாற்றி, வஞ்சித்து குர்பானித்தோல், மகமை, நன்கொடைகள் வசூலித்தும் சஞ்சிகைக்கு சந்தாவும் வசூலித்து ஒத்திக்கும் சொத்துவாங்கி வயிறுவளர்த்துத் திரியும் தாங்கள்,

"எற்பதிகழ்ச்சி யெனவுணர்ந்தும் நாடோறும்
ஊர்ப்பலவுஞ் சென்றிரந்தே யுண்பவர்தம்—தாத்பரியந்
தோற்றியுமப் பேரவர்க்குச் சொல்லாது வேறுபெயர்
மாற்றிவைத்த தென்னே மறைத்து".

என்பதே போன்று மார்க்கோபதேசி என்றும், ஆசிரியரென்றும் அறைவதின் கூற்றுத்தானென்னே?

ஏ! வஹ்ஹாபி மார்க்கோபதேசியே! எமது மறுப்பில் திருக்குர்ஆன் ஷரீப், ஹதீது ஷரீப், இமாம்கள் வாக்கியங்களைக்கொண்டு மறுப்பு எழுதியதுசுன்னத்வல்ஜமாஅத்துகளின் ஒழுங்குப்படிமறுக்கவில்லையெனக் கூறுவதைப்பார்க்க வழிகெட்ட வஹ்ஹாபிகளின் "தஅவத்தேஈமான்" "தமீமுல்ஈமான்" என்னும் நூல்களிலிருந்து முஸல்மான் கோஷ்டியினற்கு ஆதாரவுகாட்டவில்லை என்றே இவ்வாறு எழுதினீர்களோ?

உருதுக்கவி.

ஏ! இக்வானுஷ்ஷயாத்தீன் அவுர்நன்கிதீன் வமில்லத் ஹைறன்
தகப்பர் அவுர்ழலாலத்ஸேபனே பைட்டேஹைறன் மௌலானு.

(இ—ள்) மார்க்கத்திலும் செய்கையிலும் பழிப்பானவர்கள் பெருமையைக் கொண்டும், வழிகேட்டைக் கொண்டும், தங்களைத்தலைவர்களாகச்சமைத்துக் கொண்டிருக்கிறுர்களே இவர்கள் ஷைத்தானுடைய சகோதரர்கள். (எ—று)

என்பதை யுணர்வீர்களாக.

ஆராய்ச்சியின் 14-வது பாராவில்:— "சுறுங்கக்கூறின்முஸல்மான் கோஷ்டியார்களின் முரணான கொள்கைகட்கு முக்கிய மறுப்பு என்னும் நூலில் அதன் பெயருக்கிணங்க முஸல்மான் கோஷ்டியாரின் முரணான கொள்கைகள் யாதொன்றும் விபரிக்கப்பட்டில்லை என்பதை யாவரும் உணர்ந்துகொண்டபின் அப்புத்தகம் உண்மையான நோக்கத்துடன் எழுதவில்லையென்றும் பொறுமையாலும், துவேஷத்தாலும், மார்க்கப்பிரசாரத்தை தடைபுரியவேண்டுமென்ற மல்வூனென்னும் ஷைத்தானின்

றூண்டுதலாலும் எழுதப்பட்ட தென்பது சூரியனைப்போல பிர காசமாய்விட்டது ஆதலின் இதை எழுதிய ஆசிரியர் தமது பெருந் தவறை யுணர்ந்து தௌபாச்செய்து மன்னிப்புத்தேடிக்கொண் டால் மன்னிக்கப்படலாம்"

இடைசி காலத்தில் பொய் சொல்லக்கூடிய தஜ்ஜால்கள் வெளியாவார்கள் அவர்கள் நீங்களும் உங்கள் முன்னோர்களும் கேட்டிராத தவறான பொய்க் கொள்கைகளையும் அநுஷ்டானங் களையும் போதிப்பார்கள் நீங்கள் அவர்களைப்பயந்து விலகிக்கொண் டால் அவர்கள் உங்களை வழிகெடுக்க மாட்டார்கள்

(ஹதீது 33—ம்ப)"

என்று வரையப்பட்டிருக்கிறது பகலில் பசுமாடு காணாத கண்ணுக்கு இரவில் எருமைமாடு எவ்வாறு தெரியும். என்பதே போன்று எமது மறுப்பு புத்தகம் 32 வது பக்கத்தில் வரைந்த ஹதீதை 33—ம் பக்கம் எனத்தாங்கள் ஆராய்ச்சியில் எழுதியிருப் பதே போன்று தானே தங்கள் ஆராய்ச்சி முழுவதுமிருக்கும்

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி.
தானுமதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச்சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்றகவி.

என்பதற்கிசைய தாங்கள் ஆராய்ச்சி எழுதியதில்; மௌ லீதுஷரீப்,குர்ஆன்ஷரீப்,கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்றும்; மல்ஊன்களாகிய ஷைத்தான்களின் மதவிரோதமானவிஷயங்களை கண்டிக்கவில்லை எனக்கூறுவது மல்ஊன்களின் கூற்றேயன்றி வேறென்னென்று சாற்றுவது

## வெண்பா

ஆவியொடு காயமழிந்தாலு மேதினியில்
பாவியென்று நாமம்படையாதே!—மேவியசீர்
வித்தாரமுங் கடப்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி,

எனஎமது மறுப்பில் விளக்கிக்காட்டி இருந்தும் இன்னுங்கெட்டுப் போகின்றேன் பந்தயமென்ன? என்பதுபோல் ஆராய்ச்சி யெழுதிக்காணு கிறது முஸ்லிமான் கோஷ்டியினரின் கொள்கைகள் மல்ஊன்களின் கொள் கைகள் என்று வெட்ட வெளிச்சமானபின் அந்தலயீன் களுடைய பொரு மையையும் துவேஷத்தையும் யாம்பொருட்படுத்துவதற்கில்லை எனெனில்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார்கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்

எனப்பெரியோர்கூறி இருப்பதையுணர்க

ஏ, வஹ்ஹாபி மார்க்கப்பிரசாரகராகிய முஸல்மான் ஆசிரியரே! மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப்,கத்தம் பாத்திஹா ஓதப்படா தென்னும் மதவிரோதமான பெருந்தவறை பண்ணுசகளாகிய கண்ணுசகள் உணர்ந்து அல்லா(ஹ்) இடத்தில் தௌபாச்செய்து மன்னிப்புத்தேட வேண்டியது முறையாயிருக்க அவ்வாறு செய்யாமல் மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப் கத்தம்,பாத்திஹா ஓதப்படாதென்பது வஹ்ஹாபிகளின் கொள்கை என வெடுத்துக்காட்டி மறுப்பு எழுதிய எம்மைத் தௌபாச்செய்து மன்னிப் புத்தேடிக்கொண்டால் மன்னிக்கப்படலா மெனக்கூறும் முஸல்மான் ஆசி ரியராகிய நமதுகூற்றைக்கவனிக்கையில் வஹ்ஹாபிக்கொள்கையைமறுத் தானென்மறுப்பு எழுதியதால் என்னைத்தௌபாச் செய்யச்சொல்வது வஹ் ஹாபிக் கொள்கையைக் கைக்கொண்டு பிரசாரஞ்செய்து வருவதினாலே யன்றோ?

கிறிஸ்தவர்கள் செய்யும் பாவச்செயல்களை தங்கள் பாதிரியாரிடம் கூறிப்பாவமன்னிப்புத்தேடிக்கொள்வது போல் வஹ்ஹாபிகளாகிய முஸல் மான் கோஷ்டியார்களின் பாவச்செயல்களை அவர்களின் தலைவராகிய முஸல்மான் ஆசிரியரிடம் கூறி மன்னிக்கப்படுதலிருப்பதாலேயே மன்னிக் கப்படலாம் என்று எழுதத்துணிந்தனர்போலும்

முஸல்மான் ஆசிரியர் ஆராய்ச்சியென்று யெழுதியதில் எமது மறுப்பில் தவறான வஹ்ஹாபிக் கொள்கையெனயாம் விளக்கியுள்ளவை களிலொன்றையேனும் சுன்னத்வல் ஜமாஅத்துக்கு முரணான தில்லை என்றேனும்; வஹ்ஹாபிக்கொள்கையல்ல வென்றேனும்; அல்லது முஸல் மான் கோஷ்டியினர் அனுசரிக்கவில்லை என்றேனும் ஆராய்ச்சியிலெழுதி

விளக்காமலும், மறுக்காமலும், மௌனஞ்சாதித்துமறைக்கப்பட்டிருப்பதை யுணர்ந்தவர்களோவ்வொருவரும்; தங்களையும், தங்கள்கோஷ்டியினர்களையும்வழிகெட்ட வஹ்ஹாபிகளென்றுதிட்டமாய்த்தெரிந்துகொண்டபின்னர் தாங்களிவ்வாறு ஆராய்ச்சி யெழுதியதைக்கண்டு தங்களைப் பொய்யன்? பொறாமையாளன் என்றும்; இத்தகைய துவேஷம்நிறைந்த லயீன்களான வழிகெட்டோர்கள்வஞ்சகமாய் வழிகெடுத்துஎமாற்றி வயிறுவளர்ப்பதற்கு சூட்சியா யெழுதி இருக்கின்றனரென்றும் எண்ணுமல் வேறென்னதான் நினைப்பர்?

ஆராய்ச்சியின் 15வது பாராவில்:-"அருமைஆசிரியரே தங்களது நூல்ஒன்றேனும் இவ்வுலகிலிருக்கும்வரை தங்களைஉண்மையாளரெனச் செப்ப எவரும் துணிவார்களா? தாங்களாகவே நான் பொய்யன், பொறுமையாளன் என்பதை இப்புத்தகத்தால் உலகத்தாருக்கு ஓர்சரியானரிக்கார்டாக ஆக்கிக்கொடுத்துவிட்டீர்கள்." எனக்கூறப்படுகிறது

ஏ, அஞ்சாவஞ்சம் படைத்த ஆசிரியரே! எமது மறுப்பு நூல் வெளியானதின் பின்பே வெளியூரார்களும் தங்களின் வண்டோலத்தைக்கண்டு கொண்டனர், எமது மறுப்பு புத்தகத்தில் தாங்கள் இஸ்லாமதப்பிரசாரம்செய்வதாய்ச்சொல்லிப்பொதுஜனங்களை ஏமாற்றிப்பொருள் பறித்து வயிறுவளர்த்து வருவதோடுநில்லாமல் வழிகெட்டவஹ்ஹாபிக் கொள்கையைப்பரப்புகிறீர் களென்று பகர்ந்துள்ளேன் ஆனல் தாங்களும், தங்கள்கோஷ்டியினரும் மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதலாகாதெனக் கூறித்திரிவதைக் கேள்வியுற்ற மகாகனம் மௌலானு மௌலவி செய்யது முகம்மது ஷரபுத்தீன்சாஹிப் அவர்கள் இக்கொள்கை வஹ்ஹாபிகளின் கொள்கையானதாலவைகளை சுன்னத் வல் ஜமாஅத்து முஸ்லீம்கள் ஒருவரும் ஆதரிக்கவோ, அநுசரிக்கவோ கூடாதென்று கூறியநிமித்தமாய்த்தங்களின் மதப்பிரசாரத்தை தடைபுரிந்து விட்டதாக எருக்குமாறுக இல்லாததும், பொல்லாததுமான பொய்களைச்சிருஷ்டித்து நீசத்தனமாய்நிந்தித்து முஸல்மானில் வெளியிட்டுவந்த முனுபிக்தனம்போதாதென்றோ? அல்லது வேறெக்காரணத்தாலோ, நாம் பார்க்க வில்லையாயினும் நம

மையொருவன் பார்த்துக்கொண்டிருக்கிறான் இழிச் செயல்களுக் கெல்லாம் இறுதிநாளில் பதில்சொல்லியே யாகவேண்டுமென்ற அச்சம் கொஞ்சமேனும் நெஞ்சத்திலில்லாது நாளது 1928-ம்வரு நவம்பர்மீ வெளியான முஸல்மான் சஞ்சிகையின் பக்கம் 116ல் மகாகனம் மௌலானா மௌலவி செய்யது முகம்மது ஷாபுத்தீன் சாஹிப் அவர்கள்பேரில் பகைமைகொண்டு பாரப்பழிமொழிகளைச் சுமத்திப்பாரவான்களாகிய உயர்தர உலமாவை இழிவுபடுத்தி எழுதியிருப்பதைக் கண்ட வடகரை, ஜனாப், வ. ரஜப்பக்கீர் இரா வுத்தாவர்கள்; "தென்காசி முஸல்மான் ஆசிரியரின்முழுப்பொய்" என்னும் தலையங்கத்துடன் வெளியிட்டதுண்டுப்பிரசுரம்தங்களின் அயோக்கியத்தனத்தை அறிவிக்கவில்லையா?

ஏ, முழுப்பொய் புகலும் முஸல்மான் ஆசிரியரே! தாங்கள் பொய்யன், புழுகன், பொறுமையாளன் என்றில்லாதிருக்கில் வண்டத்தன மாக இவ்வாறெல்லாம் எழுதத்துணிவீர்களா? என்பதை இன்னும் பொ துமக்கள் நன்கு தெரிந்து கொள்ளவேண்டி வடகரை, ஜனாப் வ. ரஜப் பக்கீர் இராவுத்தாவர்களால் வெளியிடப்பெற்ற தென்காசி முஸல்மான் ஆசிரியரின் முழுப்பொய் யென்னும் துண்டுப்பிரசுரத்தில் கூறப்படுபவை களை அப்படியே இதின்மற்றோர் பக்கத்தில் வெளியாயிருப் பதைக்கண்டு கொள்வீர்களாக

ஏ, முழுப்புளுகராகிய முஸல்மான் ஆசிரியரே தங்களின் வண் டோலம் இவ்வளவும் வெளியானதின்பின், இனி எவர்களேனும் தங்களை உண்மையாளரெனச் செப்புவதெங்ஙனம்? தாங்களும், தங்கள் கோஷ்டியி னரும் மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப்,கத்தம்'பாத்திஹா ஓதப்படாதென் று கூறுவதைக்கேட்ட் பொதுமக்கள் சந்தேகங்கொண்டு மகாகனம் ஜனாப் மௌலானா மௌலவி செய்யது முகம்மது ஷாபுத்தீன் சாஹிப் அவர்களி டம் சென்று கேட்டதற்கு அவர்கள் மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படா தென்பது வஹ்ஹாபிகளின் கொள்கை ஆகையால் சுன்னத் வல் ஜமா அத்முஸ்லிம்கள் அவைகளை ஆதரிக்கவோ' அநுஷ்டிக்கவோ கூடாதெனக்கூறியதற்காக அவர்கள்பேரில் இதுவரை எவ்வளவோ பொய் யும் புலையுமாகஎழுதிவந்துஇப்போது பாதகமாய்ப் பாரப்பழி மொழிகளைச் சுமத்திப்பேதகமாக யெழுதியதால் தாங்களினி எழுதுவதுகளில் ஒன்றை யேனும் உண்மையென்று எவர்களும் எண்ணுதற்கில்லையே தன்னுலே

தான் கெட்டால் அண்ணாவி என்செய்வர்? யென்பதே போன்றுதாங்களே நான் பொய்யன், பொருமையாளன் என்று உண்மையை யுரைத்து விட்டீர்கள் "காலம்வரும் நேரங் கற்றதெல்லாம் வித்தையல்ல" என்பதே போன்று தாங்களே நான் பொய்யன், பொருமையாளன் எனக்கூறுவது எண்மையல்லவே? உண்மைதானே கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் வெழுத்து விடுமென்பதுபோல் தாங்கள் பொய் சொல்வதிலும் பொருமைகொள்வதிலும் நிகரற்றவர்களேயாயினும் இதில்தங்களை மிக்காரும்ஒப்பாரும் ஒருவருமில்லை என்பதை உலகமரிய வேண்டியது அவசியமே யாதவின் அவைகள் வெழுத்து பொய்சொல்வதிலும், பொருமை கொள்வதிலும், பொல்லாங்கு கூறுவதிலும் தாங்கள் அசாத்தியப்பேர்வழி என்பது, பட்டப்பகல்போல் வெட்டவெளிச்சமாயிற்றல்லவா?

## (செய்யுள்)

"ஓயாமற் பொய்சொல்வர், நல்லோரை நிந்திப்பருற்றுப்பெற்ற
தாயாரைவைவர்,சதியாயிரஞ்செய்வர் ஷரஹதனை
யா யார் பிறர்பொருளை வஞ்சிப்பர் தமையண்டினர்க்கொன்,
றீயா ரிருந்தென்ன போயென்ன காணித்தப்பூதலத்தே"

என்பதேபோன்று ஷரஹினை ஆராயாமல் இஸ்லாமதப்பிரசாரஞ் செய்வதாய் ஓயாமல் பொய் சொல்லி பொதுமக்களை ஏமாற்றி வஞ்சித்து நன்கொடை முதலியன வசூலித்து வயிறுவளர்த்து சொத்துகளும்வாங்கி சுகமே இருப்பதில் வழிகெட்ட வஹ்ஹாபி மதப்பிரசாரஞ்செய்து வழிகெடுக்க முன் வந்ததைக்கண்ட உயர்தர உலமாக்கள் அவை சுன்னத்வல் ஜமாஅத்துக்கு விரோதமானதெனக்கூறியதற்காக அவர்கள் பேரில் பொல்லாங்காய்ப்பாரப்பழிமொழிகளைச்சமத்தி பகைமையால் பழித்துகீழ்மகனே போல் இழிவாக எழுதித்தூற்றுவதுதான் முஸல்மான் ஆசிரியரின் இஸ்லாமதப்பிரசாரமா? அல்லது ஆசிரியர்களின் ஒழுக்கமுடைமையா? இன்றேல் அறியாமையா? அழுக்காறு? என்றிப்பொழுது எல்லோர் களுமே பேசிக்கொள்கின்றனர்

"ஆழவமுக்கி முகப்பினும் ஆழ்கடனீர்
நாளிமுகவாது நாஞளி"

என்பதேபோன்றுமௌலிதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம்,பாத்திஹா ஓதப்படாதென்று கூறும் வழிகெட்ட வஹ்ஹாபிக்கூட்டத்தினர்

தங்கள் தாவாவை ஸ்த்திரப்படுத்த அறிவும் ஆற்றலுமற்று அவர்கள் கற்ற கல்வி நாளியாயிருப்பது பற்றியே. "பொய்யைப் பூஷணமாகக்கொண்ட புல்லர்களின் ஈமான்பறிக்கப்பட்டுவிடும்" என்று எம்பெருமானார் அருளியிருந்தும் அதை பொருட்படுத்தாது மல்லூனைப்போல் அகங்காரங்கொண்டு உண்மையை யொழித்து யுதாசினமாய் எண்மைகாட்ட வெளி வந்தில் அந்நாளிஅறிவானதுதமதுபோலித்தாவாவை ஸ்த்தாபிப்பதற்குவேண்டிய ஆதாரவுகளைவெளியிடும் நானுளிஅறிவை முகவாததினாலேயே மௌலீதுஷரீப் குர்ஆன்ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதெனக்கூறியது சுன்னத்வல் ஜமாஅத்தின் கொள்கைப்படி தானென்றாவது அல்லது வழிகெட்ட வஹ்ஹாபிகளின் கொள்கை, என்றாவது விளக்காமல் ஆராய்ச்சி எழுதி வெட்கமின்றி முஸல்மானில் வெளியிட்டு விட்டீர்களென்றும் பொதுமக்கள் நகைக்க வேண்டியதாயிற்று

இத்தகைய சந்தற்பங்களெல்லாம்ஏற்பட்டது தாங்கள்பொய்யன் பொறாமையாளனாக இல்லாமலா?என்பது உலகமறிந்தபின்இனித்தாங்கள் மறைக்கமுயல்வது மதியீனமல்லவா? ஆகையால் தாங்களின் செய்கையிலிருந்தே தவறுகளை மறுக்கமுன்வந்த எமது மறுப்பு நூல் உலகிலிருக்கும் வரை தாங்கள் பொய்யன், பொறாமையாளன் என்பதை ஓர் ரிக்கார்டாக ஆக்கி கொடுத்து விட்டீர்களென்று எம்மை நோவுவானேன் இப்போதேனும் தங்கள் தவறுகளை பஹிரங்கமாகவே ஒப்புக்கொண்டுஇனி இவ்விதம் இப்லீசின் வேலைகளிலீடுபடுவதில்லை என்று கூறி அல்லா(ஹ்)வினிடத்தில் தௌபாச்செய்து வெளிவரக்கூடாதா?

ஆராய்ச்சியின் 16வதுபாராவில்:– "பார்த்தீர்களா, இல்லாதவிஷயத்தைக்கட்டுரையாகக் கூறினதற்கு இவ்வுலகத்திலேயே பொய்யன் என்ற தண்டனையைப்பெற்றுக் கொண்டீர்கள் இனிமறுமைத்தண்டனை வேறு பரிதாபம், பரிதாபம், இறைவனே முஸ்லீம்கள் இப்பாதகச்செயலையகற்றும்படி அருள்பாலிப்பாயாக ஆமீன்" எனவரைந்திருக்கிறது

பார்க்கவில்லையா? முஸல்மான்" கோஷ்டியாரின் மதவிரோதச் செயலை அகற்றுவதற்காகவே முஸ்லிமாகிய. யான் இறைவனினருளால் மறுப்பு எழுதியுள்ளேன் எமது மறுப்பைக்கண்ணுற்று முஸல்மான் ஆசியரின் தவரான கொள்கைகளைத்தெளிவு

ரக்கண்ட முஸல்மான் சந்தாதார்களில் உண்மை முஸ்லீம்களுட் சிலர் முஸல்மான் ஆசிரியருக்கு கண்டித்து கடிதமெழுதியிருப்ப தாகவதந்தியுலாவுகின்றனவே வஹ்ஹாபிமத ஸ்தாபகனுன இப்னு அப்துல்வஹ்ஹாப்நஜதி என்பவன் முதல் முதல் இஸ்லா மதப் பிரசாரஞ் செய்வதாய்ச் சொல்லி உபதேசித்து பொது ஜனங்கள் தனக்குச்சாதகமாயேற்படும்வரை தமது வழிகெட்ட கொள்கை யை வெளியிடாமல் மௌனமாயிருந்து சாதாரணஜனங்களெல் லோர்களும் சாதகமாயிருப்பதைபறிந்ததும் தனது கொள்கை யைவெளியிடலானுன் இதைக்கண்ட அக்கால அறிஞர்கள் பலர் கண்டித்தும் முஸல்மான் ஆசிரியர் கூறுவதே போன்று கூறி சா தாரண ஜனங்களை ஏமாற்றி வழிகெடுத்து வந்ததால் அப்பாத கனை துருக்கி சுல்த்தான் அவர்கள் ஆக்கினைப்படி சிரச்சேதஞ் செய்யப்பட்டதாக முன்னூல்கள் முறையிடுகின்றன. அதுபோல் முஸல்மான் ஆசிரியரும் இஸ்லாமியப் பிரசாரஞ்செய்வதாய்ச்சொ ல்லி வஹ்ஹாபிக்கொள்கையைப் பரப்புதற்கு துணிந்துநிற்பதால் சில சந்தாதார்கள் கண்டித்து கடிதமெழுதி இருப்பதாக வதந்தி யுலாவுவதுபோல் எல்லோர்களும் எழுதி சந்தாதாராகஇருக்க வெ றுத்தும் மற்றவர்கள் சந்தாதாராகச்சேர மறுத்தும் வெளிவந்தால் தான் முஸல்மான் ஆசிரியரின் கொட்டம் அடங்கி பிரட்டுருட்டுக் காரன், பொய்யன், புழுகன், பொறுமையாளன், வஞ்சகன்என்ற தண்டனை என்று ஏற்றுக்கொள்வர் போலும் வஹ்ஹாபி என்று எல்லோர்களும் அழைப்பது மதவிரோதமான காரியத்திற்குறிய தண்டனையல்லவா? இவ்வுலகத்திலேயே இவ்வாறு தண்டனை யைப் பெற்றுக்கொண்ட முஸல்மான் ஆசிரியரே.

"யாருவது ரசூலுக்கு மாற்றஞ்செய்வானுகில் அவனுக்கு நேர்வழியான பாதைவெளியானதின் பின்னுல் மூமினுனவர்களின் பாதை அல்லாததைத் துடருவார்களேயானுல் அந்தக்கெட்டபா தைக்கு அவனைத்தலைவனுக்குவோம், அவனை நுளையவைப்போம் ஜஹன்னமென்னும் நரகத்தில், ஜஹன்னமென்னும் நரகம் மீளும் தலத்தில் கெட்டது":— (குர் ஆன்)

என அல்லாகுத்த ஆலா அருளியிருப்பதை அறிந்து கொள்வீர்களாக.

ஏ! முஸல்மான் ஆசிரியரே, மல்வூனாகிய தங்களின் வழி கெட்ட வஹ்ஹாபிக்கொள்கையைச் சாந்தமாயும் சமாதானமாயும் அலசிப்பார்த்து எம்மாலியற்றப்பெற்ற "முஸல்மான்கோஷ்டியார்களுக்கோர்வாயாப்பு" என்னும் நூலில் விளக்கி இருப்பதுகளைக் கவனித்து தங்கள் தவறை யுணர்ந்து தௌபாச்செய்தும்; தங்களின் பிரசாரத்தால் சந்தேகங்கொண்டோரும் வழிகெட்டோரும் திருப்தியாய் சந்தேகந்தீரும் வண்ணமும் மற்ற உலகமக்கள் தங்களின் தவறான கொள்கையைத்தெரிந்து கொண்டுள்ள அருவருப்பை நீக்குவான் வேண்டியும் தங்களின் கொள்கையாகிய மௌலூதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகாதென்பது வழிகெட்டவஹ்ஹாபிகளின் கொள்கைதான் அதைவிட்டும்தவிழ்ந்து தௌபாச்செய்து "முஸல்மான்கோஷ்டியினர்;" என்னும்வழி கெட்ட கூட்டத்தைக் கலைத்து உண்மை முஸ்லிமாகி விட்டேன் என்று பகிரங்கமாகவே தங்கள்முஸல்மானில் வெளியிடவேண்டியது. அதின்றிஇனியும் உண்மையையொழித்துஆத்திரமும்சூத்திரமுங்காட்டி ஜால்ஜாப்பாக ஆராய்ச்சியெழுதியதுபோல் மழுப்பி ஏமாற்றி எழுதி விடலாமென வெண்ணுவீர்களாயின் இவ்வுலகில் வஹ்ஹாபி என்ற தண்டனையையும் மறுஉலகில் அல்லாஹுத்த ஆலா அருளியிருப்பதுபோல் ஜஹன்னமென்னும் நரகதண்டனைபுமடைவதோடு உலகில் சதா இவ்வித சிறுமைக் காளாகவேண்டியதே. தங்கள் கொள்கையை ஆதரிப்பாரின்றி தங்களையும் தங்கள் கோஷ்டியினர்களையும் உண்மைமுஸ்லிம்கள் ஒவ்வொருவரும் வெறுத்து தங்களை பொய்யன், புழுகன், பொறாமையாளன் என்று சதா நினைக்க நேரிடுமென்பது திண்ணம், திண்ணம், திண்ணம்.

கருணாகரனாகிய எம்மிறைவனே! எம்மையும் மற்றெல்லா எம்முஸ்லிம் சகோதரர்களையும் இந்தவழிகெட்ட வஹ்ஹாபிகளின் சூட்சிக்காளாகி ஏமாற்றிப்பொருள் பறிப்பதற்கிடங்கொடாமலும் இதுபோன்ற மற்றெவ்வித வழிகேடும் எங்களை எதிர்க்காமலும்

காப்பாற்றி எங்கள் ஆயுளும் பொருட்களும் ஸாலிஹான நற்காரியங்களிலேயே ஈடுபடச்செய்து உனது திருத்தூதர் அவர்களின் பொருட்டால் சுன்னத்வல் ஜமா அத்தில் நிலைநிருத்தி ஈமான் சலாமத்தையும் இதுபோல் மறுமையில் மக்பிரத்தையும் தந்தருள் புரிவாயாக ஆமீன்.

# தென்காசி,

## முஸல்மான் ஆசிரியருக்கோர் முன்னறிக்கை.

---

நாளது 1928-ம்ஹூ நவம்பர்மீ வெளியான முஸல்மான் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட ஜனுப் மக்கீ சாஹிபுக்கோர் அறிக்கை என்னும் வியாசத்தைக்கண்ணுற்றேன் "அறிக்கையின் 1வது பாராவில்:—"ஏ! ஜனுப் தாங்கள் வெளியிட்ட மறுப்புப்புத்தகத்தில் முஸல்மான் கோஷ்டியர்களின் முரணானகொள்கைகள் ஒன்றையும் விபரிக்கவில்லையாதலின் பொருமை யென்னும் பிணிகொண்டோரின் தூண்டுதலால் எழுதப்பட்டதென அறிகிறோம்" எனக்காணப்படுகிறது.

ஏ!ஜனுப் எமது மறுப்புப்புத்தகத்தில் முஸல்மான் கோஷ்டியர்களின் முரணான கொள்கைகள் ஒன்றையும் விபரிக்கவில்லையாயின் முஸல்மான்ஆசிரியாகிய தாங்கள் அவசரமாக ஆராய்ச்சி எழுதி வெளியிட்டதும் அறிக்கையெழுதி வெளியிட்டதும் அதிகப்பிரசங்கித்தனமல்லவா? இவ்வாறு தங்களை குறையொன்றுங் கூறுததெனக்கண்ட எம் மறுப்பு நூலுக்கு அசட்டுத்தனமாய் ஆராய்ச்சி யெழுதி தாவாவுக் கழைப்பதுதான் ஆசிரியர்களுக் கழகோ?

எய்? ஜனுப் பொருமை யென்னும் பிணியால் பீடிக்கப்பட்ட தங்களின் சஞ்சிகையில் பாதகமாகப் பலவிஷயங்களை வெளியிட்டு மறுப்பு எழுதும்படியாக என்னைத்தூண்டியவர் பொருமை யென்னும் பிணிகொண்ட தாங்களே என்பது வெளிப்படை

யாயிற்றே அதிற் சந்தேகமேன்? பொறுமை யென்னும் பிணிகொண்டோராகிய தங்களின் சஞ்சிகையில் பேதகமான விஷயங்களை வெளியிட்டு என்னை மறுப்பு எழுதும்படியாகச் செய்தது தாங்கள் தான் என்பது நிச்சயமே.

அறிக்கையின் 2வது பாராவில்:- "ஜனாப் மக்கீசாஹிபே! இவ்வாறு தங்களது ஹிருதயத்தைக்குளப்பி தப்பான விஷயங்களை எழுதச்செய்த பொறுமையாளரிடம் "நீ என்னை இவ்வாறு எழுதும்படி தூண்டுகின்றாயே அவ்வாறு முஸல்மான் கோஷ்டியாரின் முரணான கொள்கைகளிருந்தால் முதலாவது என்னிடம் விபரித்துக்கொள் என்று கேட்கலாகாதா? இதைக்கேட்கவும் ஞானமற்ற தாங்கள் புத்தகம் எழுதமுன் வருவானேன்" எனக் கூறப்படுகிறது.

ஜனாப் அப்துல் காதிர்சாஹிபே! தங்கள் முஸல்மானில்; பேதகமும், பாதகமுமான பலவிஷயங்களை வெளியிட்டு: என்னை மறுப்பு எழுதும்படியாகத் தூண்டிய பொறுமைப்பிணியால் பீடிக்கப்பட்டோரும்; முஸல்மானின் ஆசிரியருமாகிய தாங்களும்; தங்கள் கோஷ்டியினர்களும் இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதாய்ச் சொல்லி சாதாரண ஜனங்களை யேமாற்றி மௌலீது ஷரீப், குர் ஆன் ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும், அதற்குக் கூலிகொடுக்கலாகாதென்றும் எம்சுன்னத்வல்ஜமாஅத்திற்கு முரணான வழிகெட்டவஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்பி வருகின்ற ஆணை கடந்த அல்லாமா வாகிய தாங்கள் ஆத்திரமும், க்ஷாத்திரமுங்கொண்டு. ஆராய்ச்சியும், அறிக்கையும் வெளியிட்டுள்ளீர்கள் அவைகளிலெங்கேனும் மௌலீது ஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படா தென்பது சுன்னத்வல்ஜமாஅத்தின் கொள்கைகளுக்கு முரணானதில்லை என்பதற்கு எதுவும் ஆதாரவு காட்டியிருக்கிறீர்களா? வடகரை, ஜனாப் வ.ரஜப்பக்கீர் இராவுத்தாவர்களால், வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில்; தாங்கள் வடகரைக்குப்போய் தங்கள் சகாக்களுடன் கூடி மௌலீதுஷரீப்,

கத்தம், பாத்திஹா ஓதப்படாதெனக் கூறியதாகச் சொல்லப்படு கின்றனவே இவ்வாறு சாதாரண ஜனங்களை ஏமாற்றி, வஞ்சித்து வழிகெடுத்துவரும்; தங்களின் கொள்கை, எம் சுன்னத்வல் ஜமா அத்திற்கு முரணான வழிகெட்ட வஹ்ஹாபிக் கொள்கையென எம் மறுப்பு நூல் கூறியும் அவ்வாறில்லையெனின் அதற்குச்சரி யான ஆதாரவுகளைக் காட்டித் தங்கள் கொள்கையை ஸ்தாபிக்கா மல் மாருட்டமாகவும், அவதூராகவும் ஆராய்ச்சி எழுதிவெளியிடு வதால் தங்களின் அயோக்கியத்தனமான ஆபாச வார்த்தைகளைக் கண்டு அஞ்சி ஒருவரும் பதில் கூறமுன்வரமாட்டார் களாகையி னால் வழிகெடுக்கும் வேலையை வளமைபோல் நடத்திக்கொள்ள லாமென்றுதானே? இவ்வாறு அசட்டுத்தனமாக ஆராய்ச்சி எழு தி வெளியிட்டீர்கள் மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப்,கத்தம், பாத் திஹா ஓதப்படாதென்பது எம்சுன்னத்வல் ஜமாஅத்திற்கு முர ணான வஹ்ஹாபிக்கொள்கை யென்றே எம்மறுப்பு நூல்முறையி டுகின்றனவே யன்றி வழிகெட்ட வஹ்ஹாபிகளாகிய முஸல்மான் கோஷ்டியினர்களுக்கு முரணானதென்று ஒன்றும்கூறவில்லை வஹ் ஹாபிகளுக்கும் காதியானிகளுக்கு மிடையே கொள்கையில்; காதியானிகள், மிர்ஸாகுலாம் அஹ்மது காதியானியை: நபி என்றுகூறுவதுபோன்ற சிற்சிலவித்தியாசங்களேயன்றி வேறில்லை என்பது எல்லோர்களுமறிந்ததே ஆகவே எமது சகோதர சாதா ரண முஸ்லிம் பொதுமக்களை வஞ்சித்து தங்களின் வழிகெட்ட கொள்கையை ஆதரிக்கும்படியாக ஏமாற்றப்படாமலிருக்கவேண் டியும் தங்கள்கோஷ்டியினரின்கொள்கை எம்சுன்னத்வல் ஜமாஅத் துக்கு முரணானது பற்றியும் தாங்கள் இஸ்லாமியப்பிரசாரஞ்செய் வதாய்ச்சொல்லி எம் சுன்னத்வல் ஜமாஅத்திற்கு முரணான வழி கெட்ட வஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்பிவருவதாலுமே முஸல் மான் கோஷ்டியார்களின் முரணானகொள்கை எனக்குறித்துமறு ப்பு வரைந்துள்ளேனே யன்றி வழிகெட்ட வஹ்ஹாபிக்கொள்கை யினர்களாகிய, முஸல்மான் கோஷ்டியார்கட்கு முரணான கொள் கை எனக்குறிக்க வில்லை என்பதைக்கவனிப்பீர்களாக, தாங்கள்

வஹ்ஹாபி மதப்பிரசாரஞ் செய்வதாய்க் கூறியிருப்பின் அந்தவழி கெட்ட கொள்கைகளுக்கு மறுப்பு எழுதியிருப்பேன் அதின்றித் தாங்கள் ஏமாற்றமாக முஸல்மானில் யெழுதிவந்ததே இவ்வளவு குழப்பத்திற்கும் காரணமாயிற்று இவ்வாறு தப்பான விஷயங்களை வெளியிட்டு பொது மக்களின் ஹிருதயங்களை யெல்லாங்கு ளப்பிய பொருமையாளராகிய தம்மிடம் நீ என்னை இவ்வாறு மறுப்பு எழுதும்படியாகத் தூண்டுகின்றாயே அவைகள் எம்முஸ்லிம்களுக்கு முரணாக இருப்பது போல் நம் முஸல்மான் கோஷ்டியினர்களுக்கும் முரணாக இல்லையா? என்பதை என்னிடம் விபரித்துக்கொள் என்பதற்கில்லாமலா? முஸல்மான் கோஷ்டியார்களின் முரணான கொள்கையெனக் கூறியுள்ளேன் அதை அறியும் அறிவும், ஆற்றலும்: ஞானமுமற்ற தாங்கள் வெட்கமின்றி ஆராய்ச்சி யெழுத முன்வருவானேன்,

அறிக்கையின் 3-வது பாராவில்;—"ஏ! கரைகடந்த அல்லாமா! அல்லாவும், ரசூலும், ஸஹாபாக்களும், இமாம்கள் முதலியோரும் சொல்லப்பட்ட விஷயங்களை பரப்புவதுதான் குபிர் பிரசாரமெனக்கருதினீரோ? அப்படியானால் தாங்கள் அல்லாமாதான் இப்படிப்பட்ட அல்லாமா அவர்களின் உஸ்தாது எப்பேர்ப்பட்ட மஹோன்னதப்பதவி யுடையவராயிருப்பாரோ, தென்காசியிலுள்ள ஒவ்வொரு அறிஞரும் இதைக்குறித்துப்பேசத் தயாராயிருக்கிறார்களென்பதை அறிவீராக. பொதுஜனங்கள் இவ்வாறான பிரசுரங்களைக்கண்டு, ஏமாந்துபோகவேண்டாம். எனினும் இத்தன்மையினரின் யோக்கியதைகளை மட்டும் கவனித்துக்கொள்ளவும்" என எழுதிக்காணுகிறது.

ஏ ஆணைகடந்த அல்லாமா! தங்களின் முஸல்மான் சஞ்சிகை தொகுதி 3 பகுதி 3 பக்கம் 284ல் பலசடங்குகளைப்பற்றித் தாங்கள் குறிப்பு எழுதி இருப்பதினூடே அக்கீக்காசடங்கு கத்னாச்சடங்கு, பராத்துச்சடங்கு, மரணத்தில்நடக்கும்சடங்கு;மூன்

ரும் நாள் 7, 15, 21, 40 முதலியநாட்களின் சடங்கு, வ்ருஷப் பாத்திஹாச்சடங்கு, மௌலீதுச்சடங்கு, என்றும் குறிப்பிட்டு தலைவர்கள், சீமான்கள், ஆலிம்கள் நன்கு கவனித்து இஸ்லாமிய ஆசாரத்தைப்போதித்து முஷ்ரிகீன் சடங்குகளை நிவர்த்திப்பார்களென நம்புகிறோம் எனத்தாங்களே வெளியிட்டிருக்கிறீர்களே அதுபோல் அவைகள் முஷ்ரிகீன் சடங்குகளென்று பத்திரிகைகளில் பிரசுரித்து பரப்புவது குபிர்பிரசாரமன்றி வேறென்னவென்று நினைத்தீர்? அற்ப அளவாவது எமதுசுன்னத்வல் ஜமாஅத்தின் மார்க்க அறிவுபடைத்திருப்பீரேல் இவ்வாறு எழுதத்துணிவீரா? கத்னுசெய்வதும் அகீக்கா கொடுப்பதும் பாத்துவணக்கமும் மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதுவதும் முஷ்ரிக்கீன் சடங்கு என்றுதானே? நமக்கு அல்லா (ஹ்) வும், ரசூலும், ஸஹாபாக்களும், இமாம்கள் முதலியோரும் சொன்னார்கள் அவ்வாறாயின் அவைகளுக்குறிய ஆதாரவுகளை ஏன்எழுதக்கூடாது மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதலாகாதெனத் தடைபுரியும் தாங்களும், தங்கள் கோஷ்டியினரும் ஒரேஒரு விஷயத்தையேனும் ஊன்றிக்கவனிப்பீர்களாக தங்கள் ஆராய்ச்சியிலேனும் அறிக்கையிலேனும் எவ்வித ஆக்ஷேபனையுங்கூறாது. இப்போது அல்லாவும் ரசூலும், ஸஹாபாக்களும், இமாம்கள் முதலியோர்களும் சொன்னதாய்க்கூறுகின்ற மௌலீது ஷரீப் குர்ஆன்ஷரீப், கத்தம் பாத்திஹா ஓதலாகாதென்பதில் குர்ஆன் ஷரீப் ஓதலாகாதெனக்கூறுவதை மட்டும் இதில் கவனிப்போம். தாங்கள் ஓதலாகாதெனத்தடை புரிவதாய்க்கூறும் திருக்குர்ஆன் ஷரீபை, ஓதலாகாதெனின் அல்லாஹுத்தஆலா அன்பியா நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கிக்கொடுக்கவேண்டிய அவசியமென்ன ஓதலாகாததை உலகோர் ஏற்கவேண்டியதுமில்லையே? ஓதலாகாதென தாங்கள்கூறும் குர்ஆன்ஷரீபில் "இக்ரவு பிஸ் மிறப்பிக் கல்லதீ கலக்க" "படைத்த உம்முடையரப்பின் திருநாமத்தைக்கொண்டு ஓதுவீராக." என அல்லாஹுத்தஆலா அருளி இருப்பது தங்களின் ஆக்ஷேபனைக்குறிய வாக்கியமா? குர்ஆன்

ஷரீப் இல்லையாயின் இஸ்லாம் ஏது. குர்ஆன்ஷரீப் ஓதலாகாதெ னின் அல்லாஹுதஆலாவின் ஆக்ஞையை அறிந்து கொள்வ தெங்ஙனம். மிர்ஸாகுலாம் அஹ்மதுகாதியானி தனக்கு இல் ஹாம், வஹிமூலம் அறிவிக்கப்பட்டதாய்க் கூறியதுபோல் தனக் கும் ஏதேனும் இல்ஹாமே ஷைத்தானி வஹியே ஷைத்தானி வருகிறதென்று குர்ஆன்ஷரீப் ஓதலாகாதெனக் கூறப்படுகிறதா? இவைகளையெல்லாம் கண்டுகொண்ட பொதுஜனங்கள் தங்களின் யோக்கியதைகளையும், தஙகள் பிரசுரங்களின் யோக்கியதைகளை யும் நன்கு தெரிந்து கொள்வதோடு இனியும் தாங்கள் இஸ்லாமி யப் பிரசாரம் செய்வதாய் கூறினும் அவைகளை ஆதரித்து ஏமா ந்து போகாமல் ஜாக்கிரதையாகவே இருப்பார்களென்பதை அறி வீராக.

குர்ஆன்ஷரீப் ஓதப்படாதென்பவனுக்கு அல்லாவும், ரசூ லும், ஸஹாபாக்களும், இமாம்களும் ஏது. குர்ஆன்ஷரீப் ஓதப் படாதென்பது குபிர் பிரசாரமல்லவா? அல்லாவும், ரசூலும், ஸஹாபாக்களும், இமாம்களும் குர்ஆன்ஷரீப் ஓதலாகாதென்று உம்மிடத்தில்தான் சொன்னார்களா? அல்லது அதற்கு ஆதாவுக ளிருக்கிறதா? இஸ்லாத்தின் பரம விரோதிகளான ஆரியர்கள் குர்ஆன்ஷரீபில் சிலபாகத்தை பறிமுதல் செய்யவேண்டுமென்று கூறியதற்காக எம்முஸ்லிம்களால் எவ்வளவோ எதிர்ப்புகள் ஏற் பட்டது. உலகமறிந்ததாகயிருக்க இஸ்லாத்தில் பிறந்து இப்லீ சாய் வெளிவந்து குர்ஆன்ஷரீப் ஓதலாகாதெனக்கூறி குர்ஆன் ஷரீப் ஓதலாகாதெனத்தடைபுரிவோரே வஹ்ஹாபிஎன்றும் வேறு சிலரும் (காபிர் என்று?) இப்படிப்பல் வேறுவிதமாகப் பொது ஜனங்களும் சில ஆலீம்களும் பேசிக்கொள்வதாய்ப் பத்திரிகை யில் வெளியிட்ட வழிகெட்ட முஸல்மான் கூட்டத்தினர்களை தெ ன்காசியின் எம்முஸ்லிம்கள் கண்டிக்காமல் விட்டதே முன்னர் முஸல்மான் கோஷ்டியினரை வஹ்ஹாபி என்றும், காபிர்என்றும் கூறியதாய் குறைகூறியவர்களே இது விஷயமாய் என்னிடம்பே சத்தயாராயிருக்கிறார்களென்பதை அறிவீராக. என எழுதினர்போலும்

தென்காசி ஊரையும் அவ்வூரிலுள்ளகண்ணியமிக்க அறிஞர்களையும் கனைபடுத்துவதற்காகவே குலத்தைக்கெடுக்கவந்த கோடாரிக்காம்புபோல் முஸல்மான் ஆசிரியரும், அவரின் கோஷ்டியினரும் கிளம்பி இருப்பதைக் கண்டு இனி சரியானபடி கண்டித்து ஒடுக்காமல் ஒருபோதும் விட்டுவிடமாட்டார்களென்பதை திட்டமாக அறிவீராக.

ஏ ஆசிரியனே! தென்காசியிலுள்ள ஒவ்வொரு அறிஞரும் இதைக்குறித்துப் பேசத்தயாராயிருக்கிறார்களென்பதை அறிவீராக. என எழுதிய நீவிர் நமது கோஷ்டியினரன்றி வேறு தென்காசியிலுள்ள அறிஞர்களில் நமது கொள்கைகளிலொன்ருகிய குர்ஆன்ஷரீப் ஓதலாகாதென வாதிப்பவர்கள் எம் சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம் அறிஞர்களில் எத்தனை அறிஞர்கள் தயாருக இருக்கின்றனரென்பதையாவது அவர்களின் நாமத்துடன் முதலாவது நீர் வெளியிடுவீராயின். உம்மை யொரு மனிதனென்ருவது மதிக்கலாம். இன்றேல் அல்லாஹுத்தஆலா அருளியிருப்பதுபோல் கன்னுஸ் என்னும் ஷைத்தான் இக்காலத்தில் நீரேயன்றி வேறில்லை என்பதை எல்லா முஸ்லிம்களும் கூறத்துணிவர் என்பதை அறிவீராக.

அறிக்கையின் 4வது பாராவில்:— ஜனுப் மக்கீசாஹிபே! எங்களைக் குபிர் பிரசாரகர்களென்றும் சுன்னத்துவல் ஜமா அத்தின் கோட்பாடுகளுக்கு முரணுன கொள்கைகளைப் பரவச்செய்கிறவர்களென்றும் தாங்கள் எழுதியபடி எண்பிக்க தங்களுக்குப்போதிய இல்மும் ஆற்றலுமிருக்கும் பக்ஷம் தாங்கள் உயர்தர உலமாக்களென்று தென்னிந்தியாவில் யாரைக் குறிப்பிடுகிறீர்களோ அப்படிப்பட்டவர்களில் தங்களுக்குத்துணையான அனைவரையும் சேர்த்துக்கொண்டு ஓர்சபைகூட்டி "முஸல்மான் கோஷ்டியாரை" அந்தச்சபைக்கு அழைத்து தங்களது தாவாவைஸ்திரப் படுத்துங்கள் தங்களது தாவாவைச் சட்டப்படி ருஜுப்படுத்தி விட்டால் தாங்கள் உண்மையாளர்தான், தங்களதுதாவாவை ஸ்திரப்படுத்தவில்லையாயின் தங்களது தாவாவை ஒப்புக்கொண்டு தௌபாச்செய்து விடவேண்டும் இதில் வாதி தாங்களாகும்; தங்களுக்கெதிராக முஸல்மான் கோஷ்டியாரில் யாரையும் தெரிந்தெடுப்போம் நாம் நாளது ஜமாதுல் அவ்வல்மாதம் 15உக்கு மேல் அயலூர் யாத்திரை போகவேண்டியதிருப்பதால் மேற்கூறிய சபையானது இம்மாதம் 15உக்குள் கூட்டப்பெற்று

முடிவடையவேண்டும். இதற்கு இசைந்து சத்தியத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்ட இஷ்டமிருந்தால் உடனே நோட்டீஸ் வாயிலாய் தெரிவிக்க. வேற்றுமையையும் விரோதங்களையும் வளர்க்க. இஷ்டமிருந்தால் தங்களது இஷ்டம்'' எனவரையப்பட்டிருக்கிறது

ஜனுப் அப்துல்காதிர் சாஹிபே! தங்கள் முஸல்மான் சஞ்சிகையின் தொகுதி 3, பகுதி 10, பக்கம் 284ல் தாங்கள் வெளியிட்டுள்ள குறிப்பில் பல சடங்குகளைப்பற்றி விபரிப்பதினூடே "அக்கீகாச் சடங்கு, பாத்துச் சடங்கு, மரணத்தில் நடக்கும் சடங்கு, மூன்றும் நாள் 7' 15, 21. 40, முதலிய நாட்களின் சடங்கு, வருஷப்பாத்திஹாச் சடங்கு, மௌலீது சடங்கு, என்றும், தலைவர்கள், சீமான்கள்' ஆலீம்கள் நன்கு கவனித்து இஸ்லாமிய ஆசாரத்தைப்போதித்து முஷ்ரிகீன் சடங்குகளை நிவர்த்திப்பார்களென நம்புகிறோம் என்று எழுதியிருப்பதால் அகீக்காக்கொடுத்தல், பாத்து வணக்கம், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதுதல் முதலியன நிவர்த்திக்க வேண்டிய முஷ்ரிகீன் சடங்கு எனவரைந்துள்ள தாங்கள் அவைகளை விலக்கித்தடைபுரிந்து முஷ்ரிகீன் பிரசாரம் செய்யவில்லை என்று இனிக்கூறின் எற்றுக்கொள்ளக்கூடியதில்லையே தாங்கள் முஷ்ரிகீன் பிரசாரம் செய்துவருவதில் வடகரை, ஜனுப் வ.ரஜப்பக்கீர் இராவுத்தரவர்களால் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தால் தாங்கள் அடிக்கடி வடகரைக்குப்போய்த் தங்கள் சகாக்களுடன் கூடி மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகாதெனக் கூறியதைக்கேட்ட பொது ஜனங்கள் ஜனுப் மௌலானு மௌலவி செய்யது முஹம்மது ஷரபுத்தீன் சாஹிப் அவர்களிடம் வினவவே மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகாதெனக்கூறுவது வஹ்ஹாபிகளின் கொள்கைகளெனவும் அவைகளை சுன்னத்வல்ஜமாஅத்து முஸ்லிம்கள்ஆதரிக்கவோ அநுசரிக்கவோகூடாதெனக் கூறியும்; சுன்னத்வல் ஜமாஅத்துக்கொள்கைப்படி மௌலீதுஷரீப், கத்தம் பாத்திஹா ஓதவேண்டியது அவசியமென விளக்கி "தரீகுஸ்ஸவாப்-பீ-ஈஷாலித்தவாப்'' என்னும் ஓர்நூலுமியற்றி வினியோகஞ்செய்திருக்கிறார்களெனவும் அதிலிருந்து தாங்களும், தங்கள்கோஷ்டியினர்களும் பொறுமையும், துவேஷமுங்கொண்டு கனம் ஹஸரத்தவர்களைத்தூற்றித்திரிகிறீர்களென்பது வெளியாகிறது

அப்பால் மேற்படி மௌலானு மௌலவி செய்யது முஹம்மதுஷரபுத்தீன் சாஹிப் அவர்களிடம் வேறுசிலர்; தாங்களும், தங்கள் கோஷ்டியி

னூர்களும் குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகா தெனக்கூறுவதாகவும், அவைசரியா? தப்பா? என வினவியதற்கு குர்ஆன் ஷரீப் ஓதலாகாதெனக்கூறுகிறவர்கள் காபிர் என்றும் மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகாதெனக்கூறுகிறவர்கள் வஹ்ஹாபி என்றும் கூறியதைப்பொது ஜனங்களுக்குள் பேசிக்கொள்வதைக் கேள்விப்பட்டு சென்ற 1926-ம்ஹு அக்டோபர்மீ வெளியான முஸல்மான் சஞ்சிகை தொகுதி 4 பகுதி4 பக்கம் 100ல் மௌலீது ஓதக்கூடாது அதற்கு கூலி கொடுக்கலாகாது குர்ஆன்ஷரீப் கத்தம் பாத்திஹா ஓதக்கூடா தென்றும் அதற்கு கூலி கொடுக்க லாகாதென்றும் கூறுவோரே வஹ்ஹாபிக்கூட்ட மென்றுவேறு (காபிர்?) சிலரும் இப்படிப்பல்வேறுவிதமாக பொதுஜனங் களுக்குள் பேசிக்கொள்ளப்படுகிறதுமன்றி சிலஆலிம்களும் இதைப்பேசிக் கொள்வதாகவும் கேள்விப்படுகிறோம் எனினும் விஷயம் தெளிவாக விளங்கவில்லை யாதலால் கீழ்க்கண்ட வினுவின்படி விடைபகர உலமாக் கள்சமுகம் வேண்டுகிறேன் என்றும் வஹ்ஹாபி என்பது யார் என்பது போன்ற நான்கு வினுக்களும் வெளியாயிருக்கின்றன

குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம்,பாத்திஹா ஓதலாகாதெ னக்கூறுவது சுன்னத்வல்ஜமாஅத்துக்கு முரணானதென ஜனுப் மௌலா ளு மௌலவி செய்யது முஹம்மது ஷரபுத்தீன் சாகிபு அவர்கள் கூறிய தால் தங்கள் முஸல்மான் கோஷ்டியினர்களின் கூற்றுப்பலிக்காமல் போக வே மதப் பிரசாரத்தைத் தடைபுரிந்து விட்டதாக தங்கள் முஸல்மான் கோஷ்டியினர் உண்மையையொழித்துப் பொருமையாய் ஜனுப் மௌலா ளு மவுலவி செய்யது முஹம்மது ஷரபுத்தீன் சாஹிப் அவர்கள் பேரில் பழிமொழிகளைச்சுமத்தி நிந்தனையாகத்தூற்றி எழுதப்பட்டதுகளைத் தாங் களும் ஆதரித்துமுஸல்மானில் வெளியிட்டுப்பத்திராதிபர் குறிப்பும் வெளி யிட்டீர்கள்

இவ்வாறு தாங்களும், தங்கள் கோஷ்டியினர்களும் பொய்யும், பொருமையுமாக எழுதிவருவதைக் கண்டித்து மறுப்பு எழுதி வெளியிட் டேன் ஆனுல் தாங்கள் அகீக்காகொடுத்தல், பாரத்துவணக்கம், மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா முதலியவைகள் முஷ்ரிகீன்சடங்கு என்று எழு தியதிலும்; தாங்களும் தங்கள் முஸல்மான் கோஷ்டியினர்களும், குர்ஆன் ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகாதெனக்கூறியதிலும் தங்களுடையவும் தங்களுடைய கோஷ்டியினர்களுடைவும் கொள்கைகளில்

எவ்வித மாறுதலுமில்லை என்பதை ஒப்புக்கொண்டு ஆதரித்தே ஆராய்ச்சியில் அவைகள் சுன்னத்வல் ஜமா அத்திற்கு மாற்றமான தில்லையென்றும் முஸல்மான் கோஷ்டியாரின்முரணனகொள்கையி ல்லைஎன்றும்; அறிக்கையில் அல்லாவும், ரசூலும், ஸஹாபாக்க ளும், இமாம்கள் முதலியோரும்சொல்லப்பட்ட விஷயமென்றும் கூறிஇருப்பதுகளைநன்றுகஞாபகத்தில்வைத்துக்கொண்டுதாங்கள் உண்மையுடையோராயின் இனிஇது விஷயங்களில் எவ்விதமாறுத லுங்கூறுமல் குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும்; அகீக்கா கொடுத்தல், பாரத்துவணக்கம், மௌலிதுஷரீப், கத்தம், பாத்திஹா முஷ்ரிகீன் சடங்கு என்றும் கூறும் தங்களின் இக்கொள்கைகளை உண்மையோடும் உறுதியுட னும் எம் சுன்னத்வல் ஜமா அத்தின் கிதாபுகளை ஆதாவு காட்டி விவாதித்து தங்கள் கொள்கையை ஸ்தாபிப்பதற்குப்போதிய அ றிவும், ஆற்றலும், இல்மும் பெற்றவரென்று தங்கள் கோஷ்டியி னரில் யாரைக்குறிப்பிட்டுத்தாங்கள் அனுப்புகின்றீர்களோ அவ ருடன் அல்லாரசூல் கிருபையைக்கொண்டு நான் விவாதித்து அகீ கீகா கொடுத்தல், பாரத்துவணக்கம், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா, முதலியன முஷ்ரிகீன் சடங்குஎன்றும், குர்ஆன்ஷரீப் ஓதலாகாதென்றும் கூறுகின்றவர்களை காபிர்களென்றும், மௌ லீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகாதெனக்கூறுகிறவர்களை வஹ்ஹாபி என்றும் தக்கஆதாரத்துடன் திட்டமாய் ஸ்திரப்படு த்தியே தீருவேன் என்பதை அறிவீர்களாக.

தங்களுடையவும், தங்கள் கோஷ்டியினர்களுடையவும் கொள்கைகளாகிய மௌலிதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம், பாத் திஹாஓதப்படாதென்பதுபோல் அவைகளைத்தடைபுரிகிறவர்களை வஹ்ஹாபிஎன்றும், வேறுசிலர் (காபிர்என்று) என்றும் பொதுஜன ங்களும், ஆலிம்களும் சொல்வதாகவும் விஷயம்தெளிவாகவிளங்க வில்லை என்றும் முஸல்மானில் வெளியானதுபோலவே நானும் எனது மறுப்பு நூலில் எழுதிஇருப்பதில்தெளிவாகவில்லை என்று எழுதியதைத்தெளிவுபட குர்ஆன்ஷரீப், ஹதீதுஷரீபின் மேற் கோள்களுடன் விளக்கியுள்ளேன். அதுவே முஸல்மான் கோஷ் டியார்களின் கொள்கை என்று கூறியிருப்பின் அதற்குத்தக்க

வாயாப்பு அப்பவே வெளியிட்டிருப்பேன். தாங்கள் இஸ்லாமி யப்பிரசாரஞ்செய்வதாய்ச்சொல்லி இவ்வாறெல்லாம் எழுதிவந்த தில் இக்கொள்கைகள் சுன்னத்வல் ஜமா அத்திற்கு முரணானதில் லையென்றும்; அல்லாவும், ரசூலும், ஸஹாபாக்களும், இமாம்கள் முதலியவர்களால் சொல்லப்பட்ட தென்றும் எவ்வித ஆதாரவும், மேற்கோளும் காட்டாமல் வெறுமனே தாங்கள் எழுதிவிட்டால் அவைகளை சுன்னத்வல்ஜமாஅத்துச் சட்டப்படி சுன்னத்வல் ஜமாஅத்திற்கு முரணானதில்லை என்று அல்லா(ஹ்)வும், ரசூலும், ஸஹாபாக்களும், இமாம்கள் முதலியோரும் சொல்லியிருக்கிற ஆதாரவான மேற்கோள்களை எடுத்துக்காட்டி தங்கள் கொள்கை தவறானதில்லை என்று ஸ்தாபிப்பதற்கு நான்தானே சபைகூட்ட வேண்டும்? தங்கள் கொள்கை தவறு என்று நான் மறுப்பு எழுதி யதின்பின் தவறில்லை எனின் அக்கொள்கைகள் தவறில்லை என்ப தை ஸ்தாபிக்க வேண்டியது தாங்களேயன்றி நானல்லவேஆத லின் இதில் வாதி தாங்களேயாவீர்கள் ஆகவே சத்தியத்தையும், சமாதானத்தையும் நிலைக்கச்செய்ய விரும்பின் அகீக்கா கொடுத் தல், பராத்துவணக்கம், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா முஷ் ரிகின் சடங்கு என்றும் குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும் கூறும் தங்கள் கொள்கைகளை சட்டப்படி ருஜூப்படுத்துவதற்கு உடனே உலமாக்கள் சபை கூட்டி நோட்டீஸ்வாயிலாகத் தெரியப்படுத்த வேண்டியது அதி ன்றி இன்னமும் வீண்பஸாதையும், பித்னாவையும் விளைவித்து பிரட்சியையும், பிளவையும் உண்டுபண்ணுவதே தங்களுக்குப்பிரி யமாயின் தங்களிஷ்டம்

ஆனால் தாங்கள் என்னை உலமாக்கள்சபை கூட்டும்படியா கவும் அதுவும் நாளது ஜமாதுல் அவ்வல் மாதம் 15உக்குள்சபை கூட்டி முடிவடைய வேண்டு மென்றும்; 15உக்குமேல் அயலூர் யாத்திரை போகவேண்டியதாயிருப்பதாயுங் கூறுவதைக் காணுங் தோரெல்லாம் பெருந்நகைப்பே வருகின்றன, ஏனெனில் தாங்கள் முன்னர் தென்காசி பரிமளம் முஹம்மதப்பா சாஹிப் என்பவரை

விவாதத்திற்கழைத்து குறித்த ஓர்இடத்தில் 16—5—24ல் வந்து ஆஜராகும்படியாகத் தெரிவித்த பின்னர் அவர் தங்களோடு விவாதிப்பதற்குத்தயாராக இருப்பது தெரிந்ததும் 13—5—24ல் வெளியூர் போவதாகத் தாங்கள் தெரிவித்துவிட்டு தலையை வெளிக்கிக்காட்டாமல் பத்திரமாய்ப் பதுங்கிக்கொண்டது போலப்பொழுது இவ்விஷயத்திலும் செய்யலாமென்றெண்ணி இவ்வாறு எழுதத்துணிந்தீர்களென்றே எண்ணவேண்டியதாகிறது ஆகையாலினி எவ்வித ஏமாற்றமும் நடக்கக்கூடியதாயில்லை என்பதை அறியவேண்டியது.

ஆகவே தாங்கள் உலமாக்கள் சபை கூட்டி, தங்கள் தாவாவை ஸ்திரப்படுத்துவது ஒருபுரமிருக்கட்டும் "முஸல்மான் கோஷ்டியார்களுக்கோர் வாயாப்பு" என்னும் எமது நூலில் தாங்கள் வெளியிட்டுள்ளவைகளை எமது சுன்னத்வல் ஜமாஅத்திற்கு முற்றும் மாற்றமானதென்று குர்ஆன்ஷரீப், ஹதீதுஷரீப், இமாம்கள் வாக்கியங்களை ஆதாரவுகாட்டி.நான் எழுதி இருப்பதுபோல் தாங்களும்ஆதாரவுகாட்டி தங்கள்கொள்கைகள் சுன்னத்வல் ஜமாஅத்திற்கு மாற்றமானதில்லை என்பதைத் தெளிவாகத்தாங்களும், தங்கள்கோஷ்டியினர்களும் ஒன்றுகூடியாவது மறுப்புஎழுதி அடுத்த மாதம் வெளியாகும் தங்கள் முஸல்மானிலேனும் வெளியிடுவீர்களாயின் தங்களுடையவும் தங்கள் கோஷ்டியினர் களுடையவும் அறிவும், ஆற்றலும், கல்வித்திறனும் அறிந்துகொண்டு அதன்பின் மற்றவைகளைப்பற்றி யோசிக்கலாம் அதின்றி ஆராய்ச்சி யெழுதியது போலினியும் யெழுதிக்கொண்டிருப்பது யோக்கியமானதில்லை என்பதையும் அறியவேண்டியது.

தங்கள் ஆராய்ச்சியில் காணும் வார்த்தைகளைப் போன்ற பதங்கள் இந்நூலிலும் காணப்படுவதுகளெல்லாம் பதிலுக்குப் பதிலென்றே கொள்க. ஆசிரியர் பதவியை வகிக்கும் தாங்கள் அயோக்கியத்தனமாக எழுதுவதெனின் எம்போன்றவர்கள் ஏன் அதுபோல் எழுதி அறிவுருத்தலாகாதென்றே எழுதப்பட்

டது தாங்கள்யோக்கியமாக யெழுதியிருப்பின் நானும்அவ்வாறே எழுதி யிருப்பேன் என்பதையும் அறிவீராக.

# தென்காசி,

## "முஸல்மான்" ஆசிரியரின்,

# முழுப்பொய்.

---

நாளது ஹிஜிரி 1347 வருஷம் ஜமாதிலவ்வல் மாதம் வெளியான முஸல்மான் சஞ்சிகையின் 116-வது பக்கத்தில் மௌல்வி ஷரபுத்தீன் சாஹிப் என்னும் தலைப்பின் கீழ்,

"மௌல்விசாஹிப் அவர்கள் தங்கள் சுயதேசமாகிய வடகரையில் மௌலீது ஓதுவதை நிறுத்தினதாகவும் பாத்திஹாவைத் தடைபுரிந்து ஜூம்ஆதராவீஹை நிறுத்தினதாகவும் பள்ளிவாசல் கட்டுவதற்கு வசூலித்த தொகைக்குச்சரியான கணக்கு காட்டவில்லையென்றும் புகார் ஏற்படுகிறது. இதினுண்மையை மௌல்விசாஹிப் வெளியிடுவார்களென நம்புகிறோம் இன்றேல் இது சம்மந்தமான வியாஸங்களைப் பிரசுரிக்க நேரிடுமென்பதை அறிவித்துக் கொள்கிறோம்" என்று வரையப்பட்டிருக்கிறது.

ஏ, முஸல்மான் பத்திராதிபரே தாங்கள் மௌலானா மௌல்வி ஸையிது முஹம்மது ஷரபுத்தீன் ஹஸரத்தவர்கள்பால் தங்கள் மனதில் வைத்துள்ள பொறாமை கீழ் வரைந்த கவியின் தன்மையாகும்

ஒருகாலுந் தருகாது குணக்கெழுந்து
குடக் கோடற் குறும் வெய்யோனை
இருகாலும் வழங்காதான் முன்னோடி
மறிப்பனென்னு மியற்கை போலக்
குருகாலுமலர் வாவி புடை சூழுமக்க நகர்க்
குறிசிறன் பாற்
பொருகாலக் கதிரிலைவேல் வலனிலங்க
விரைவினெடும் புறப்பட்டானே.

என்னும் கவிதைபோலும்

ஷி முஸல்மான் பத்திரிகையில்கண்ட வியாசத்தின் கீழ்கையொப்பமல்லாது அநாமதேயமாயிருப்பதால்உண்மையல்லாத விஷயங்களை உண்டுபண்ணி எந்த அயோக்கியப்பேர்வழிகளாவது தமது பெயரைக் குறிப்பிடாமல் வெளியிடும்படியாக வேண்டினரோ அல்லது முஸல்மான் ஆசிரியரே இவ்வாறு முழுக்காலித்தனமாக எழுதி இருக்கின்றனரோ தெரியவில்லை.

தென்காசி முஸல்மான் ஆசிரியர் இஸ்லாமியப் பிரசாரம் செய்வதாய்ச்சொல்வது இவ்விதம் முனுபிக்தனமாக எழுதி வீண் பஸாதையும் பித்னாவையும் விளைவிப்பதேஎன்று உண்மையல்லாத விஷயங்களை எழுதியிருக்கின்றனர் போலும். இவ்வாறு கதை கட்டி எழுதுவது மல்ஊனாகிய இப்லீசின் வேலை என்பதையுணராமல் போனதேனோ?

ஏ, கட்டுரை பகரும் முஸல்மான் ஆசிரியரே! எங்களூரில் முன்வழமையாக ஒளலியாக்களின் தர்காக்களில் நடத்தி வந்த கொடி, கூடு எடுத்தல் முதலிய மதவிரோதமான காரியங்களைநிறுத்தியும், மௌலீதுஷரீப் ஓதும்படியாக ஏற்பாடுசெய்தும் மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதவேண்டியது அவசியமென்றும் கூறி, அதைப்பல ஆதாரங்களுடன் விளக்கி ஒரு நூலும் வெளியிட்டிருப்பதோடு முஸ்லீம்களுக்கென்று இங்கு கல்விச்சாலை இல்லாதிருந்த குறையை நிவர்த்தி செய்யும்பொருட்டு அரும் பெரும் பிரயாசத்துடன் அதை ஸ்தாபித்தும் இன்னும் இதுபோன்ற எத்தனையோ நன்மைகளைச்செய்தும் செய்துகொண்டும் வருகிற ஜனுப் மௌலானா மௌலவி செய்யது முகம்மது ஷரபுத்தீன் ஹஸரத்தவர்களிடத்து பொறாமைகொண்ட எங்களூரில் சிலருடன் முஸல்மான் ஆசிரியராகிய தாம் அடிக்கடிவந்து கலந்துபோவதில் மௌலானா மௌல்வி சையிது முஹம்மது ஷரபுத்தீன் ஹஸரத்தவர்கள்ஊரிலில்லாதகாலங்களில் நீங்கள்மௌலீதுஷரீப் கத்தம், பாத்திஹா, ஓதக்கூடாதென்றும் அதற்கு கூலிகொடுக்கலாகாதென்றும் கூறியதைக்கேட்ட பொதுஜனங்கள், கனமிக்க ஹஸரத்தவர்கள் வந்ததும் அவர்களிடம் கேட்கவே, இவ்வாறு கூறுவது வஹாபிக்கொள்கை யென்றும் அதையனுசரிக்கலாகா

தென்றும் கூறினார்கள். இதைக் கேள்விப்பட்ட எமதூரார்களில் சிலர் தமது சஞ்சிகைக்கு சந்தாதார்களாயிருந்தவர்கள் வஹாபி பத்திரிக்கையை வாங்கி வாசிக்கலாகாதென நிராகரித்துவிட்டது முதல்தாங்களும் தமதுசகாக்களும் கனம்மிக்க ஹஸரத்தவர்களின் மீது ஆத்திரங்கொண்டு பலவிதமாகப் பழித்து இல்லாத விஷயங்களையெல்லாம் ஏறுக்குமாறாக எழுதிவருகிறீர்கள். இவ்விதம காலித்தனமாக எழுதுவதற்குத்தானா, தாங்கள் தென்காசியில், முஸல்மான் சஞ்சிகை நடத்துகின்றீர்கள்.

வடகரை மஸ்ஜிதில் வழக்கமாய்த்தொழுவித்துவந்த பேஷ் இமாம் தங்களின் சகாக்களின் கொள்கையை மறுத்ததால் கனம் ஹஸரத்தவர்கள் ஊரிலில்லாத சமயம் பேஷ்இமாமை தொழுவிக்கப்படாதென்று தடைபுரிந்து தங்கள் கொள்கையினனாகிய ஒருவரைக்கொண்டு தொழுவிக்கச் செய்து சதா சச்சரவுகளை வளர்த்து ஒரு ஜும்ஆவையும் தொழுகவிடாமல் தடைபுரிந்துநிறுத்திவிட்டவரின் சகாவான தாங்கள் கனம் ஹஸரத்தவர்கள், ஜும்ஆ தராவீஹை தடை புரிந்ததாகவும், மௌலீது ஓதப்படாதென்றும் கத்தம் ஓதப்படாதென்றும் கூறியதாக திரித்துக்கூற முன்வந்த நீங்கள், கொஞ்சமாவது அல்லாவுக்கும், ரசூலுக்கும், பயந்திருப்பீர்களேல் இங்ஙனம் எழுதத்துணியமாட்டீர்கள்.

எங்களூரில்மஸ்ஜித் முதலியன கட்டுவதற்கு பெரும் முயற்சியும் அரும் பிரயாசையும் எடுத்துப்பொருள் வசூலித்தது கனம் ஹஸரத்தவர்களேயாயினும் வசூலான தொகைகளை இருப்பு வைத்து செலவுசெய்து கணக்கு எழுதியது கனம் ப. நா. வாவா முஹையதீன் ராவுத்தவர்களேயாவார்கள். அவர்கள் ஷெ வரவு செலவு கணக்குகளை ஊர்ஜமா அத்தார்களிடம் காட்டி சரிகண்டபின் இப்பொழுது கனம் ஹஸரத்தவர்கள் மஸ்ஜித் கட்டுவதற்கு வசூலித்த தொகைகளுக்கு சரியான கணக்கு காட்டவில்லையென்று புகார் வருவதாகத் தங்கள் முஸல்மானில் வெளியிட்டது அறிவீனமல்லவா? எங்கள் ஊர்ப்பொதுக்காரியங்களில் இவ்வாறு இல்லாத விஷயங்களை எழுதி பஸாதையும் பித்னாவையும் விளைவிப்பது சரியானதல்ல என்பதை யுணர்வீர்களாக.

வ, ரஜப் பக்கீர் இராவுத்தர்,

வடகரை.

## தென்காசி,
## "முஸல்மான்" கோஷ்டியார்களின் வினவுக்கு விடை

சென்ற 1928-ம்௵ அக்டோபர்௴ வெளியான தென்காசி முஸல்மான் சஞ்சிகையில் (1) கு.சை.ஷாஹுல் ஹமீத் (2) முஹம்மதுநாகூர் (3) கு. பீ. முஹம்மத்இஸ்மாயீல் எனக் கைச்சாத்திட்டு வெளியான சுவாலில் அவர்களின் வினக்களுக்கு விடை இதுகோமற்போனதுவெட்கமென்றும் அதிசீக்கிரம்விடையிறுப்பீர்களென எதிர்பார்க்கின்றேமென்றும், தங்களது செயற்கைக் குணத்தால் ஏசாமல் இயற்கைக் குணத்தால் ஜவாப் கொடுப்பீர்களாக வென்றும், வெளியிட்டு விட்டு அதற்கடுத்த நவம்பர்௴ வெளியான முஸல்மானில்மக்கீசாஹிபுக்கோர் எச்சரிக்கையென்னுந்தலைப்பின் கீழ் தன்ஸீம்சங்க(தென்காசியிலிருக்கிறதா?)அங்கத்தினர், தென்காசி என்று கையொப்பமிட்டு வரைந்திருப்பதில் தங்களுக்கும் எங்களுக்கும் இதுகாறும் எவ்வித சம்பந்தமுமில்லை என்பது வெளிப்படை ஜனுப் மௌலவி ஷரபுத்தீன் ஸாஹிப் அவர்கள் வெளியிட்ட வார்த்தையின் உண்மையை அறிவதன்பொருட்டு அன்னாரிடம் விடுத்த வினக்களை நகல்செய்துகொண்டு எழுதியிருக்கிறீர்களென்றும், வக்காலத்துப்பெற்றுக்கொண்டீர்களா?என்றும், தூஷிப்பதாயும் அவ்வாறு தூஷிப்பதற்குக்காரணம் காட்டித்தீரவேண்டியது தங்களது பொருப்பென்பதை இதன் மூலம் எச்சரிக்கை செய்கிறே மென்றும் வேறுபலவும் எழுதிக்காணுகிறது எச்சரிக்கை செய்கிறே மென்றெழுதி பூச்சாண்டி காட்டப் புரப்பட்டதேன்? பனங்காட்டுநரியா சிலுசிலுப்புக் கஞ்சப்போகிறது அந்தோ அறியாமையே.

அக்டோபர்௴ வெளியிட்டுள்ள விஷயமும் அதற்கடுத்த நவம்பர்௴ வெளியிட்டுள்ள விஷயமும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்படக்கூறப்படுவதால்இவ்விரண்டில்இயற்கைக்குணத்தோடு

எழுதியதெது செயர்க்கைக் குணத்தோடு எழுதியதெது என்பது புரியவில்லை முழுதும் கெட்டஎண்ணத்துடனும் கொடியநோக்கத்துடனும் முன்னுக்குப்பின் முரணுக மதி கெட்ட மாறுபாடான விஷயங்களை வெளியிடுவது பொருத்தமானதா? என்பதைக்கூட சிந்தித்துப்பார்ப்பதற்கில்லாமல் மந்தப்புத்தியால் மழுங்கி நிந்திக்க வேணு மென்றே ஆத்திரத்தை மூட்டி க்ஷாத்திரமா யெழுதிக் காணுகிறது சென்ற1926-ம்ஞ அக்டோபர்ஸ்ரீ வெளியானமுஸல்மானில் முஹம்மதுநாகூர் என்னும் கையொப்பத்துடன் விடுக்கப்பட்ட வினுவில் "கீழ்கண்ட வினுவின்படி விடைபகர உலமாக்கள் சமுகம்வேண்டுகிறேன்" எனவெளிவந்துள்ளதை எமது மறுப்பிலும் அப்படியே எடுத்துக்காட்டியிருந்தும் எள்ளத்துணையேனும் அறிவிருப்பின் தங்கட்கும் எங்கட்கும் யாதும் சம்பந்தமில்லாத நிலைமையில் இவ்வாறு எங்களைத் தூஷிப்பதற்குக் காரணங்காட்டித்தீரவேண்டியது தங்களது பொறுப்பென்பதை இதன் மூலம் எச்சரிக்கை செய்திருக்கிறோம் என்று எழுதத்துணிவீர்களா?

மௌலீதுஷரீப், குர்ஆன்ஷரீப், கத்தம், பாத்திஹா ஒதலாகா தெனக்கூற நமது முஸல்மான் கோஷ்டியினர்க்கு அருகதையுண்டென்றால் அதைமறுப்பதற்கு எமக்கும் பாத்தியதையுண்டென்பதை அறியும் அறிவற்றுப் போன தென்ன? இஸ்லாம் யார் அப்பன் வீட்டுச்சொத்து

குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஒதலாகாதென நீங்கள் கூறவில்லையாயின் குர்ஆன்ஷரீப் ஓதப்படாதென்பவர்களை வழிகெட்ட கூட்டத்தாரென்றும் மௌலீதுஷரீப் கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்பவர்களை வஹ்ஹாபி என்றும் கனமிக்க ஜனுப் மௌலானு மௌலவி செய்யது முஹம்மது ஷாபுத்தீன் ஹஸரத்தவர்கள் வெளியிட்டவார்த்தையின் உண்மையை அறிவதன் பொருட்டு வினுவிடுக்கவேண்டிய அவசியமென்ன? குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படா தென்பது நங்களின் குருட்டுக் கொள்கையாயிருப்பது பற்றியன்றோ?

பொறுமையும் பொருமலும்கொண்டு அறியாமையிலாழ்ந்து அகங்காரங்கொண்டு மனப்புழுக்கத்தால் வேதசிந்தனையின்றி விரோதசிந்தனையாக உண்மையார்த்தங்களை உணருது ஏற்றவும்மாற்றமாய் சீற்றங்கொண்டு வாய்புளித்ததோ? மாங்காய்புளித்ததோஎன நுங்கள் நபும்ஸக பாணத்தை அடியோடு வெறுக்கத்தக்க அபத்தமொழிகளால் அலங்கோலஞ்செய்து நீசத்தனமாய் நிந்தித்து சராமாரியாக வரைந்து ஆற்றிலொருகாலும் சேற்றிலொருகாலுமாக எழுதிவருகின்றீர்கள் குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம்,பாத்திஹா ஓதலாகாதென நீங்கள் அதிகப்பிரசங்கம் செய்யவில்லையாயின் தடைபுரிவோர்களுக்குறிய மார்க்க விடையை சம்மதியோடேற்று நிம்மதியாயிருக்கலாமே துன்மதியோடு தூற்றித்திரிவானேன் இம்மியத்துணையேனும் இஸ்லாமியக் கலாஞானமிருப்பின் கனமிக்க ஹஸரத்தவர்கள் நவின்ற மார்க்க விடை நேரானதா? மாறுனதா? என்பதை நிதானமாயறிந்து நுங்களின் தாவாவை தக்க ஆதாரத்துடன் ஸ்திரப்படுத்தி எழுதலாமே. அதின்றி அனுவசியமான அசூயைகொண்டு பொருமையாலும் புனைசுருட்டாலும் வெறுக்கத்தக்க விஷயங்களையே வெளியிட்டு வருவதைக்காண இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதாய்ச் சொல்லி நடத்தி வந்த தகல்பாஜி தகடு தத்தச் சம்பிரதாயப் பிசகான பிரசாரத்திற்கு உலை வைத்து விட்டதாயெண்ணியன்றோ அசுசிகரமான அபவாதமும் அருந்தூஷணையுமாக எழுதிவருகின்றீர்கள் இத்தகைய நடபடிக்கைகளிலிருந்து குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படா தென்பது நுங்களின் வெறுப்பா,விருப்பா வென்பது வெள்ளிடைமலைபோன்ற விசாலமான சாட்சியமாய் நுங்கள் கருத்துகளைக் காண்பித்துக் கொண்டிருக்கின்றன அறியாமையே நுங்கள் ஆக்ஷேபத்திற் கெல்லாம் அஸ்திபாரமா யமைந்திருப்பது பற்றியன்றோ நுங்கள்கொள்கைகளைபர்தாவுக்குள்பதுக்கிவைத்து கொண்டு உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் உரைந்து கிடக்கும் வஹாபிகளைஉருட்டிப்பிரட்டிமிரட்டித்திரட்டித்தூஷணிக்கத்துணிந்தீர்கள் இவைகள் வெளியாவதால் வெட்கமும் பிணைந்து பார்க்கில் துக்க

மும் ஏற்படுவது கொண்டே விடை இறுக்காமல் போனது வெட்கம் எனஎழுதினீர் போலும்.

"தென்காசியிலுள்ள வாசித்தவகுப்பாரும் இதைப்பற்றிக் கேட்கத்தயாராயிருக்கிறார்கள்" எனவும் எழுதிய தன்ஸீம் சங்க அங்கத்தினரே! தம்போன்ற நாவல்வாசித்தவகுப்பாரா? அல்லது நாடகப்பாட்டுபடித்தவகுப்பாரா என்பது புரியவில்லை.

சென்ற 1926-ம்ஷு அக்டோபர்மீ" வெளியான தென்காசி முஸல்மான் சஞ்சிகையில் முஹம்மது நாகூர் என்போருல் விடுத்துள்ள வினவுக்கு விடை.

(1) மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதலாகாதென்போரும் கபறுகளை சியாரத்துச்செய்வதும் ஒளலியாக்களிடம்வஸீலாத் தேடுவதும்கூடாதென்றும் இன்னும் இதுபோன்ற சுன்னத்வல்ஜமாஅத்தின்கொள்கை களுக்குமாறாக கூறுகிறவர்களேவஹ்ஹாபி. மௌலீதுஷரீப், கத்தம், ப்பாத்திஹா ஓதப்படாதென்று கூறியதால் யாரைக்குறிப்பிட்டுவஹ்ஹாபி என்று தென்காசியின்பொது ஜனங்களும் ஆலிம்களும் பேசிக்கொள்வதாய்ச் சொல்லப் படுகிறதோ அந்தவஹ்ஹாபிகள் எங்கிருக்கிறார்கள் என்பதை தென்காசியிலேயே கண்டு தெரிந்து கொள்ளவும்.

(2) சுன்னத்வல் ஜமாஅத்தின் கொள்கை களில் முறண்பட்டதே வஹ்ஹாபிகளின் கோட்பாடு.

(3) வஹ்ஹாபிகள் சுன்னத்வல் ஜமாஅத்தில் சேர்ந்தவர்களல்ல.

(4) வஹ்ஹாபிகளிடம் சகவாசங்கொள்ளாது ஒதுங்கிக்கொள்வதும் உதவிபுரியாமலிருப்பதும் அறியாத மக்களை வழிகெடுப்பதற்காய்ச் செய்யப்படும் மூர்க்கப் பிரசாரங்களுக்கு மார்க்கப்பிரசாரஞ்செய்து கண்டிப்பதுமே சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம்கள் நடந்துகொள்ளவேண்டியமுறை.

## தென்காசி,
## "முஸல்மான்" கோஷ்டியார் களுக்கோர்
# வாயாப்பு

தென்காசியினின்றும் மாதமொரு முறைவெளிவந்துலாவும் "முஸல்மான்" என்னும் மாசிகையின் தொகுதி 3: பகுதி 10, பக்கம் 284ல் மேற்படி சஞ்சிகையின் ஆசிரியர் குறிப்பு எழுதியிருப்பதில் பலசடங்குகளைப் பழித்தெழுதுவதினூடே அக்கீகாச் சடங்கு, பராத்துச்சடங்கு, மரணத்தில் நடக்குஞ்சடங்கு, மூன்றும் நாள் 7, 15, 21, 40 முதலிய நாட்களின் சடங்கு, வருஷப் பாத்திஹாச்சடங்கு, மௌலீதுச்சடங்கு, என்றுமெழுதி தலைவர்கள், சீமான்கள், ஆலிம்கள் நன்கு கவனித்து இஸ்லாமிய ஆசாரத்தைப்போதித்து முஷ்ரிகீன் சடங்குகளை நிவர்த்திப்பார்களென நம்புகிறோம் என வரைந்துள்ளார்; அதுபோலவே வடகரைக்குப் போயும் மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதெனப் பிரசாரஞ்செய்ததாய் வடகரை ஜனாப் வ. ரஜப் பக்கீர் ராவுத்தரவர்களால் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தால் வெளியாகின்றன. இவ்வாறு மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்பது சுன்னத்வல் ஜமாஅத்துக்கொள்கைக்கு வேற்றுமையாயிருப்பதுகொண்டு அவ்வாறு ஓதலாகாதெனக்கூறுவோர்களை வஹ்ஹாபி என்று அறிஞர்களில் அனேகப்பொது ஜனங்களும், ஆலிம்களும் வழுத்தவே "முஸல்மான்" ஆசிரியருக்குப்பந்துவும் "முஸல்மான் கோஷ்டியைச் சேர்ந்தவருமான தென்காசி, நடுத்தெரு முஹம்மது நாகூர் என்பவரால் "முஸல்மான்" தொகுதி 4: பகுதி 4, பக்கம் 100ல் "மௌலீது ஓதக்கூடாது, அதற்குக்கூலி கொடுக்கலாகாது, குர்ஆன்ஷரீப் கத்தம் பாத்திஹா ஓதக்கூடாதென்றும், அதற்குக்கூலி கொடுக்கலாகாதென்றும், கூறுவோரே

வஹ்ஹாபிக்கூட்டமென்று வேறு சிலரும் இப்படிப்பல் வேறு விதமாகப் பொது ஜனங்களுக்குள் பேசிக்கொள்ளப்படுகிறது மன்றி, சில ஆலிம்களும் இதைப்பேசிக்கொள்வதாகவும் கேள்விப் படுகிறோம். எனினும், விஷயம் தெளிவாக விளங்கவில்லை யாதலால் கீழ்க்கண்ட வினவின்படி விடை பகர உலமாக்கள் சமுகம் வேண்டுகிறேன்." என்றும் வஹ்ஹாபி என்பதுயார் என்பதுபோன்ற நான்கு வினக்களும் வெளி வந்திருக்கின்றன. அதற்கு முஸல்மான் கோஷ்டியார்களின் வினவுக்கு விடை என்னுந்தலைப்பின் கீழ் எம்மால் பதிலளிக்கப்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு முஸல்மான் கோஷ்டியினர்களின் புரளி ஒருபுறமும் பொது ஜனங்களின் புகார் ஒருபுரமும் கிளம்பவே சாதாரண ஜனங்களிடை சந்தேகந்தோன்றி கனமிக்க மௌலானா மௌலவி செய்யது முஹம்மது ஷாபுத்தீன் ஹஸரத்தவர்கள் சமுகம் பலர் சென்று தென்காசி, "முஸல்மான்" ஆசிரியர் சில பாமரர்களைப் பக்க பலமாய்ச்சேர்த்துக்கொண்டு மௌலூதுஷரீப், கத்தம் பாத்திஹா ஓதப்படாதென்று பிரசாரஞ்செய்து வருவதாய்ச் சிலரும், வேறு சிலர் "முஸல்மான்" ஆசிரியரும் அவர் சகாக்களும் குர்ஆன்ஷரீப், மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும், ஔலியாக்களிடம் வஸீலாத் தேடப்படாதென்றும், கபறுகளை ஸியாரத்துச் செய்யப்படாதென்றும் பலவிதமாகக் கூறித் திரிவதாயும் இக்கொள்கைகள் நேரானதா? மாறானதா? எனவினவவே குர்ஆன்ஷரீப் ஓதப்படாதென்பது வழிகெட்டோர்களின் கொள்கை யென்றும்; மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹாஓதப் படாதென்பதும்; கபறுகளை ஸியாரத்துச் செய்யப்படாதென்பதும் வஹ்ஹாபிகளின் கொள்கையென்றும் ஆதலால்சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம்கள் இக்கொள்கைகளை ஆதரிக்கவோ, அநுசரிக்கவோ கூடாதென்றும் கூறி மார்க்கோபதேசஞ்செய்ததைக் கேள்வியுற்று இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதாய்ச்சொல்லி மூர்க்கத்தனமாக மொழிந்துவந்த முரணான கொள்கைகளை ஏற்கக்கூடாதென இயம்பியதால் வயிற்றுப்பிழைப்புக்கு வகை மோசம்

வந்ததென்றோ வேறெக்காரணத்தாலோ தமதுஇஸ்லாமியப்பிரசாரத்துக்கு இடையூறுசெய்வதாயும் உண்மையையொழித்து இன்மையையியற்றி தூஷணமேபூஷணமாகக்கொண்ட "முஸல்மான்" சஞ்சிகையில் அளவுகடந்த அபத்த மொழிகளையும், பாரப்பழி மொழிகளையும் சமைத்து அசுரமனப்பான்மையாக சதாதூற்றுவதே முஸல்மான் கோஷ்டியினரின் நித்தியதொழிலும் நீதியுமெனக் கொண்டு மிக மிக நீசத்தனமான நிந்தனைப்பிரசுரங்களை வெளியிட்டு வந்தனரென்பது எல்லோருமறிந்ததே.

இவைகளைக்கண்ட யான் "முஸல்மான்" கோஷ்டியார்களின் முரணான கொள்கைகட்கு முக்கிய மறுப்பு என்னுமொரு நூலை இயற்றி வெளியிட்டேன் தென்னை மரத்தில் தேள்கொட்ட பனைமரத்தில் நெரி கட்டிற்றென்னும் வாறுபோல் எமது மறுப்பு நூலில் முஸல்மான் கோஷ்டியினர்களின் முரணான கொள்கைகள் ஒன்றேனும் விபரிக்கவில்லை என்று முஸல்மான் ஆசிரியர் ஆராய்ச்சியில் குறைகூறி எழுதிக்கொண்டு அவ்வாறு முரணான கொள்கைகள் ஒன்றையேனும் விபரிக்கவில்லை யெனக்கூறும் எமது மறுப்பு நூலைக்கண்டதும் காரிருட்பொலிந்த கம்பியவறிவோடு ஆப்புப்பிடுங்கிய அனுமான்போல மயங்கி அறவே ஆதாரமற்ற தமது கோணற்கொள்கையை ஸ்தாபிப்பதற்கு மதியுங்கெதியுமற்றுமௌனம் சர்வார்த்த சாதகமென அப்படியே விட்டுவிட்டு நற்குணம் நல்லொழுக்கமில்லாத காலிகளைப்போல் கயத்தனமாக தமதுபிறவிக்குணமாகிய ஏசுந்தொழிலில் ஈடுபட்டு முற்ற முற்றப் போக்கிரித்தனமாக எவர்களுக்கும் ஏற்காத விதத்தில் ஆராய்ச்சி என்ன, அறிக்கை என்ன, இன்னும் என்னென்னவெல்லாமோ இனியில்லா இழி குணத்தோடு எழுதி வெளியிட்டிருக்கின்றனர்.

அவைகளிலொன்றிலேனும் முஸல்மான் கோஷ்டியார்களின் கொள்கைகள் சுன்னத்வல் ஜமாஅத்துக் கொள்கைக்கு மாற்றமானதில்லை யென்பதை நியாயாதாரத்துடன் நிரூபித்தெழுதா

மல் அல்லாவும், ரசூலும், ஸஹாபாக்கள், இமாம்கள் முதலியோர்களால் சொல்லப்பட்டதென்றும் கூறிக்கொண்டு இவைகளை விவாதிப்பதற்கு உலமாக்கள் சபை கூட்டும்படியாக வேண்டி ஒழிந்து கொள்ளப்பார்க்கிறார்.

அவரின் கோள்கைகள் நியாய்மான்தாயிருப்பின் ஒழிமறைவின்றி தாராளமாய்த்தக்கஆதாரத்துடன் எழுதலாமல்லவா? அதின்றித்தமது கொள்கைகளைத் திரைமறைவில் ஒழித்துக்கொண்டு வீணத்தனமான விரோத புத்திகொண்டு அடிமுதல் முடிவரைத்திட்டி எழுதிஇருப்பதைக்காண ஒன்றிருக்கில் முஸல்மான் கோஷ்டியினர்களின் கொள்கைகள் பகிரங்கமாக எழுதக்கூடாத பழிப்பான கோணற்கொள்கையா யிருத்தல் வேண்டும்; இன்றேல் தமது பூர்வோத்தரம் பூறவும் வெளியாகிவிட்டால் தங்களின் தகல்பாஜி தகடுதத்த வியாபாரத்துக்கு உலைவைக்கப்பட்டுவிடப்படாதென்ற கெலிபிடித்துக் கெட்டஎண்ணத்துடன் இவ்வாறு அனுவசியமான அவதூராக எழுதியிருத்தல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் வேண்டாத விஷயங்களை எழுதி சாதாரண ஜனங்களின் கண்ணைப்பொத்தி விட்டால் இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதாய்ச்சொல்லி பொதுமக்களை ஏமாற்றி பொருள் வாங்கி ஒத்திக்குச்சொத்து வாங்கியிருப்பதுபோல் இன்னும் ஏராளமான பொருட்களைத் தாராளமாக ஏமாற்றி வசூலித்து அதிகமான ஆதாயத்தை யடையலாமென்றே இவ்வாறு எழுதினர் போலும்.

விருத்தம்.

தரைதனில் மாந்தரானோர் தகையுடைத்தருமநீதி
நிறைபெற வேண்டித்துய்யோன் நிகழ்த்திய புருகானென்னும்
மறைதனை யோதாதென்போன் வழிகெட்ட காபிராகி
இறைவனின் சாபமேற்று இழிநரகெய்துவானே.

## வெண்பா.

புருக்கான் மெய்வேதப்பொருளும் பொருளின்
பெருக்காம் நபிவசனப்பெட்பும்—மறுக்கமனங்
கொண்டு மௌலீதோடு கத்தங் கூர்பாத்தி ஹாவதனை
கண்டு வெறுப்போன்றான் வஹாபி.

## விருத்தம்.

ஆண்டவனருள் பெற்றோருங்கு மௌலியா வானோரெல்லாம்
பூண்டதோர் திரேகந்தன்னைப் பூதலத்தடக்கஞ்செய்து
மீண்டிடும் கபறைத்தேடி மிகுஸியாரத்துஞ்செய்து
வேண்டிய வஸீலாத்தேட விலக்கியவன் வஹாபி.

என்பது சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம்களின் தீர்மானமென்பது திண்ணமானதுபற்றி அதைப்பற்றிய கட்டளைகளை இனிக்கவனிப்போமாக.

"முனபிக்குகளை அல்லாஹு த்தஆலா அருளிய கட்டளை அளவிலும், றசூலுடைய ஆக்ஞை அளவிலும் நீங்கள் வாருங்களென்று கூப்பிடப்படுமேயானுல்; உம்மை (திருநபியை) விட்டும் புறக்கணித்தவர்களாக அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பதற்காக வேண்டி முனபிக்குகளை நீர் காண்பீர். அவர்கள் நப்சு (அந்தகாணம்) (நம்பிக்கையில்லாமற்) செய்துவிட்டதே அந்த ஒன்றைக் கொண்டு அவர்களைக் கேடு தொடுமேயானுல் அவர்கள் என்னசெய்வார்கள் பின்னர் உம்மிடத்தில் (அந்த) முனபிக்குகள் உம்மையல்லாதவர்களைக்கொண்டு தீர்ப்புச்செய்கிறதை நாங்கள் விரும்பவில்லை சமாதானம், ஒற்றுமைகளை நாடியேயொழியவென்று அல்லாஹு த்தஆலாவைக்கொண்டு சத்தியம் செய்தவர்களாக வருவார்கள் அந்தமுனபிக்கீன்களுடைய ஹிருதயத்திலுண்டாயிருக்கிறதை அல்லாஹு த்தஆலா அறிகிறான்"— (குர்ஆன்)

## ஹதீது.

உமறு கத்தாபு (ரலி) அவர்களின் குமாரர் அப்துல்லா (ரலி)

அவர்கள் அறிவிப்பதாவது:— நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருமதீனத்து மஸ்ஜிதில் எழுந்தருளியாகி, யார்கள், ஸஹாபாக்கள் புடைசூழ வீற்றிருக்கும்பொழுது ஷாம் தேசத்திலுள்ளவர்களும், எமன் தேசத்திலுள்ளவர்களும், நஜத் தேசத்திலுள்ளவர்களும் அந்தத்திருச்சபையில் வந்திருந்தார்கள். அப்பொழுது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷாம்தேசத்தவர்களையும், எமன் தேசத்தவர்களையும் நோக்கி யாறப்பில் ஆலமீனே! ஷாமுக்கும், ஷாமிலுள்ளவர்களுக்கும், எமனுக்கும், எமனிலுள்ளவர்களுக்கும் பாக்கத்துச்செய்தருள் என்று துஆச்செய்தார்கள் அவ்வாறு துஆச்செய்கையில் நஜத்தேசத்தவர்கள் யாரசூலுல்லா(ஹ்)ஷாம், எமன் இவ்விருதேசத்திற்கும் அத்தேசத்தையுடையவர்களுக்கும் பிரார்த்தனை (துஆ) செய்தீர்களே நஜதிற்கும், நஜத் தேசத்தவர்களுக்கும் துஆச்செய்யுங்களென்று வேண்டினார்கள் அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னர் துஆச்செய்ததுபோலவே பின்னரும் ஷாமுக்கும், எமனுக்கும், அவ்வூரையுடையவர்களுக்கும் மூன்றுதரம் துஆச்செய்துவிட்டு நஜத் தேசத்தவர்களை நோக்கி ஓ! நஜதிலுள்ளவர்களே உங்கள் ஊருக்கும், உங்களுக்கும் துஆச்செய்ய மாட்டேனென்றும் அல்லாஹுத்தஆலாவுடைய லஃனத்துப்பெற்ற இப்லீஸ் குடியிருப்பான இடமாயிருக்குமென்றும்; அவ்வூரில் அனேக பித்னக்களும், சூட்சிகளும் விளையுமென்றும்; அப்பூமியில்நின்றும் பூமியெல்லாமதிரும்படியான ஒருகோரமான கொதிப்புண்டாகுமென்றும்; அக்கொதிப்பில்நின்றும் ஒரு ஷைத்தான் உண்டாகுவானென்றும்; அவனால் தீன்மார்க்கத்திற்கு அனேகத்தீங்கும், வருத்தமும் சம்பவிக்குமென்றும் திருவாய் மலர்ந்தருளினார்கள்" (புகாரி)

எம்பெருமானாரவர்களின் இந்தத் திருவாக்கியத்தில் முன்னறிக்கை செய்ததுபோலவே இற்றைக்கு சுமார் 150-வருடங்களுக்கு முன் நஜத்என்னும் ஊரில் அப்துல் வஹ்ஹாப் என்றொரு

வன் தோன்றி இஸ்லாமதப்பிரசாரஞ்செய்வதாய்க்கூறி சாதாரண ஜனங்களை ஏமாற்றித்தன் வயப்படுத்திக்கொண்டு தனது புதுவஹ்ஹாபிக்கொள்கைகளாகிய மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும் இன்னும் இதுபோன்ற சுன்னத்வல் ஜமாஅத்துக்கு முரணான பல கோட்பாடுகளைப்போதித்து அப்புதுக்கொள்கைகளை விளக்கி "தமீமுல் ஈமான்" என்னுமொரு நூலுமியற்றித் தமது வஹ்ஹாபி மதக்கொள்கைகளைப் பொது ஜனங்களிடை பரப்புவதற்கு பஹீரதப்பிரயத்தனங்களைச்செய்துஉபதேசம் புரிந்து வந்த இந்த மதத்துரோகியின் மாறுபாடான இழிவுறுங் குணங்கள் இவ்வுலகத்தாரை விட்டும் கழிவுறவும் இக்கொள்கைகள் மதவிரோதமானதென்பதை மானிலத்தோர்களறிந்து வெறுப்புறவும் அக்கொடிய மதத்துரோகியை அக்காலத்திய துருக்கி சுல்த்தான் அவர்கள் ஆக்ஞைப்படி கி. பி. 1803ம்ஹு மரணதண்டனைக் காளாக்கப்பட்ட தென்பதை முன்நூல்கள் முறையிடுகின்றன.

என்றுலுமென்ன அக்கொடிய கோணற்கொள்கைகளைப் பின்பற்றிய மல்லூன்கள் இற்றைநாளிலும் இஸ்லாமியப்பிரசாரஞ் செய்வதாய்ச்சொல்லி மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும், கபறுகளை ஸியாரத்துச் செய்யப்படாதென்றும், ஒளலியாக்களிடம் வஸீலாத் தேடப்படாதென்றும் சில சிற்றூர்களிற்சென்று உளரித்திரிந்ததின் உண்மை உறுதியாய்விட்டது.

இவ்வாறு கூறித்திரிவதோடும் நில்லாது மகாவீரசூரப்புலிகளைப்போல் மார்தட்டி மல்லுக்கழைப்பதில் தென்காசி முஸல்மான் ஆசிரியரும் அவரின் சகாக்களும் முன்வந்து தூஷணமே பாஷண பூஷணமாகக்கொண்ட முஸல்மான் சஞ்சிகையில் சதா இழி குணத்தோடெழுதுவதே அன்னாரின் இஸ்லாமியப் பிரசாரமென்றோ? பழித்தெழுதுவதே பத்திராதிபரின் பாமரயோக்கியமென்றோ? அனுவசியமான அவதூறுகளாகவே பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

இவைகளைக்கண்டிக்க வேண்டியது உண்மையான முஸ்லீம்கள் ஒவ்வொருவர் பேரிலும் கடமையாயிருக்க இஸ்லாத்தின் எதிர்மாற்றமான வஹ்ஹாபிக் கொள்கையினர்களின் வஞ்சிப்புக்காளாகி உதவிபுரிவது சுன்னத்வல் ஜமாஅத்துக்கொள்கைகளை அழிப்பதற்கு ஆதாவளிப்பதுபோலென்பது எல்லோர்களும் அறிந்த உண்மையே ஆகையால் எம் சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம் சோதரர்காள் இனியேனும் இவ்விஷயத்தில் சர்வஜாக்கிரதையாயிருப்பீர்களாக.

"தாணியோர் மீது தயாளமாகவேயன்றி நாம் உம்மை அனுப்பவில்லை"— (குர்ஆன்)

"அல்லா (ஹ்) மூமீனனவர்கள் மீது திட்டமாக உபகாரஞ் செய்கின்றான். அவர்களில் அவர்களுடைய இனங்களில் நின்றும் ஒரு ரசூலை அனுப்பின சமையம் அவர் எப்படிப்பட்ட ரசூலேயானால் அவர்கள்பேரில் அவனுடைய (அல்லாஹ்வினுடைய) திருவசனங்களை ஓதுவார் இன்னும் அவர்களைத் திரமாக்குவார்; அவர்களுக்கு வேதத்தையும், விளக்கத்தையும் கற்றுக்கொடுப்பாரே அவ்விதமான ரசூல்; அவர்கள் அதற்கு முன்னால் வெட்ட வெளியான வழிகேட்டில் தரிபட்டவர்களா யிருக்கும் நிலமையில்"— (குர்ஆன்)

"நீங்கள் வருத்தத்தைச்சந்திப்பது அவர்பேரில் மெத்தக் கடுசாயிருக்கும்படியானவர்; உங்களை நேர்வழிகாட்டுவதின்பேரில் அதிக அவேட்கையுடையவர்; மூமீனனவர்கள் பேரில் முற்றக் கிருபையும், இரக்கமும் உடையவர்"— (குர்ஆன்)

என்று அல்லாஹுத்தஆலாவினால் அருளப்பெற்றதில் மூமீன்கள் மீது உபகாரமாயும், முற்ற முற்றக்கிருபையும் இரக்கமும் உடையவராகவும் தாணியோர்கள்மீது தயாளமாகவும் தங்கருளப்பெற்றதெது முறுசல்க்காசர் முஹம்மது நபி (ஸல்) அவர்களை அவதாரம்புரியச் செய்ததன்றோ?

"முஹம்மதே! நீர் சொல்லும் அல்லாஹுத்தஆலாவின் மேன்மையைக்கொண்டும், கருணையைக்கொண்டும் அவர்கள் சந்தோஷமடையவும் என்று"—
(குர்ஆன்)

"உங்கள் பேரில் அல்லாஹுத்தஆலாவினால் அளிக்கப் பெற்ற தயாளத்தை நீங்கள் ஞாபகஞ் செய்து கொள்ளுங்கள்"—
(குர்ஆன்)

இந்தத்திருவாக்கியங்களால் நம்மீது கருணையாகவும் தயாளமாகவும் அளிக்கப்பெற்ற அன்பியாநாயகம் (ஸல்) அவர்களின் அவதாரமகிமையை ஞாபகஞ்செய்து சந்தோஷமடைவதென்றால் சர்வலோக ரக்ஷகராகிய எம்பெருமானாரவர்களின் சரித்திரமாகிய மௌலீதுஷரீபை மனமுவந்து ஓதுவதல்லவா?

## ஹதீது

"இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களால் அறிவிக்கப்படுகிறதாவது:— இப்னுஅப்பாஸ் (ரலி) அவர்கள் தங்கள் வீட்டில் ஒரு நாள் சர்வலோக தயாபரராகிய நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள் பூலோக உதயமான புனித சரித்திரமாகிய மௌலீதுஷரீபை தங்கள் கூட்டத்தினருக்கு விளக்கஞ்செய்து கொண்டிருந்ததை அங்கு கூடியிருந்த ஜனங்கள் கேட்டு அல்லா(ஹ்) வைப்புகழ்ந்து ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் பேரில் சலவாத்துச்சொல்லி ஆனந்தமாயிருக்கும் சமையம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு விஜயஞ்செய்து உங்களுக்குஎன்னுடைய ஷபாஅத்து வாஜிபாகி விட்டது எனத்திருவுளம்பற்றினார்கள்"
(தன்மீர்)

## ஹதீது

"அபூதர்தா (ரலி)அவர்களால் அறிவிக்கப்படுகிறதாவது:— ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் நானும் ஒருநாள் ஆமிர்அன்சாரியுடைய வீட்டிற்குப்போனோம் அங்கு

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவதார மகிமைப்புண்ணிய சரிதமாகிய மௌலீதுஷரீபை ஆமிர் அன்ஸாரி தங்கள் மக்கள் களுக்கும் பந்துக்களுக்கும் விளக்கஞ்செய்து கொண்டிருக்கை யில் இன்றுதான் அவர்கள் அவதாரமான தினம்!' இன்றுதான் அவர்கள் அவதாரமான தினம்!! என்று சொல்லிக்கொண்டி ருக்கும் சமையம் நாங்களும் அங்குபோய்ச் சேர்ந்தோம், அப் பொழுது ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஆமிர் அன்ஸாரியை நோக்கி உங்களுக்கு அல்லாஹுத்தஆலா ரஹ்மத்தின் வாயிலைத் திரந்து விட்டான்; மலக்குகளடங்கலும் உமக்காகப் பாவமன்னி ப்பு தேடுகிறார்களென்றும்; நீர் செய்வதுபோல் வேறே யாருவது செய்வார்களேயானால்; நீர்ஈடேற்றம் பெற்றதுபோல் அவர்களும் ஈடேற்றம் பெறுவார்கள் என்று திருவுளமானார்கள்" (தன்மீர்).

இந்த நபிகள் நாயக வாக்கியங்களால் மௌலீதுஷரீப், ஓதுகிறவர்கள் ஈடேற்றம் பெறுவார்களென்றும்; அவர்களுக்கு மலக்குகள் பிழைபொறுக்கத் தேடுவார்களென்றும்; ரசூல்ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லமவர்களின் ஷபாஅத்து வாஜிபாகிவிட்ட தென்றும்; அல்லாஹுத்தஆலா அவர்கள் பேரில் ரஹ்மத்தென் னும் வாயிலைத்திரந்து வைப்பானெனவும் வெள்ளிடை மலைபோல் வெளியாகின்றன.

ஹதீது

"ஆயிஷா (ரலி) அவர்களால் அறிவிக்கப்படுவதாவது:— நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா முனவ்வாரா மஸ்ஜித் நபவி யின் மிம்பரில் அரபியில் அருட்கவிபாடும் ஹஸ்ஸாம் இப்னுதாபித் (ரலி) அவர்களை உட்காரவைத்து அன்பியா நாயகம் (ஸல்) அவர் களின் மௌலீதுஷரீபாகிய அவதாரமகிமையையும் அவர்களின் கண்ணியப்பெருமைகளையும் அரபிக்கவியாகப்பாடி ஸஹாபாக்க ளுக்குச் சொல்லும்படியாகச்செய்தார்கள் ஸஹாபாக்கள் அன் பாய்க்கேட்டு ஆனந்தித்தார்கள். அப்பொழுது நபிகள் நாயகம்

(ஸல்) அவர்கள் ஆண்டவனே! ஹஸ்ஸாம் இப்னுதாபித் என்பவருக்கு ரூஹுல் குத்ஸியைப்பலமாக்கி வைத்தருளென்று பிரார்த்தித்தார்கள்" (புகாரி, திருமதி, முஸ்லீம், மிஷ்காத்)

என்றால் அரபிக்கவியாக மௌலீதுஷரீப் ஓதுவது சுன்னத்தாக இருப்பதால் சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம்கள் தாய் பாஷையில் நாயகமான்மியத்தை நட்புடன் படித்தறிவதுமட்டும் போதாது "என்னுடைய சுன்னத்தைப் பேணுதவன் என் உம்மத்தில் சேர்ந்தவனுகான்" என்று எம்பெருமானுரவர்கள் அருளி இருப்பதால் சுன்னத்தைப்பேணி அரபி மௌலீதுஷரீபை ஓத வேண்டியது அவசியமாகிறது மௌலீதுஷரீப் மஜ்லிசில் தாய்பாஷையில் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் பேரில் பாடப்பெற்ற கீர்த்தனை (பதங்கள்) போன்ற பாடல்களைப் படிப்பதும் ஆகாதென்று அனேகர் ஆக்ஷேபிக்கின்றனர் ஆனுல்.

"ஹிருதயங்கள் உபதேசம் பெறக்கூடிய தந்திரங்கள் சில பாடல்களிலிருக்கின்றன. அல்லா (ஹ்)வைப்பற்றிய நேசம், பிரியம், ஆனந்தம் பரிபூரணமாயிருக்கின்ற ஹிருதயங்களையுடைய விசேஷவான்கள் தவிர மற்றவர்களில்லாமலிருக்கின்ற சபைகளில் வெளிப்படையான கருத்து சிற்றின்பம் தோற்றக்கூடிய பாடல்களை அவர்கள் முன்னில்பாடுவதினுல் அவர்களுக்கு அபத்தத்தை யுண்டாக்காது" (ஹதீது)

என எம்பெருமானுரவர்கள் அருளி இருப்பதால் ஹிருதயங்கள் உபதேசம்பெறக்கூடிய உறுக்கமும் பக்தியும் உண்டுபண்ணக்கூடிய பதங்கள் போன்ற பாடல்களைப்படிப்பது பாதகமா?

"மையத்தின் பேரில் மௌத்தான முந்தின இரவு நிரம் பக்கஷ்டமானதாயிருக்கும். ஆகையால் மௌத்தானவர்கள் பேரால் கொஞ்சமாவது சதகா (தருமம்) கொடுங்கள்" (ஹதீது)

"முந்தின இரவைப்பார்க்கிலும் கஷ்டமான இரவு மௌத்தானவர்கள் பேரில் வரமாட்டாது ஆனதால் உங்களில் இறந்து போனவர்களுக்கு சதகா (வங்கயரு)வைக்கொண்டு கிருபைசெய்யுங்கள்" (ஹதீது)

"மையத்து கீளை கபரில் ஏழுநாளைக்கு (பித்னு) கஷ்டத்தைக்கொண்டு சோதிக்கப்படுகிறது" (ஹதீது)

"இருவரை (அதாவது மூமினையும், முனுபிக்கையும்) கபரில் சோதிக்கப்படும். அதில் மூமினை ஏழுநாளைக்கும் முனுபிக்கை நார்ப்பது நாளைக்கும் (பித்னு) கஷ்டத்திலாக்கப்படும்" (ஹதீது)

அபூதர்தா (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்டதாக முல்லா அலிகாரி (ரஹ்) அவர்கள் தங்கள்பத்தாவர்யெ அவுஸ்ஜன்தி என்னும் கிதாபில் எழுதி இருப்பதாவது:— "ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் மகன் இப்ராஹீம் மௌத்தான மூன்றும் நாளில் ஒட்டகைப்பாலும் காய்ந்தஈத்தம்பழமும் கொண்டுவந்து சூரத்துபாத்திஹா (அல்ஹம்துசூரா) ஒருவிடுத்தமும், குல்ஹுவல்லாஹு சூரா மூன்று விடுத்தமும் ஓதி அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மத் என்று துஆ ஓதி அதன் நன்மையைத்தங்கள் குழந்தை இப்ராஹீமுக்குச்சேர்த்துவைத்துவிட்டு பாலையும், ஈத்தம்பழத்தையும் அங்கு இருந்தவர்களுக்கு பங்கிட்டுக்கொடுத்தார்கள்" (ஹதீது)

ஹதீது

"அனஸ் (ரலி) ஜாபிர் (ரலி) உப்பாத் (ரலி) மூன்றுபேர்களும் அறிவிப்பதாவது:— ஒவ்வொரு வருஷமும் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது யுத்தத்தில் வெட்டுண்டு ஷஹீதானவர்களின் கபரி ஸ்தானங்களில் வந்து அவர்களை நோக்கி உங்கள் பேரில் ஸலாம் என்னும் ஈடேற்றம் உண்டாவதாக நீங்கள் பொருமை செய்த காரணத்தால் உங்களுக்கு மறு உலகின் வீடு நிரம்ப நல்லதாகி விட்டது என்று சொல்லித் துஆச்செய்வார்கள்"

(வபாவுல்வபா, துர்ரெமன்துர்)

இவ்வாறே குலபாயே ராஷிதீன்களான அமீருல் முவுமி னீன்கள் அபூபக்கர் (ரலி) அவர்களும், உமறு (ரலி) அவர்களும், உதுமான் (ரலி) அவர்களும், அலி (ரலி) அவர்களும் செய்துவந் தார்களென்றும்; இதேபோல் அபூசுப்யான் (ரலி) அவர்களின் புதல்வர் முஆவியா (ரலி) அவர்கள் ஹஜ்ஜுக்கு வந்தபொழுது உஹதுடைய ஷுஹதாக்களின் கபரிடம்சென்று "நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உஹதுமலைக்கு வருவார்களே யானால் உங்கள் பேரில் ஸலாமுண்டாவதாக நீங்கள் பொறுமை செய்த காரணத்தால் அமல் செய்தவர்களின் கூலி நல்லதாகிவிட் டதென்று திருவாய் மலர்ந்தருளுவார்களென்று சொன்னதாகவும் ரிவாயத்துகள் எழுதப்பட்டிருக்கின்றன.

எம்பெருமானாரவர்களின் இனிய திருவாய்மொழிகளை ஆதாரமாகக்கொண்டு மௌத்தானவர்களுக்கு நன்மைகளைச் சேர்ப் பிப்பதற்காக வேண்டியும் அவ்வாறு செய்யப்படும் காரியங்கள் செய்கிறவர்களுக்கு சௌகரியமாயும், முன்னெச்சரிக்கையாயுமி ருந்து நடப்பிக்கவேண்டியும், ஜீவனும்ஸ விஷயமாகவோ மற்றோ உலகமக்கள் வேறு விஷயங்களிலீடுபட்டு சௌகரியமில்லாமலோ மறதியாகவோ பாத்திஹாக் காரியங்கள் தடைபட்டு நடைபெறு மல் போகப்படாதென்றும்; மேலே ஆதாரவு காட்டிய அன்பியா நாயகத்தின் அருள்வாக்கியங்களால் மௌத்தானவர்களை கபரில் நல்லடக்கஞ்செய்த நாள்முதல் 7 நாள் 40 நாள் வரை கபராளி களைக் கஷ்டத்தைக்கொண்டு சோதிக்கப்படுமென்றும் தெளிவாகு வதாலும் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களருமை புத்திரர் இப்ரா ஹீமுக்கு மூன்றுவது நாள் பாத்திஹா ஓதி இருப்பதாலும் உஹ துடைய ஷுஹதாக்களின் கபரிஸ்த்தானங்களில் வருஷந்தோ றும் எம்பெருமானாரவர்கள் எழுந்தருளியாகி பாத்திஹா ஓதியிரு ப்பதாலும், சௌகரியங்களைக் கருதி முக்கியமாக மூன்றும் நாள் 7, 15, 21, 40 முதலிய நாட்களிலும், அவரவர்கள் சௌகரியம் போலும், சந்தற்பம்போலும் வேறு தினங்களிலும் வருஷந்தோ

றும் பாத்திஹா ஓதப்படுகின்றன. நல்லடக்கஞ்செய்தது முதல் நார்ப்பது நாள் வரை மையத்துகளை கஷ்டத்தைக்கொண்டு சோ திக்கப்படுமென்று குறிப்பிட்டு எம்பெருமானாரவர்கள் அருளியிருப்பதால் அந்த நாள்களில் மௌத்தானவர்களுக்கு நன்மைகளை அதிகப்படுத்தி கஷ்டங்களின் கடுமை, குறையவே குறிப்பிட்டு அடிக்கடி நார்ப்பது நாள்வரை பாத்திஹா ஓதப்படுகிறது எனெனில்.

"இறந்துபோனவன் கபரில் (சமாதியில்) தண்ணீரில் மூழ்கி இரட்சிக்கத் தேடுகிறவனைப்போலிருக்கின்றான்; தன் தகப்பன், சகோதரன், சிநேகிதன் முதலியவர்களுடைய துஆக்களையும், தானதருமங் (சதகாக்)களையும் எதிர்பார்க்கிறான் அப்படிச்சேர்ந்து விட்டால் அவனுக்கது உலகத்தின் சகல வஸ்துக்களைக்காண திரம் பப்பிரியமாயிருக்கும். (ஹதீது)

"உங்களில் ஒருவன் நெருப்பில் உட்கார்ந்து அந்தநெருப்பு அவனின் உடையைக்கரித்து அவன் தலையிலும்பற்றியெரிவது அவனுக்கதிக நலவாயிருக்கும் அவன் கபரில் இருப்பதைக்காண" (ஹதீது)

மௌத்தானவர்களுக்காக சதகா கொடுப்பதும் துஆச் செய்வதும் எத்தகைய பலாய்களையும் தூரப்படுத்திவிடுவதோடு எந்தமையத்தின் பேரிலாவது அல்லா (ஹ்) வின் கோபப்பார்வையால் நெருப்பு எற்படுமாகில் மையத்துக்காக சதகாக்கொடுப்பதால் அந்த நெருப்பை நீராக்கிவிடும், அவர்களுடைய ஆபத்தை விலக்கும்" (ஹதீது)

"ஹயாத்தானவர்களுடைய துஆவினால் மௌத்தானவர்களுக்கு அல்லாஹுத்தஆலாமலைபோன்ற நன்மைகளைநல்குவான் இறந்துபோனவர்களுக்கு உயிருள்ளவர்கள் அனுப்பும் ஹதியாவாவது அவர்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடுவதும், சதகாக் கொடுத்து அதன் நன்மைகளைச் சேர்ப்பதுமாயிருக்கும்" (ஹதீது

"உயிரோடிருப்பவர்கள் சாப்பிடுவதிலும், அருந்துவதிலும் தேள்வையுள்ளவர்களாயிருப்பது போலவே இறந்துபோனவர்கள் உயிரோடிருப்பவர்களின் துஆ, சதகாவின்பேரில் நிரம்பத் தேள்வையுள்ளவர்களாயிருக்கிறார்கள்" (ஹதீது)

எனவும் எம்பெருமானார் சர்வலோக ரட்சகர் சாற்றியிருப்பதை சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம்கள் அறிந்திருப்பதுபற்றியே அவ்வாறு செய்கின்றனர்

"மூமீன்களுடைய ரூஹூகள் வெள்ளிக்கிழமை இரவில் விடப்படுகிறது அந்த ரூஹூகள் முதலாவது தங்கள் கபறுகளுக்கு வந்து, பிறகு தன் வீட்டிற்கும் வருகின்றன அப்பொழுது மெதுவான சப்தத்துடன் தங்களின் பந்துக்களைப்பார்த்து 'எங்களுக்காகத், தான தருமங்களைச் செய்யுங்கள்' என்று வேண்டிக் கொள்கின்றன. அவ்வாறு அவர்கள் சதகாச்செய்தால் சதகாச் செய்தவர்களுக்கு அந்த ரூஹூகள் துஆச்செய்கின்றன. சதகா வகையறாச் செய்யாவிட்டால் அந்த ரூஹூகள் மகிழ்ச்சியில்லாமல் மனவருத்தமாகப் போய்விடுகின்றன. இவ்வாறே இரண்டு ஈதுப்பெருநாட்களிலும், முஹர்ரம் இரவிலும், ஷவுபான்பீ பாராத்து இரவிலும் அந்த ரூஹூவீட்டுக்கு வருகின்றன." என்று யஹ்யாவிலும் மற்றக்கிதாபுகளிலும் சொல்லப்படுகின்றன இன்னும்.

"ஒரு வீட்டில் ஓர் மனிதன் இறந்துபோய் அவ்விதம் இறந்து போனவர்களுக்காக வீட்டுக்காரர்கள் ஏதாவது சதகா, துஆவை மையத்துக்காக அனுப்பினால் அந்தஹதியாவை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒளியினாலுள்ள தட்டில் வைத்துக் கொண்டு போய் கபரின் ஓரமாக நின்றுகொண்டு ஆழமான கபரையுடையவனே இது உன்வீட்டுக்காரர்கள் உனக்காக அனுப்பின ஹதியாவாயிருக்கும் இதை நீ ஒப்புக்கொள்ளென்று சொல்லுவார்கள் அப்பொழுது அந்தத்தட்டு கபரில் நுழையும் அதனால்

அந்த கபராளி சந்தோஷமடைவான். ஹதியா அனுப்பப்படாத அடுத்த கபரையுடையவர்கள் வருத்தமடைவார்கள் (ஹதீது)

என்றும் நபிகள் நாயகம் அருளியிருப்பதால் மௌத்தானவர்களுக்காகச் செய்யப்படும் பாத்திஹா காரியங்களுக்காக.

## ஹதீது.

துஆ மக்பூலாக்கப்பட்ட ஹபீபைப் இப்னுமுஸ்லிமத்துல் கஹ்ரி அறிவிப்பதாவது:— "நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள் சில ஜனங்கள் ஓர் கூட்டமாகக்கூடிய சிலர் துஆச்செய்யவும் சிலர் ஆமீன் கூறவுமாயிருந்தால் அல்லாஹுத்தஆலா அவர்களுடைய துஆவை ஒப்புக்கொள்ளாமலிருக்க மாட்டான்" கபூல் செய்வான்" (தர்கீப், தர்ஹீப்)

இந்த நாயக நல்வாக்கியப்படி தங்கள் சக்திக்கேற்றவாறும், சந்தற்பத்துக்கேற்றவாறும் அவரவர்களுக்கு விருப்பமானவர்களை அழைப்பித்து

"பாத்திஹா ஓதி ஏழை எளியோர்களுக்கும் மற்றவர்களுக்கும் பசிதீர்ப்பது மிக்க நன்னடக்கையாயிருக்கும் இதனால் அவர்களுக்கு நன்மையும் செய்தவர்களுக்கு செல்வமும், மேன்மையும் கிடைக்கும்" (ஹதீது)

என்னும் பெருநபியின் திருவசனப்படி அவரவர்கள் தகுதிக்குத்தகுந்தவாறும் சௌகரியத்துக்கேற்ற வாறும் சாப்பாடு கொடுத்து பாத்திஹா ஓதுவது பரக்கத்தும், பலனும் அதிகரிக்குமென்றே செய்யப்படுகின்றன. ஆனால் குறித்ததினங்களில் பாத்திஹா ஓதினால்தான் நன்மை கிட்டும் முன்பின்னாக ஓதினால் பலனில்லை என்று எண்ணி பாத்திஹா ஓதுவது மக்ரூஹ் அவ்வாறில்லாது பாத்திஹா காரியம் நடைபெறுவதற்காக அவரவர் சௌகரியங்களைக்கருதி முக்கியமாக மௌத்தான மூன்றும்நாள் 7, 15,

21, 40 முதலிய நாட்களையும் வேறு வேண்டிய நாட்களையும் குறிப்பிட்டுக்கொள்வதில் குற்றமில்லை என்று பத்தாவாக்களில் பரக்கக்காணப்படுவதோடு

"அல்லாஹுத்த ஆலாயிடத்தில் அதிகப் பிரியமான அமலாகிறது கொஞ்சம் கொஞ்சமாயிருந்தாலும் அதை நேமமாகக்கொண்டு வருவதாயிருக்கும்." (ஹதீது)

என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளி யிருப்பதாலும் ஸாலிஹீன்கள் வலீபா ஔராதுகளுக்காக நேரங்களை குறிப்பிட்டுஅப்படியே வளமையாகஓதிவந்திருப்பதாலும் இவ்வாறு செய்வது ஆகும்(முஸ்தஹப்பு)என்பதற்கு ஆதாரமாகமேலேகாட்டிய ஹதீது வந்திருப்பதாலும் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களும் நான்கு தோளர்களும், ஸஹாபாக்களும் நன்மைகளைச் சேர்த்து வைப்பதற்காக பாத்திஹா ஓதுவது(மஸ்லிஹத்து)நன்மையென்று ஸ்தாபித்திருப்பதாலும் தேதியைக்குறிப்பிடுவதாலும் ஓர் மஸ்லிஹத்தாயிருப்பதுகொண்டு தேதிகளைக்குறிப்பிட்டு பாத்திஹாஓதுவது ஆகுமென்று அனேக அறிவாளிகளாகிய சுன்னத்வல் ஜமாஅத்து ஆலிம்களால அங்கீகரிக்கப்பெற்றிருக்கின்றன.

"ஒருநாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தாயாரவர்கள் அடக்கமாயிருந்த சமாதியருகிற்சென்றுநின்று அழுதார்கள். அப்பொழுது அழுத அழுகையினால் சுற்றியிருந்தவர்களுக்கெல்லாம் மனங்கசிந்து நெகிழ ஆரம்பித்துவிட்டது" (ஹதீது)

கபறு (ஸமாதி)களை ஸியாரத்துச்செய்வது பாவத்துக்குத் தெண்ட குற்றமாயிருக்கும்" (ஹதீது)

"ஒருவன் கபறு (ஸமாதி) ஸ்தானத்துக்குப்போய் அல்ஹம்து சூராவும், குல்ஹுவல்லாஹு சூராவும், அல்ஹாக்கு சூராவும் ஓதி அந்த நன்மையைக் கபுறாளிகளுக்கு ஹதியாச்செய்வானேயாகில் அவர்கள் இறுதிநாளில் இவனுக்காக இறைவனிடம் மன்றுடுவார்கள்" (ஹதீது)

இப்னுமஸ்வூது (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்டதாக முல்லாஅலிகாரி (ரஹ்) அவர்கள் தங்கள் ஐனுல் இல்மு' என்னுங் கிதாபில் எழுதியிருப்பதாவது:— நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள் "தீனுனவர்களே! உங்களுக்கொரு வருத்தம், சங்கடம் சம்பவிக்குமாகில் பெரியோர்களுடைய கபறு (ஸமாதி) களிடத்திற்போய் உங்களுடைய வருத்தங்களேயும், சங்கடங்களேயும் குறித்துக்கேளுங்கள்; உங்களுடைய நாட்டம் நிறைவேறும் பிரயாணம்போவது உலக விஷயத்திற்காகவும், மார்க்க விஷயத்திற்காகவும் இருவகையில் மேன்மையுடையதாவது கல்வி கற்பதற்காகவும், பெரியோர்களின் அன்பியாக்கள், ஒளலியாக்கள் முதலானவர்களின் கபறு ஸியாரத்துக்காகவும் போகிறதாயிருக்கும் அவர்கள் ஷஹீதுகளேப்போல் இறக்கப்பட்டவர்களல்ல, இவ்வுலகிலிருந்து இறுதித்தீர்ப்பு ஸ்தலத்துக்குப் போகிற வரை ஜீவந்தர்களாகவேயிருக்கின்றார்கள்" (ஹதீது)

எனச் சர்வலோக சர்தாராகிய நாயகம் (ஸல்) அவர்களின் மகாவாக்கியங்கள் முறையிடுகின்றன. பாவிகளே ரட்சிப்பதற்கென்றே பாரினில் அவதாரம் புரிந்த பரமனின் திருத்தூதர் பயகாம்பர் (ஸல்) அவர்களே கபரின் தானங்களே நோக்கி

"கபரிலிருக்கும் மூமீன், முஸ்லீம்களே! அஸ்ஸலாமு அலேக்கும் அல்லா (ஹ்) வின் நாட்டப்படி நாங்களும், உங்களோடு சேர்வோம்; நாங்கள் அல்லா (ஹ்)வினிடத்தில் எங்களுக்காகவும், உங்களுக்காகவும் சுகத்தைத்தேடுகின்றோம்'' (ஹதீது)

என்று திருவாய் மலர்ந்தருளி இருப்பதாலும் கபறுகளே ஸியாரத்துச்செய்வதற்காகப் பிரயாணிப்பது மகா மேலானதென்றும், ஸியாரத்துச்செய்வது பாபங்களுக்குத்தெண்டகுற்றமாகிறதென்றும், இறுதிநாளில் இவனுக்காக இறைவனிடம் இறைஞ்சுவார்களென்றும், வஸீலாத்தேடுவதால் வருத்தங்கள், சங்கடங்கள் நீங்கி நாட்டங்கள் நிறைவேறுமென்றும் நன்கு தெளிவாகின்றன.

"என்னுடைய உம்மத்தி(சமுகத்தி)லுள்ளவர்களின் எந்த நடபடிக்கைகளை நன்னடக்கையென்று உலமாக்களால் தீர்மானிக்கப்பட்டு நடத்திவருகின்றார்களோ? அந்த நடபடிக்கைகள் அல்லா (ஹ்) வுக்கும், அவனின் ரசூலுக்கும் மேன்மையானது"

(ஹதீது)

"என்னுடைய உம்மத்திலுள்ளவர்கள் நன்மையான செயல்களைச்செய்துவந்தால் அதனுடைய நன்மை அவர்களுக்குகிட்டும்; அச்செயல்களை யாருவதொருவன் மறுத்து மாறுசெய்வானாயின் அவன் பெரும்பாவியாவான்" (ஹதீது)

ஏ நபியே! உம்மை யாம் நிச்சயமாகச்சாக்ஷியம் கூறுவோராகவும், நன்மாராயம் அறிவிப்போராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும், மேலும் அல்லா (ஹ்) வினளவில் அவன் ஆக்ஞைப்படி (சன்மார்க்கத்துக்கு) அழைப்பவராகவும், (ஜகத்துக்கெல்லாம்) ஜோதியளிக்கும் தீபமாகவும் அனுப்பிவைத்தோம்"

(குர்ஆன்)

"அல்லா (ஹ்) வை நேசிப்பவர்களாய் நீங்கள் இருப்பீர்களாயின் நீங்கள் என்னையே (நபியை) விசுவாசிப்பீர்களாக; இதனால் உங்களை ஆண்டவனும் நேசிப்பான்; உங்களுக்கு உங்களுடைய குற்றங்களையும் க்ஷமித்தருள்வான் என்று (நபியே!) நீர் கூறுவீராக"

(குர்ஆன்)

"எவர் (இந்தத்) திருத்தூதருக்கு வழிப்படுகின்றாரோ அவரே நிச்சயமாய் ஆண்டவனுக்கும் கீழ்ப்படிந்தவராவார்"—

(குர்ஆன்)

"அல்லா (ஹ்) வுக்கும் ரசூலுக்கும் வழிப்படுங்கள் உங்களுக்கு கிருபை செய்யப்படும்"

(குர்ஆன்)

"அல்லா (ஹ்) வையும் இறுதிநாளையும் அஞ்சி, அல்லா (ஹ்) வை அதிகம் தியானிக்கும் உங்களுக்கு அல்லா (ஹ்) திருத்

தூதரிடத்தில் 'ஓர் அழகிய முன்மாதிரி' நிச்சயமாயுண்டாயிருக்கிறது" (குர்ஆன்)

"யாருவது ரசூலுக்கு வழிப்படுவார்களேயானால் அல்லா (ஹ்) அவர்கள் மீது பாக்கியஞ்செய்திருக்கும் நபிமார்கள் ஸித்திகின்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களுடனே அவர்களிருப்பார்கள்" (குர்ஆன்)

"எனது அடிமை நீங்காமல் சுன்னத்தான அமலைக்கொண்டு என்னளவில் முடுகுதல் பெறுவான், நான் அவனை உவக்குமளவும்; அவ்விதம் நான் அவனை உவந்தால் அவன் கேள்க்கும் காதாகவும், அவன் பார்க்கும் கண்ணாகவும், அவன்பிடிக்கும் கையாகவும், அவன் நடக்கும் காலாகவுமிருப்பேன்" (ஹதீதுகுத்ஸி)

"எனது இரக்ஷகனின் மீது ஆணையாக தகப்பன், பிள்ளை மற்றெல்லா மனிதர்களைக்காணவும் எம்மீது அதிக நட்புவைக்காதவரை உங்களில் எவரும் ஈமான் கொண்டவர்களாக மாட்டார்கள்" (ஹதீது)

"இஸ்லாமாகிறது அல்லா [ஹ்] வுடைய ஏவலுக்கு வழிப்பட்டு அவனின் விலக்கலைத்தவிர்ந்து நடப்பதாயிருக்கும்" (ஹதீது)

"அல்லாஹுத்தஆலாவை நாயனாகவும், இஸ்லாமை மார்க்கமாகவும், முஹம்மதை (ஸல்) தூதராகவும் ஒப்புக்கொண்டவனே ஈமானின் சுவையை யனுபவிப்பான்" (ஹதீது)

"என்னுடைய சுன்னத்தைப்பேணுதவன் என் உம்மத்தில் சேர்ந்தவனுகான்" (ஹதீது)

என்னும் திருவாக்கியங்களை அறிந்த சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம் அறிஞர்களெல்லோர்களும் மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா, ஓதுவதும் கபறுகளை ஸியாரத்துச் செய்வதும்

பெரியோர்களிடம் வஸீலாத்தேடுவதும் அவசியமெனக்கொண்டு அவ்வாறே செய்துவருகின்றனர் ஆனல் வஹ்ஹாபிக்கொள்கையினர்களில் ஒரு சில கற்ரேரும் மற்ரேரும் மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும், கபறுகளை ஸியாரத்துச் செய்யப்படாதென்றும், பெரியோர்களிடம் வஸீலாத்தேடப்படாதென்றும் பல பல விதமான பாதகக் கொள்கைகளைப் பரப்புவதற்கு பஹீரதப்பிரயத்தனங்கள் செய்தும் பத்திரிகைகளில் வரைந்தும் வருகின்றனர். அறியாத அனேக முஸ்லீம்கள் அவைகளை அநுசரிக்கவும் ஆதரிக்கவும் ஆரம்பிக்கின்றன மேலே ஆதாரவு காட்டிய வேதவாக்கியங்களால் எவன் அன்பியா நாயகம் (ஸல்) அவர்களை நேசித்துப்பின்பற்ற வில்லையோ அவனை இஸ்லாமென்று ஏற்றுக்கொள்வதற்கு இயலாது ரசூல் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதென்பது அவர்களின் அமுதமொழிகளை அலட்சியம் செய்வதா? எனக்கேட்கின்ரேம், அலட்சியஞ் செய்யவில்லையாயின் மகாவாக்கியங்களுக்கு மாறுபாடாய்கூறுவானேன்? இஸ்லாமத ஸ்தாபகரான எம்பெருமானர் நபிகள் சிகாமணி (ஸல்) அவர்களால் அறிவுறுத்தப்பெற்ற விஷயங்களை ஆக்ஷேபித்து முற்றும் முரணன விஷயங்களை விளம்பி அல்லா [ஹ்] வும், ரசூலும், ஸஹாபாக்களும், இமாம்கள் முதலியோரும் இயம்பியதாகக்கூறுவது தான் தென்காசி முஸல்மான் கோஷ்டியினரின் இஸ்லாமியப்பிரசாரமாயின் அக்கோஷ்டியினர் வஹ்ஹாபிகளென்பது திண்ணமே எனெனில்

## ஹதீது

அபூஹுரைரு (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:— ரசூல் (ஸல்) அவர்கள் திருவுளம்பற்றினர்கள் "முனபிகீனின் [வஞ்சகரின்] அடையாளம் மூன்ருயிருக்கும் அதாவது பேசினல் பொய் பேசுவான்; வாக்களித்தால் மாற்றஞ்செய்வான்; நம்பினல் மோசஞ்செய்வான் அவன் நோன்பு பிடித்து தொழுது தன்னை முஸ்லீமென்று வாதாடினலுஞ்சரி"
மிஷ்காத்து)

என்னும் எம்பெருமானரவர்களின் இனியஹிதோபதேசம் முறை பீடுகிறபடி தென்காசி, "முஸல்மான்" ஆசிரியர்

(1) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அருளி இருப்பதற்கு மாருக, மௌலீதுஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படா தென்றும்

கபறுகளை ஸியாரத்துச்செய்யப்படா தென்றும், ஒளலியாக்க ளிடம் வஸீலாத்தேடப்படாதென்றும் கூறி அல்லா (ஹ்) வும், ரசூலும், ஸஹாபாக்களும், இமாம்கள் முதலியோரும் கூறிய தென்று பொய்யையே புகன்று வருகின்றார்.

(2) இஸ்லாமதப்பிரசாரஞ் செய்வதாய் வாக்குறுதியாக வரைந்து வழிகெட்ட வஹ்ஹாபிக்கொள்கைகளை மாறுபாடாகப்பரப்பி வருகிறார்.

(3) இஸ்லாமதப்பிரசாரஞ் செய்வதற்காய் உதவியளிக்க வேண்டுமென்று ஊறாருய்ச்சுற்றிப்பொருள் வசூலித்தும்; முஸல்மான் சஞ்சிகைக்கு சந்தாதார்களைச் சேர்த்துக்கொண்டும்; வஞ்சகமாய் வஹ்ஹாபிக்கொள்கைகளைப்போதித்தும்; ஒத்திக்குச்சொத்தும் வாங்கி நம்பிக்கை மோசமாக நடத்துகிறார். ஆதலால்

"நான்கு காரியம் ஒருவனிடத்திலிருக்குமானால் அவன் கலப்பற்ற முனாபிக்காகவிருப்பான் அவைகளில் ஒரு கருமமிருக்குமாகில் அவ்வொன்றையும் அவன் விட்டு விலகுமட்டிலும் அவனில் முனாபிக் தனத்தில் ஒரு கருமமுண்டாயிருக்கும், அவையாவது (1) பேசுவதில் பொய்பேசுவான், [2] வாக்குத்தத்தம் செய்தால் மீறுவான், [3] சத்தியத்தைச் சதிமானஞ் செய்வான், [4] வழக்குப்பேசினால் வஞ்சகமாய்ப்பேசுவான்" [ஹதீது]

என்றுஅன்பியா நாயகம் [ஸல்] அவர்கள் அருளியிருப்பதை அனுசரிக்கும் சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம்களெல்லோர்களும் தென்காசி முஸல்மான் கோஷ்டியினரிடம் வஹ்ஹாபிக்கொள்கை ஒன்றேனுமிருக்கும் வரை வஹ்ஹாபிகளென்று கொள்ளக்கடவர்.

இதுவரை மேற்கோளாக எடுத்தெழுதியிருக்கும் மகா வாக்கியங்களால் தென்காசி, "முஸல்மான்" கோஷ்டியினர் மௌலீது ஷரீப், கத்தம், பாத்திஹா ஓதப்படாதென்றும், கபறுகளை ஸியாரத்துச்செய்யப்படாதென்றும் ஒளலியாக்களிடம் வஸிலாத் தேடப்படாதென்றுங் கூறுகிறவைகளெல்லாம் இஸ்லாத்துக்கே ஏற்காததும் இஸ்லாமத ஸ்தாபகரான இறைவனின் திருத்தூதர் அன்பியா நாயகம்[ஸல்]அவர்களின் அமுத

வாக்கியங்களுக்கு ஆக்ஷேபகரமானதென்னும் கருத்துக்களையே காண்பித்துக்கொண்டிருக்கின்றன அவ்வாறு அன்பியா நாயகம் [ஸல்] அவர்களின் அமுதவாக்கியங்களை ஆக்ஷேபிப்பவர்களுக்கு,

“அந்த அவிசுவாசிகள் உம்மைப்பொய்யனென்று சொல்வது உம்மைச் சலிப்பிலாக்குகிறதென்று நாம் நிச்சயமாயறிந்திருக்கின்றோம். நீர் அதைக்கணக்கெடுக்க வேண்டாம் ஏனெனில் யதார்த்தத்தில் அவர்கள் உம்மைப்பொய்யாக்கவில்லை எனினும் அந்த அனியாயக்காரர் இறைவனுடைய திருவசனங்களைப் பொய்யாக்குகின்றனர். நான் அவர்களை வேதனை செய்யும் ஒழுங்குபோல் வேதனை செய்வேன்”— [குர்ஆன்]

என்று ஆதிகாரணனாகிய அல்லாஹுத்தஆலா அன்பியா நாயகம் [ஸல்] அவர்களை நோக்கி அருளியிருப்பதையே அறிக்கைசெய்து இந்நூலை இம்மட்டோடு பூர்த்தியாக்குகின்றேன்.

வஸ்ஸலாமு அலாமனித்தபஅல் ஹுதா.

ம. கா. நா. மு. பேட்டை.

# முடிவுரை.

இப்புத்தகத்தை அடிமுதல் முடிவுவரை வாசித்துணர்ந்தோர் தென்காசி, "முஸல்மான்" ஆசிரியரின் கொள்கைகள் இன்னது தானென்பதை தெளிவுறத் தெரிந்துகொள்வர் சுன்னத்வல் ஜமாஅத்துக்கு முற்றும் முரணான அன்னாரின் ஆதாரவற்ற கொள்கைகளைமழுப்பி ஜால் ஜாப்பாக சாதாரண ஜனங்களின் கண்ணைப் பொத்தி விடலாமென்று ஏமாற்றமா யெழுதுகிறவைகளைக்கண்டு இனி யொருவரும் ஏமாந்து விடமாட்டார்களென்று நம்புகிறேன். ஏனெனில் சிலரை பலகாலம் ஏமாற்றலாம்; பலரை சிலகாலம் ஏமாற்றலாம் ஆனால் எல்லோரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்றி விடப்பார்ப்பது எப்பொழுதுமே இயலாத காரியமாகும்.

ஆகவே சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லீம்களெல்லோர்களும் இனியேனும் இவ்வித ஏமாற்றங்களுக்காளாகாமல் முக்கியமாய்க் கவனித்து வஹ்ஹாபி பத்திரிகைகளை வாங்கி வாசிப்பதையும் நிராகரித்து சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்வீர்களாக.

எப்பொருட்கும் உட்பொருளாகிய ரப்பில் ஆலமீன் சுன்னத்வல் ஜமாஅத்து இனிய இஸ்லாமிய சகோதரர்கள் அனைவோர்களையும் நபிகள் பிரான் ரசூல் (ஸல்) அவர்களின் சரீஅத்தின் நேரான பாதையில் சீராக நடத்தாட்டி நல்லருள் புரிவானாக ஆமீன்.

இங்ஙனம்

ம். க்லீ. நா, முஹ[illegible]து ஷம்சுத்தீன் மக்கி சாஹிப்,

பேட்டை.

நூருல் இஸ்லாம்
பிரஸ், பேட்டை.

மதியமிர்த சஞ்சீவி

மகா வீரிய விருத்தி

# சாலா மிஸ்ரி ஹல்வா.

இச்சாலா மிஸ்ரி ஹல்வாவானது தங்கம், வெள்ளி, முத்து இவ்வகைப் பற்பங்களோடு யூனானி முறைப்படி, சாஸ்த்ரீய வைபாக செய்பாகத்தோடு தயாரிக்கப்பட்டது. இராஜ கருவிகளாகிய மூளை, ஹிருதயம், குண்டிக்காய், இவற்றின் பலஹீனத்தையும் அக்கருவிகளிலேற்பட்ட பிணிகளையும் நீக்கி, குடல் சம்பந்தமாயேற்படும் சகல வியாதிகளையும் போக்கி, உற்சாகம், நல்லபசி, இரத்த விருத்தி, தாதுபுஷ்டி, சுக்கிலவிளைவு, இழந்த ஆண்மை இவைகளையுண்டாக்கி, நீர்த்துப்போயிருக்கிற சத்துக்களைத் தடிப்பாக்கி கை, கால், இடுப்பு இவைகளின் அசதி, சோம்பல், மனக்கவலை, இவற்றையொழித்து, சுறு சுறுப்பையும், மனதிற்குச் சந்துஷ்டியையுந்தந்து, தொத்துவியாதிகளை யகற்றி, தரிதமோகம் சிராவகரோகம். சொப்பனஸ்கலிதம் மேகரோகம் மேகச்சூடு மேகவூரல் மேகத்தடிப்பு திமிர் ரணம் இவற்றை நீக்கி, தளர்ந்த, சோர்ந்து, தொவண்டு, மெலிந்த அவயவங்களைப் பலப்படுத்தி, ஸ்தம்பனசக்தியோடு சுபாவ ஸ்திதியிலாக்கி, சந்ததியற்றவர்கட்கு சந்ததியையுண்டாக்கிச் சதா ஆனந்தத்தைத்தரக்கூடியது, இதன் குணத்தை முற்றிலும் எழுதுவதென்றால் பல பக்கங்கள் விரியும், எமது நண்பர்களிற் பலர் போலி விளம்பர மருந்துகளை வாங்கி யுண்டு, தாம் கோரிய பயனையடையாது, மனவருத்தத்தோடு பன்முறையாக எம்மைத் தூண்டியதால் இவ்வருமைச் சஞ்சீவியை அரும் பிரயாசையோடு தயாரித்து உலகோபகாரத்தமாக வெளியிட்டனம். காலை மாலை ஒருகளஞ்சி விதம் உண்டு பால் நெய் மாமிஷம் முதலிய புஷ்டியான பதார்த்தங்களைப்புசித்து வரவும் பத்தியமில்லை

40-நாள் உபயோகிக்கும் டின் 1க்கு ரூ 10—0—0

20-நாள் உபயோகிக்கும் டின் 1க்கு ரூ 5—4—0

தபால் சார்ஜு பிரத்தியேகம்.

பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகட்கு தபால் செலவுடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

விலாசம்:—ஹக்கீம் தமிழ் சித்தவைத்திய, ஆயுள் வேத பாஸ்கர

முத்தமிழ், மதியமிர்தப்புலவர்.

மதியமிர்த சஞ்சீவி வைத்தியசாலை,

பேட்டை, திருநெல்வேலி. (S. INDIA.)